Registered as a News Paper

பக்கம் - 16 + II

# ஈழநாதம்

Eelanatham வெள்ளிநாதம்

விலை: 12.00

நாதம் -13 திருவள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி - 18 04-10-2002 வெள்ளிக்கிழமை ஓசை 228

உங்கள் எண்ணம் போல்
கண்கவர் தங்க நகைகளுக்கு
உத்தரவாதம் தருபவர்கள்

முத்துமாரி நகைமாடம்

78, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வன்னியில் நாச்சிக்குடாச் சந்தியில் செயற்பட்டு வந்த எமது நிறுவனம் தற்போது பெயர் மாற்றத்துடன் யாழ்ப்பாணத்தில் செயற்படுகின்றது.

(சீ-7411)





~ ஓயாத அலைகள் முதல் கைதிகள் பரிமாற்றம்வரை ~

# புலிகளின் போரியல் - அரசியல் ஆளுமை

# சர்வதேச நாடுகள் வியப்பு; பாராட்டு...

## தேசியத்தலைவரின் மதிநுட்ப நகர்வுகளுக்கு வரவேற்பு

**ஓயாத அலைகள் தொடர்போர் நடவடிக்கை மூலம் சர்வதேச போரியல் வல்லுநர்களை வியப்பின் எல்லைக்கே கொண்டு சென்ற, தமிழீழ விடுதலைப்புலிகள் தாம் மேற்கொண்ட ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை தொடர்ந்து ஏற்பட்ட அரசு-புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து இந்த எட்டு மாத காலப்பகுதிக்குள் புலிகளின் ராஜதந்திர மூலோபாயத்துடன் கூடிய அரசியல் நகர்வுகள் அவர்களின் பல்துறை ஆளுமையை உலகிற்கு வெளிப்படுத்தி நிருபித்து வருகிறதாக சர்வதேச ஊடகங்கள் கருத்து வெளியிட்டு வருகின்றன.**

கடந்த இரு தசாப்த காலமாக விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்றும், தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாத நடவடிக்கைகள் என்றும் சிறிலங்காவின் அரசுகள் பலகோடி ரூபாய்கள் செலவழித்து சர்வதேச அளவில் மேற்கொண்டு வந்த திட்டமிட்ட பொய்ப் பிரச்சாரங்கள் அனைத்தும் இந்த எட்டுமாத விடுதலைப் புலிகளின் மதி நுட்பமும், தொலைநோக்கு ராஜதந்திர ஆளுமையும் கொண்ட அரசியல் செயற்பாடுகள் மூலம் சிதைந்து போய்விட்டதாக அரசியல் நோக்கர்கள் வெளிப்படையாகவே தமது கருத்துக்களை வெளியிடத் தொடங்கியுள்ளனர்.

கடந்த டிசம்பரில் விடுதலைப்புலிகள் கடைப் பிடித்த ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து சிறி லங்காவில் புதிய ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுடன் மேற்கொண்ட -புரிந்துணர்வு உடன்படிக்கையில் தேசியத்தலைவர் கையொப்பமிட்டது முதல் கடந்த வாரத்தில் நடந்து முடிந்த கைதிகள் பரிமாற்றம் வரை ஒவ்வொரு நகர்வும் விடுதலைப் புலிகளின் பன்முக ஆளுமையுடன் கூடிய தெளிவான அரசியல் நிலைப்பாட்டை உறுதி செய்து வருவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் எனப் பட்டியலிட்ட நாடுகளும்- பட்டியலிடக் காத்திருந்த நாடுகளும் இன்று வன்னிக் காட்டுக்குச் சென்று அவர்களுடன் கைகுலுக்கி நேரடியாகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வடக்கு-கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு குறித்து கலந்துரையாடி அதற்கான நிதி உட்பட சகல உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கத்தயாராக இருப்பதாக பகிரங்கமாக உறுதியளித்து வருவதானது விடுதலைப்புலிகள் குறித்த அந்த நாடுகளின் அபிப்பிராயங்கள் மாற்றமடைந்துள்ளதை, உணர்த்துவதாக அவர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இதேவேளை இஸ்லாமியத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து அவர்களுடன் கலந்துரையாடி, சந்தேகங்களை நிவர்த்தி செய்து நம்பிக்கைகளைக் கட்டி எழுப்பிவரும் தேசியத் தலைவரின் நிதானமான பரந்த சிந்தனையின் அடிப்படையிலான வெளிப்படையான செயற்பாடுகள் சமாதானம் தொடர்பான அவரின் உறுதிப் பாட்டை சர்வதேச சமூகத்திற்கு உணர்த்தியுள்ளதாகவும் அவ் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் மீதான சர்வதேச சமூகத்தின் பார்வை மட்டுமல்ல , தென்பகுதி சிங்கள மக்களின் கருத்தும் வெகுவாக மாற்றமடைந்துவருவதாகவும் தென்பகுதி இனவாத அரசியல் வாதிகள் இதுவரைகாலமும் மேற் கொண்டுவந்த புலிகளுக்கு எதிரான பிரச்சாரம் விடுதலையான கைதிகளின் வாக்குமூலங்கள் மூலம் உடைபட்டுப் போயுள்ளதாகவும் செய்திகள் வெளிவருகின்றன

தாய்லாந்துப் பேச்சுவார்த்தையின் போது அங்கு குழுமியிருந்த நூற்றுக்கணக்கான சர்வதேச ஊடக வியலாளர்கள் இப்பேச்சுவார்த்தையின் பெறுபேறுகள் குறித்தும்- சமாதானம் - குறித்த இருதரப்பினரின் உறுதிப்பாடு குறித்தும் நம்பிக்கை தெரிவித்துள்ளதுடன் விடுதலைப்புலிகளின் மதிநுட்ப மிக்க அரசியல் ஆளுமை குறித்து வியப்பும், பாராட்டும் தெரிவித்துள்ளமையானது பேரினவாதிகளுக்கு திகைப்பையும், வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.



எமது தாயக மண்ணின்...
பக்கம் - 03



தனது வேர்களை...
பக்கம் - 05



உதிரம் உறைந்த ...
பக்கம் - 10



தேசத்தை கட்டியெழுப்பு...
பக்கம் - 13

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ். சாலை, கிளிநொச்சி. 04-10-2002

## புனர்வாழ்வு புனரமைப்பு சில எண்ணங்கள்

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான 'பிள்ளையார் சுழி' தான் தாய்லாந்து அமர்வில் போடப்பட்டுள்ளது. இந்த முதற்கட்ட அமர்வின் பின்னர் சர்வதேச நாடுகளின் பார்வை திடீரென ஒட்டுமொத்தமாக சிறிலங்காவின் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் மீது விழுந்துள்ளது.

இரு தசாப்தகால போரின் போது இவ்வளவு அழிவையும் தமிழ் மக்க ளுக்கும், அவர்களின் பாரம்பரிய வாழ் நிலத்திற்கும் ஏற்படுத்திய சிறிலங்கா அரசின் யுத்த முனைப்பிற்கு உற்சாகம் கொடுத்து ஆயுத- இராணுவ உதவிகளை வழங்கிய நாடுகளும் இதில் அடங்கும்.

தீர்வுகாண வேண்டிய பிரச்சினை ஒன்றிருக்கென்று இவ்வளவு காலத்தின் பின்னராவது இவர்கள் உணர்ந்துள்ளதை இவர்களின் சமாதானத்திற்கான ஒத்துழைப்பு வெளிப்படுத்தியுள்ளது.

பில்லியன் கணக்கில் போருக்கும் உதவி- மேலும் பல பில்லியன் கணக்கில் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வுக்கும் உதவ வேண்டிய நிலை சில சர்வதேச நாடுகளுக்கு இயல்பாகவே போய் விட்டது.

சரி, எதுவானாலும் நியாயமான- தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவுசெய்யக்கூடிய- தீர்வு ஒன்று தான் மிகப் பிரதானமான விடயமாகும். புனர்வாழ்வின் வெற்றியென்பது தீர்வின் நியாயத்தன்மையிலும் உறுதியிலும் தான் தங்கியுள்ளது.

தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை என்பது வெறுமனே புறக்கட்டுமானங்களால் உருவாக்கப்படுவதில்லை.

அது உரிமையுடன், அதுவும் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய, சுதந்திரமான- அடக்குமுறை அழுத்தங்கள் எதுவுமற்ற சமூகவியல் - வாழ்வியல், பண்பாட்டியல் கலாச்சாரவியல் கட்டுமானங்களால் உருவாக்கப்படுவதாகும். புனர்வாழ்வு என்பதன் அடித்தளமே மேற்குறிப்பிட்ட விடயங்களால் நிர்மாணிக்கப்பட வேண்டிய தொன்றா கும்.

புனரமைப்பு என்பது தேசக்கட்டுமானத்துடன் இணைந்த செயற்பாடாகும்.

போரினால் சேதமுற்ற மண்ணின் புனரமைப்பு என்பது சர்வதேச ஆதரவுடன், நிதியுதவியுடன், தொழில்நுட்ப அனுசரணையுடன் மேற்கொள்ளக் கூடிய ஒன்றுதான். அதில் இருவேறு கருத்துக் கிடையாது.

ஆனால் புனர்வாழ்வு- என்பது வாழ்வியல் உரிமைகளை ஆதாரமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். இந்த வாழ்வியல் உரிமையானது. அரசியல் உரிமையையும் உள்ளடக்கியதாகும்.

ஒரு நீதியான- தெளிவான அரசியல் தீர்வின்றி புனர்வாழ்வு என்பது முழுமையாக ஏற்படுத்த முடியாத ஒன்றாகும்.

ஆகவே- புனர்வாழ்வு- புனர மைப்பு ஆகிய இரண்டும் சமாந்தர நிலையில் ஏக காலத்தில் முன்னெடுக்க வேண்டிய அத்தியாவசியங்களாகும்.

இலங்கையின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு வேண்டிய அத்தியாவசிய உதவிகள் குறித்து ஆராய்வதற்கு சர்வதேச மாநாடு ஒன்று கூட்டப்பட உள்ளதாகவும், இதற்கு ஜப்பான் தலைமை வகிக்க உள்ளதாகவும் செய்திகள் வந்துள்ளன.

இதற்கான முடிவு சிறிலங்காவின் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட வுக்கும் அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேஜ்ற்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின் போது எடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஜப்பானிய தூதுவர் அண்மையில் வன்னிக்கு வருகை தந்து புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு ஜப்பான் நேரடியாக உதவ விருப்பம் கொண்டிருப்பது குறித்து, விடுதலைப் புலிகளுடன் பேசும் போது தெரிவித்திருந்தார்.

இதே போன்று வேறு பல நாடுகளின் தூதுவர்கள் மற்றும் பிரதிநிதிகள் அரச சார்பற்ற சர்வதேச அமைப்புக்களின் தூதுக்குழுக்கள், அனைத்தும் வடகிழக்கு பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்து போரின் தாக்கங்களை மதிப்பீடு செய்து சென்றுள்ளனர்.

அவர்கள் இங்கு மேற் கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணியின் அளவு குறித்தும் அவசியம் குறித்தும் நன்கறிவர். எனவே இதற்கென நிதியை வழங்க- உதவிகளை வழங்க முன்வரும் சர்வதேச சமூகம் அது சேரவேண்டிய இடத்தை சேர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றதா என்பதையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

ஏற்கனவே வேறு சில நாடுகளில் இவ்வாறு போரினால் பாதிக்கப்பட்ட மக்களினதும் மண்ணினதும் புனர்வாழ்வு- புனரமைப்புக்கென வழங்கப்பட்ட நிதிகள் உரியவர்களுக்கு எந்த வகையிலும் உதவாமல் போன வரலாறுகள் உண்டு...

அது இங்கு தொடரக்கூடாது என்பதே எமது விருப்பம்.

~ புதிய அரசின் மீது ~

# தமிழ் மக்கள் மேலும் நம்பிக்கைகொள்ள கைதிகளின் விடுதலை வழிசமைக்கும்

~அரசியல்துறையின் அறிக்கையில் தெரிவிப்பு~

தற்போது ஏற்பட்டிருக்கும் சமாதான சூழலில் தமிழ் மக்கள் மேலும் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் வைப்பதற்கு தமிழ் இளைஞர், யுவதிகளின் உடனடி விடுதலையானது வழிசமைக்கும் என்று நம்புகின்றோம் என தென்னிலங்கை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர். அவ்வறிக்கையின் முழு விபரமும் பின்வருமாறு;

இலங்கைத்தீவிலே யுத்த நிறுத்தம் காரணமாக போர் தணிந்து ஒரு அமைதிச் சூழல் ஏற்பட்டு அனைத்து மக்களும் ஒரு இயல்பு வாழ்க்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற இக்காலப் பகுதியில் தென்னிலங்கைச் சிறைகளிலே பல நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் எதுவித விசாரணைகளுமின்றி பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் போன்ற கடுமையான அடக்குமுறைச் சட்ட விதிகளின் கீழ் நீண்டகாலமாக சிறைவைக்கப்பட்டிருப்பது தொடர்பாக நாம் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் காலப்பகுதிகளிலும், எம்மிடம் தடுப்புக்காவலில் இருக்கின்ற யுத்தக் கைதிகள் காலத்திற்குக் காலம் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களிலும் தென்னிலங்கைச் சிறைகளிலே வாடுகின்ற அப்பாவித் தமிழ் இளைஞர், யுவதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தி வந்துள்ளோம்.

தென்னிலங்கைச் சிறைகளிலே போதிய அடிப்படை வசதிகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற இவ்விளைஞர் யுவதிகள், பல தடவைகள் அகிம்சை வழியிலே சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டங்களை நடாத்திய வேளைகளிலே அவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என்ற வாக்குறுதி பல்வேறு அமைச்சர்களினாலும் சிறிலங்கா அரச தரப்பினராலும் காலத்திற்குக் காலம் வழங்கப்பட்ட போதிலும் இவ்வாறான வாக்குறுதிகள் எதுவும் அவர்களுக்கு விடுதலையை பெற்றுக்கொடுக்கவில்லை.

தற்போது யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின் அமைதியான சூழல் கடந்த எட்டு மாதகாலமாக ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், தாம் இன்னமும் விடுவிக்கப்படாது இருப்பது குறித்து தமிழ் கைதிகள் ஏமாற்றமும் வேதனையும் அடைந்துள்ளார்கள். இதன்காரணமாக தென்னிலங்கை சிறைகளிலே வாடுகின்ற தமிழ்க் இளைஞர்கள், யுவதிகள் தம்மை உடனடியாக விடுவிக்கக்கோரி கடந்த 1ம்திகதியில் இருந்து சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தினை நடத்தி வருகின்றார்கள்.

பல வருடங்களாக தொடர்ச்சியாக சிறைவைக்கப் பட்டிருப்பதன் காரணமாக இவ்விளைஞர், யுவதிகள் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பாதிப்படைந்துள்ளதுடன் தமது எதிர்காலம் குறித்து எதுவித நம்பிக்கையுமற்றவர்களாக விளங்குகிறார்கள். இந்நிலை தொடர்ந்து நீடித்தால் அவர்களின் எதிர்கால வாழ்வு சூனியமாகிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

தென்னிலங்கைச் சிறைகளில் வாடுகின்ற இந்த தமிழ் இளைஞர்கள், யுவதிகளின் நீதியான, நியாயமான உண்ணாவிரதப் போராட்டத்திற்கு மதிப்பளித்து ரணில் விக்கிரமசிங்கவின் புதிய அரசானது அவர்களின் விடுதலையை விரைவுபடுத்தத் தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வேண்டிக் கொள்கிறோம். தற்போது ஏற்பட்டிருக்கும் இச் சமாதான சூழலில் தமிழ் மக்கள் மேலும் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் வைப்பதற்கு தமிழ் இளைஞர் யுவதிகளின் உடனடி விடுதலையானது வழிசமைக்கும் என்று நம்புகிறோம்.

தென்னிலங்கைச் சிறைகளிலே நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் தமிழ் இளைஞர், யுவதிகள் தமது விடுதலையை வேண்டி தற்போது மேற்கொண்டு வரும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, மனித உரிமை அமைப்புக்கள், வெகுஜன அமைப்புக்கள் போன்ற அனைத்து அமைப்புக்களும் ஒன்றிணைந்து முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி, அவர்களின் விரைவான விடுதலைக்குத் தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

# மூன்றாவது நாளாகவும் களுத்துறையில் கைதிகளின் உண்ணாவிரதம் தொடர்கிறது

களுத்துறைச்சிறையில் இருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்து வருகிறது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் 153 கைதிகள் ஈடுபட்டிருப்பதோடு, அவர்களில் சிலர் சிறைச்சாலைகளின் கூரைகளின் மேல் ஏறி இருந்து உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

அமைச்சர் மிலிந்த மொறகொடவோடு சந்திப் பொன்றை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் அல்லது,அமைச்சரவை அந்தஸ்த்து இருக்கின்ற அமைச்சர் ஒருவர் தமது விடுதலை தொடர்பாக உறுதி அளிக்க வேண்டுமென கைதிகள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

இவர்களது விடுதலை தொடர்பாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கும் சட்டமா அதிபர் கமல சபேசனுக்குமிடையில் பேச்சுக்கள் இடம்பெற்ற போதிலும் அது தொடர்பான செய்திகள் இது வரை வெளியிடப்படவில்லை.

இதேவேளை, வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 பெண் கைதிகளும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

அத்தோடு மட்டக்களப்பு சிறைச் சாலையில், தடுத்துவைக்கப் பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளும் இன்று முதல் நீராகாரம் அருந்தாது சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்திருக்கின்றார்கள்.

## கடற்படைச்சிப்பாய் ஒருவர் யாழில் புலிகளிடம் சரண்!

(யாழ்ப்பாணம்)

கடற்படைசிப்பாய் ஒருவர் நேற்று யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்துள்ளார்.

நேற்று மாலை 4.00 மணியளவில் விடுதலைப் புலிகளிடம் ஜெயத்குமன்குமார (வயது 30) என்ற சிப்பாயே சரணடைந்துள்ளார்.

இவர் தன்னைத் தனது சொந்த இடமாகிய ஹபரணைக்கு அனுப்பி வைக்குமாறு விடுதலைப் புலிகளிடம் கோரியுள்ளார்.

## பன்னிரு வேங்கைகளின் நினைவு நாளை சிறப்புற நடத்த ஏற்பாடு

லெப். கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகளின் 15 ஆம் ஆண்டு நினைவு நாள் நாளை தமிழீழமெங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

காலை 9.00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டு கருத்தரங்குகள், சிரமதானப் பணிகள் என்பன இடம் பெறவுள்ளன.

மேலும் மாலை பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

சிறந்த மனிதன் என்பவன் சொற்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவான். நடத்தையில் உறுதியாக இருப்பான்- -கன்பூசியஸ்



# எமது தாயக மண்ணின் தனித்துவ இறைமையை உலகிற்கு உணர்த்திய கைதிகள் பரிமாற்றம்













கடந்தவாரம் ஊடகங்களின் கவனத்தைக் கவர்ந்துகொண்ட நிகழ்வொன்று புளியங்குளம் தடைமுகாமின் சூனியப் பிரதேசத்தில் நடந்தேறியது. சிறிலங்காப் பாதுகாப்பமைச்சின் செயலாளர் திரு ஒஸ்ரின். பெர்னாண்டோ இதனை சமாதானத்துக்கான தேடலில் நிகழ்ந்தேறிய முக்கியமானதொரு மைல்கல் நிகழ்ச்சி என்றார். விடுதலைப் புலிகளின் வசமிருந்த கடற் படை கொமடோர் அஜித் போயாகொட உட்பட ஏழு சிறிலங்காப் படையினரும் அவர்க ளுக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நீண்ட மேசையில் காத்திருக்க எதிர்ப்புறத்தே கெனடி உட்பட பதினொரு விடுதலைப் புலிகள் விடுதலைக்கான சம்பிரதாய நடவடிக்கைகளுக்காக காத்திருந் தனர்.

இவர்களுக்காக , பெற்றோரும், உறவினரும் விழிநிறைந்த கண்ணீரைச் சுமந்தபடி காத்திருந்தனர். பேசப்படா வார்த்தைகளோடு, இதயத்தின் கொந்தளிப்பைக் கண்ணீரில் கரைத்தபடி சம்பிரதாயச் சடங்குகளின் முடிவுக்காகக் காத்திருந்தனர். நம்பிக்கையீனங்களோடு கழிந்துபோன நீண்ட காலங்களை விடவும், நம்பிக்கையோடு இருந்த இந்தக் கணங்கள் அவர்களுக்கு சுமை நிறைந்ததாகத் தோன்றியிருக்கக் கூடுமோ என்னவோ?

நிகழ்வுக்கான மேடை அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது. சிவப்புத்தொப்பியும் வெள்ளை இடுப்புப் பட்டியுமாக சிறிலங்கா இராணுவ காவல்ப் படையினரும், நீலச் சீருடையுடன் தமிழீழ காவல்துறையினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். அதுமட்டுமல்ல பாதுகாப்பமைச்சின் செயலாளர், சிறிலங்கா இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பலகல்ல, விடுதலைப் புலிகளின் வட பகுதிக்கான கட்டளைத்தளபதி கேணல் தீபன், கேணல் பானு, சர்வதேசச் செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதி மார்கஸ் புரூட்மன், வவுனியா அரச அதிபர் கணேஸ் ஆகியோர் முதன்நிரையில் அமர்ந்திருந்தனர். திரு.கணேஸ் அவர்களே இந்நிகழ்வுக்கான தலைமையுரையை மும்மொழிகளிலும் நிகழ்த்தினார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், விடுதலைப்புலிகளின் தளபதிகள், சிறிலங்கா இராணுவத் தளபதி ஆகியோர் அருகருகே அமர்ந்திருந்த காட்சியானது இந்நிகழ்வின் இராணுவ, அரசியல் பரிமாண முக்கியத்துவத்தை உலகுக்கு எடுத்துரைக்கும் முக்கிய செய்தியாக மாறியிருந்தது. ஊடகவியலாளர்களின் ஆக்கிரமிப்புக்குள் அமிழ்ந்து போயிருந்த இந்த நிகழ்ச்சி 'ரூபாவாகினி' தொலைக்காட்சியூடே நேரடியாக அஞ்சல் செய்யப்பட்டது. அரசினதும், விடுதலைப் புலிகளினதும் செய்திகள் மும்மொழிகளிலும் பரிமாறப்பட்டத்.

அரசும் புலிகளதும் சம அந்தஸ்துடன் , பங்காளிகளாக நின்று நிறைவேற்றி வைத்த இந்த கைதிகளின் பரிமாற்ற நிகழ்வு மேடையிலும் அவநம்பிக்கை இழையோடிய குரல்கள் ஒலித்தது. இன்னும் விடுதலையடையாது தென்பகுதிச் சிறைகளில்வாடும் தமிழ் இளைஞர் யுவதிகளின் விடுதலையில் இனிமேல் எவரும் அக்கறைகாட்டமாட்டார்கள் என்பதும், புலிகளிடம் இன்னும் படை வீரர்கள் காவலில் உள்ளார்கள் என காணாமல் போன படைவீரர்களின் உறவினர்கள் நினைத்துக் கொண்டிருப்பதுமான சம்பவங்களே அவையாகும். புலிகள் தம்மிடமிருந்த போர்க் கைதிகளின் இறுதித் தொகுதியினர் தான் விடுவிக்கப்பட்டு விட்டதெனத் தெளிவாகத் தெரிவித்துவிட்டனர். நிபந்தனைகள் எதுவுமில்லாமலே மனிதாபிமான அடிப்படையில் போர்க்கைதிகள் பலர் காலத்திற்குக் காலம் நல்லெண்ண வெளிப்பாடாக விடுவிக்கப்பட்டுவிட்டனர். வெறும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சித்திரவதை மூலம் அவர்களிடம் பெற்றுக் கொள்ள ப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலம் மட்டுமே அடைக்கப் பட்டுள்ள இளைஞர் யுவதிகள் நிபந்தனையின்றி உடனடியாக விடுவிக்கப்படுவது மட்டுமல்ல, மனித உரிமை சாசனத்தின் விதிமுறைகளை அவமதிக்கும், தமிழ் மக்களை இந்த நாட்டில் இரண்டாம்தர பிரஜைகளாக நடத்துவதற்கு வழிசமைத்ததுமான 'பயங் கரவாத தடைச்சட்டத்தை' இதன் மூலம் படையினருக்கு வழங்கப்பட்டிருக்கும் தமிழ் மக்கள் மீதான அதிகாரத்தை நீக்குவதன் மூலமே அரசு உண்மையான சமாதான முன்னெடுப்பை ஏற்படுத்த முடியும்.

போர்க் கைதிகளின் பரிமாற்றம் என்பது முன்பும் பல முறை நிகழ்ந்துள்ளது. முதலாம் கட்ட ஈழப்போரில் 19-12-1986இல் நிகழ்ந்த கைதிகளின் பரிமாற்றமே முதலாவது கைதிகளின் பரிமாற்றமாக இருந்தது. அடம்பனில் புலிகளால் கைது செய்யப்பட்ட அஜித் சந்திரசிறி, பண்டார ஆகிய

**அ.அன்ரன் அன்பழகன்**

இரு இராணுவத்தினருக்கும் பதிலாக பலாலிமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த செல்வகுமார், பேபியன்ஸ் காமினி அனஸ்டிஷ் ஆகிய இருவரும் பரிமாறிக் கொள்ளப்பட்டனர். அன்றைய கைதிப் பரிமாற்றத்தில் விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்டத்தளபதி கிட்டு சிறிலங்கா இராணுவத்தின் கேணல் ஆனந்த விஜயசேகர, கப்டன் கொத்தலாவல ஆகியோர் கலந்துகொண்டனர். இப்பரிமாற்றம் யாழ்ப்பாணக் கோட்டைக்கு வெளியேயுள்ள சூனியப்பிரதேசத்தில் நிகழ்ந்தது பலருக்கு இன்னும் நினைவிருக்கக் கூடும். செல்வகுமார் என்பவர், புலிகளின் சிரேஸ்ட உறுப்பினர் அருணா என்பதை விடுவிக்கப்படும் வரை படையினர் அறியாதிருந்தனர் என்பது அப்போது மிக சுவாரசியமான விடயமாகும்.

அப்போதைய கைதிப்பரிமாற்றத்தை பதவியிலிருந்த ஜே.ஆர் அரசு தமக்கு நேர்ந்த அவமானமாக , கௌரவக் குறைவாகவே கருதியது. விஜயகுமாரதுங்க குழுவினரின் முயற்சியாலும், தென்னிலங்கையில் அரசுக்கு எழுந்த நெருக்கடியாலுமே அரசு இக் கைதிப் பரிமாற்றத்திற்கு சம்மதித்தது. அத்தோடு ஊடகங்கள் ஊடே இச்செய்தி வெளியுலகிற்குத் தெரிவதை தடுப்பதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டது. " இரு இறைமையுள்ள நாடுகளிடையேதான் கைதிகள் பரிமாற்றம் இடம்பெற முடியும்" எனக் கூறிய அப்போதைய தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித்அத்துலத் முதலி பலாலி படைமுகாமில் இருக்கும்போதே யாழ்ப்பாணத்தில் கைதிகள் பரிமாற்றம் நிகழ்ந்தேறியது.

நீண்ட காலமாக 'லங்கா புவத்தின்' செய்திகளைக் கேட்கும், இனவெறிக்கும் சிங்கள ஏடுகளின் செய்திகளாலும் சிருஷ்டிக்கப்பட்டிருந்த தமிழ்மக்கள் பற்றியும், புலிகள் பற்றியுமான ஒரு மாயப்படிமம் சிங்கள மக்களிடையே அப்போது தான் உடைய ஆரம்பித்தது.

தமிழீழ இராணுவ அரசியல் பரிமாணம் விரிவடைந்திருந்த இக்காலகட்டத்தில் சமகௌரவத்துடனான கைதிப்பரிமாற்றம் சர்வதேச அரங்கின் உன்னிப்பான கவனிப்புடன் நிகழ்ந்தேறியுள்ளது. இதனை எமது போராட்டத்தின் நுண்நோக்கி குறுக்குவெட்டுத்தரிசிப்பு (Microscopi cross section) நிகழ்வு எனக் கூறுவதும் பொருத்தமுடைய தாகும்.

அண்மையில் திருகோணமலையில் 'வெல்கம் விகர' பிரதேசத்தில் கட்டிட வேலைக்காக மணல் அள்ளுவதெற்கென அத்துமீறி நுழைந்த ஏழு இராணுவத்தினரை புலிகள் கைது செய்துள்ளனர். இருவாரத்திற்கு முன் காட்டுப் பகுதியில் வைத்து கொட்டில்கள் அமைப்பதற்கான தடிகளைச் சேகரித்துக்கொண்டிருந்த புலி உறுப்பினர்களை அவர்கள் புலிகளின் உறுப்பினர்கள் எனத் தெரிந்தும் பலவந்தமாக கைது செய்த கந்தளாய்பொலிசார் அவர்களை நீதிமன்று மூலம் சிறையில் அடைத்துள்ளனர். இச்சம்பவமானது புலிகளின் சம அந்தஸ்த்தையும், தமிழ் மக்களின் உணர்வுகளையும் பாதிக்கும் விடயமாகும் என்பதை கணக்கில் எடுக்கத்தவறும் பட்சத்தில் சமாதானப் பயணத்தின் இலக்கை அடைவதில் சங்கடங்கள் தோன்றும். புலிகளின் இராணுவக் கட்டமைப்பை அங்கீகரிப்பது மட்டுமல்ல அவர்களின் அரசு நிர்மாணக்கட்ட அமைப்பையும் சிங்கள அரசு அங்கீகரித்தல் என்பதே ஆரோக்கியமான பேச்சு வார்த்தைச் சூழலைத் தோற்றுவிக்கும்.

◇◇◇◇◇

புகழின் போர்வையை அணிந்துகொள்ள வேண்டும் என்று மடமைதான் அதிகம் விரும்புகின்றது- -பைரன் பிரபு

# நறுக்கென




**பொ**துசன ஐக்கிய முன்னணிக்கும் ஜே. வி.பிக்குமிடையிலான புரிந்துணர் வில்விரிசல் ஏற்படத் தொடங்கியுள்ளது போல் தெரிகிறது.

## விரிசல் காணும் உறவு

ஜே.வி.பி.யின் அபிலாசைகளுக்கேற்ப சந்திரிகா தன் நிறை வேற்று அதிகார வலுவைப்பயன்படுத்த தயக்கம் அல்லது தாமதம் செய்வது அவர்களுக்கு அதிருப்தியை அளித்துள்ளதாம்.

அநுராவை எதிர்க்கட்சித் தலைவராக்கி மகிந்தவை ஓரங்கட்டும் ஜே.வி.பி.யின் தாகத்தையும் சந்திரிகா உடனடியாக செய்யத் தயாரில்லை.

இது சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சிதைத்துவிடும் என்றே சந்திரிகா பயப்பிடுகிறார்.

விமல் வீரவன்சவின் சொத்துக்களை ஆராயும் நடவடிக்கையும், ஜே.வி.பியின் சினத்தை அதிகரித்துள்ளது. ஏற்கனவே முன்னாள் அமைச்சரும் சந்திரிகாவுக்கும் ஜே.வி.பி க்கும் இடையான இணைப்புப் பாலமாக இருக்கும்மங்கள சமரவீரவுக்கும், விமல்வீரவன்ச வுக்கும்இடையேயான கூட்டு வங்கி நடைமுறைக்கணக்கு ஒன்று பற்றிய சிக்கல் அவரைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஐ.தே முன்னணி அரசு பொ.ஐ.முன்னணி முக்கியஸ்தர்களையும்,ஜே.வி.பி பிரமுகர் களையும் அம்பலப்படுத்தும் நடவடிக்கைகளை மிகவும் தீர்க்கமாகவும் கட்டம் கட் டமாகவும் மேற்கொண்டு வருவது தமது எதிர்கால அரசியலில் மக்களின் செல்வாக்கை வெகுவாகப்பாதிக்கும் என ஜே.வி.பி அஞ்சுகிறது

இந்தநிலையில் இந்தஅரசை நீக்க தனது நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என சனாதிபதிக்கு அவர்கள் அழுத்தம் கொடுத்து வருகிறார்கள்.

இதன் வெளிப்பாடாகவே பிரதமருக்கு தான் ஏற்கனவே வழங்கியுள்ள அதிகாரங்களை மீண்டும் பறிக்கப்போவதென சந்திரிகா எச்சரித்திருப்பதைக் கருத முடியும்.

❖ ❖ ❖

**ப**ல நாட்களாக எதிர்பார்த்த அந்த வரலாற்று நிகழ்வு நடந்து முடிந்து விட்டது. கைதிகள் பரிமாற்றம் பற்றித் தான் சொல்கிறேன்.




## இரு கைதிகளின் வாக்கு மூலம்

சிறையில் இருந்து விடுதலையாதல் என்பது எவருக்குமே மகிழ்ச்சியைத் தரும் விடயம் தான் யுத்த கால குற்ற வாளிகளாக கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவிப்போரின் விடுதலை என்பது ஒரு மறுபிறப்பென்றே கூறலாம்.

எங்களின் அனுபவங்கள் வேறுபட்டவை, மறக்க முடியாதவை, வரலாற்றுடன் தொடர்பு பட்டவை.

இம்முறை நடந்து முடிந்த கைதிகளின் விடுதலை என்பது ஒரு கைதிகள் பரிமாற்றமாகவே நடந்துள்ளமை அதற்கொரு மாறுபட்ட பரிமாணத்தை வழங் கியுள்ளது. ஒவ்வொருபோர்க் கைதியும் விடுதலைபற்றிய நம்பிக்கையற்றவனாகவே இருப்பான் என்பது பொதுவான ஒரு கருத்து.

ஒவ்வொரு போர்க் கைதியும் எத்தனையோ கனவுகளை, கற்பனைகளை மட்டுமே மனதில் நிறைத்துக் கொண்டு வாழும் மனிதர்களாகவே இருப்பர் இரு போர் கைதிகளின் அனுபவம் ஒருபோதும் ஒரே மாதிரி இருப்பதில்லை. விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட கப்டன் போயாகொடவின் அனுபவம் இவ்வாறு அமைந்துள்ளது.

விடுதலைப்புலிகள் எம்மை கைது செய்த நாளிலிருந்து இன்று வரையும் எமக்கு உடல் ரீதியான பாதிப்புகள் எதுவும் நிகழா வண்ணம் பார்த்துக்கொண்டனர் அவர்கள் எம்மை தடுத்து வைத்திருந்தாலும் மனிதாபிமானத்துடன் எமக்கு வேண்டிய தையெல்லாம் நல்ல முறையில் செய்து தந்தார்கள்.

சரிசிறிலங்கா அரசால் விடுவிக்கப்பட்ட போராளி கெனடியின் அனுபவம் இதோ.

'நான் கைது செய்யப்பட்டதும் ஒன்பது மாதங்கள் கண்கள் கட்டப்பட்டு கைகள் பின்புறமாக விலங்கிடப்பட்டு- கால்களுக்கும் விலங்கு பூட்டப்பட்டு சிறிய கூட்டுக்குள் சங்கிலியால் கட்டிப் போட்டார்கள். உடல் முழுக்க மின்சாரம் பாய்ச்சுவார்கள் மொட்டையடிப்பார்கள் மிளகாய்த் தூளை கரைத்து ஊத்துவார்கள்'... பார்த்தீர்களா...

சர்வதேச சமூகத்தின் பார்வைக்கு இது சமர்ப்பணம்.

❖ ❖ ❖




**க**டந்த ஒரு வாரகாலமாக சமாதானப் பேச்சுவார்த்தை எதிர்ப்புத் தீவிரவாதிகளின் பேச்சு சற்று மந்தித்து போயுள்ளதுபோல் தெரிகிறது.

## காலக்கெடுக்கள்

போதாக்குறைக்கு எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷவும், இலங்கையில் சமாதானத்திற்கான பலமான அத்திவாரம் இடப்பட்டுள்ளது என்று பேசியிருப்பது அவர்களுக்கு எதனையும் கூறமுடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இருப்பினும் மகிந்த சற்று நிதானித்து சிந்திக்கிறார் போல் உள்ளது. 'சமாதானம் முத லாம்,இரண்டாம், கட்டப் பேச்சுவார்த்தையிலோ... ஓரிருமாதங்களிலோ முழுமையாக ஏற்பட்டுவிடாது.... அதனை எதிர்பார்க்கவும் கூடாது. சிலவேளை உறுதியான தீர்வு ஏற்பட ஆறு,ஏழு வருடங்கள் கூட ஆகலாம்....' என அவர் சொல்லியுள்ளது பிரச்சினையின் ஆழத்தை சிக்கலை அவர் நன்கு புரிந்துகொண்டுள்ளார் என்பதை தெளிவாகக் காட்டுவது போன்றே அமைந்துள்ளது.

மெல்ல மெல்ல பொ.ஐ.முன்னணியின்... குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப்பொறுப்பை தனதாக்கிக்கொள்ளும் வகையில் நிதானமாக தன்னை நிலைநிறுத்த அவர் முயல்வதாகவே தெரிகிறது என்கிறார் கொழும்புச் செய்தியாளர் ஒருவர்.

இதனைவிட அண்மையில் அவர் சமய வைபவமொன்றில் பேசும் போது....'பௌத்தம்போரை நிராகரிக்கிறது.... யுத்த மூலம்சமாதானம் என்று கூறுவது புத்தரத்தை அவமதிப்பதாகும்' என்று கூறியுள்ளார்....

இது யாரையோ மறைமுகமாக சாடுவது போலுள்ளதல்லவா! அது சரி கதிர்காமர் இரண்டு வருடத்தில் சமாதானம் ஏற்பட்டுவிடவேண்டும் என்று காலக்கெடு விதித்ததற்கு மகிந்தவே... அவரது கட்சிக்காரரே பதில் கூறிவிட்டாரே இதற்கு கதிர்காமர் என்ன சொல்லப்போகிறார்

❖ ❖ ❖

**சி**றிலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையின் முதற்கட்ட அமர்வுகள் ஏற்படுத்தியுள்ள திருப்தியின்




## பேச்சுவார்த்தையும் பேசப்படும் வார்த்தைகளும்

அலைகளும் பெறுபேறுகள் குறித்த சர்வதேச சமூகத்தின் பாராட்டும் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு பெரும் உற்சா கத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளமை அரசின் பிரதிநிதிகளின், அமைச்சர்கள் மற்றும் பிரதிய மைச்சர்களின் பேச்சுக்களின் நிதானவார்த்தைகள் மூலம் தெளிவாக தெரிய வந்துள்ளது.

பேச்சுவார்த்தைகள் கட்டம்கட்டமாக நிதானமாக முரண்பாடுகளுக்கு அப்பால் உடன்பாடுகள் எட்டும் வரை தொடர்ந்து நடக்கும் என்கிறார் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ். இவர் அரச தூதுக்குழுவில் ஒருவராக முக்கிய நபராக பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர்.

'எல்லாவற்றிலும் தலையிட்டு உளறிக்கொட்டி குழப்பத்தை ஏற்படுத்துவார் என்ற பெயரை சந்திரிகா ஆட்சிக் கால அமைச்சராக இருந்த போது பெற்றிருந்த, அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கா கூட சமாதானத்தை நோக்கிய பயணம் கம்பியின் மேல் நடப்பதை போன்றது என நிதானவார்த்தைகளை கூறியிருக்கிறார்.

எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கூட 'சமாதானத்திற்கான உறுதியான அடித்தளம் ஒன்று இடப் பட்டுள்ளது' என ஆக்கப்பூர்வமான கருத்தொன்றை முதல் தடவையாக கூறியுள்ளார் ஆனால் ஜே.வி.பி.யி னரும் அவர்களின் அரசியல் ஆலோசனைப்படி இயங்கும் அநுரா பண்டாரநாயக்கவும் தான் இவற் றினால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து மீள முடியாதவர்களாக தங்களின் பேச்சுக்கள், எதிர்ப்புகள், மிரட்டல்கள் எதுவுமே எவ்விதமான தாக்கத் தையும் ஏற்படுத்தாத நிலையில் அடுத்ததாக என்ன செய்வது என்று யோசித்துக் குழம்பியவர்க ளாக உள்ளனர்.

'அரசு, சனாதிபதியை கலந்தாலோசிக்காமல் அவரது அறிவுரையை புறந்தள்ளி பேச்சுவார்த்தைகளை தொடர்கின்றமையானது அவரை அவமதிக்கும் செயலாகும்... சனாதிபதியின் சம்மதமின்றி எந்த தீர்வையும் எவராலும் அமுல் செய்துவிட முடியாது என்று அநுரா விரக்தியில் புலம்பியுள்ளார்.

இதேவேளை ஜே.வி.பி.யினரோ, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களை நோர்வே வரவேற்பாளர் 'மேன்மை தங்கிய' என்ற அடைமொழியுடன் விழித்து அவரை சனாதிபதிக்கு இணையாக ஒப்பீடு செய்தது- சனாதிபதியை அவமதித்ததற்கு சமன் என கூறி சந்திரிக்காவுக்கு எரிச்சலை ஊட்டி வருகின்றனர்.

பாவம் சனாதிபதி தான் எந்த முடிவும் எடுக்க முடியாதவராக குழம்பியும் புலம்பியும் வருகிறார்... வரலாறு அவரை பார்த்து சிரிக்கிறது.

❖ ❖ ❖



## மதவடி மயிலர்

செய்தி: இனப்பிரச்சினைக்கு அடுத்த வருடத்திற்குள் நிரந்தரத்தீர்வு காண வேண்டும்-லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவிப்பு

மயிலா: இப்படித்தான் முந்தி உங்கடை பிரதிப்பாதுகாப்பு அமைச்சர்...ஜெனரல் அநுருத்த ரத்வத்தையும் யுத்தத்தினை ஆறுமாதத்தில் முடிப்பேன்... மூன்று மாதத்தில் முடிப்பேன் எண்டெல்லாம் கால எல்லை குறித்தவர்... உங்களுக்கு தெரியும்தானே கதிர்காமண்ணே... கால எல்லை மட்டுமல்ல அவற்றை பதவிக்காலமும் காலாவதியானதுதான் கண்ட மிச்சம்.. இருவது வரிச சண்டைக்கு இரண்டு வருசத்திலை தீர்வுகாண காலக்கெடு விதிக்கிறதை பார்க்க வேடிக்கையாக இருக்கு... முதல்லை உங்கடை சனாதிபதி அம்மாவுக்கு சொல்லி கன்னாபின்னா எண்டு கதைக்கிறதை நிப்பாட்ட ஆலோசனை சொல்லுங்கோ..... இந்த அலட்டல்தான் சமாதானத்தை தூரத்துரத்துது பாருங்கோ.....

செய்தி: சமாதானத்தைக் குழப்ப தீய சக்திகள் முயற்சி என றவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

மயிலர்: தீவிரவாத சக்திகள் முஸ்லிம்களின் உணர்வுகளை உசுப்பிவிட்டு இலாபம் பெறுவது சுலபம் என நினைக்கிறார்கள் என்பது வெளிப்டையாகத் தெரியும்போது முஸ்லிம் மக்கள் அந்தமரணக்குழிக்குள் போய் விழாமல் காக்கவேண்டியது ஹக்கீம் அவர்களின் பொறுப்பாக இருக்கும்... ஊர்இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்தான்... இரண்டு படுத்த நினைக்கிற ஆட்களை இனங்கண்டு பகிரங்கப்படுத்துங்கோ. அதுதான் இப்பதேவை பாருங்கோ.

செய்தி: சமாதானத்திற்கு எதிராகச் செயற்படும் இராணுவத்தினருக்கு ரணில் எச்சரிக்கை.

மயிலர்: கடுமையாத்தான் ரணில் இருக்கிறார் பாருங்கோ. சமாதானத்திற்கு எதிராகச் செயற்படுவோர் பதவிநீக்கப்படுவர் என அவர் எச்சரித்துள்ளது பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருக்கும்.... அதுவல்ல புதினம், வேண்டுமானால் வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு சமாதானத்தை எதிர்காலம் எண்டு சொல்லியிருப்பதுதான்.. சண்டைபிடிக்க வேலைக்கு வந்தவரை வேலையை விட்டிட்டு பிறகு சண்டை பிடி என்றால் எப்படி?

செய்தி: பேச்சுக்கள் வெற்றி பெறுவதற்கான சமிக்ஞைகள் தெரிகின்றன. என்கிறார் அஸ்கிரிய பீடாதிபதி....

மயிலர்: இதையும் சொல்லுகிறார் புலிகள்மீது தடை நீக்கக்கூடாது என்றும் சொல்லுகிறார்..... தனிச்சிங்கள அரசு வேண்டும் அதற்காகப் போராடவேண்டும் என்றும் உறுமுகிறார். உண்மையில் இவர் என்னதான் நினைக்கிறார் எண்டு விளங்கேல்லை... ஆனால் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ஏதோதோ சொல்லிக்கொண்டிருக்கிறார். எண்டாலும் ரணிலின் சமாதர்ன முயற்சிக்கு மக்கள் ஆதரவு பூரணமாக இருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்... ஞானம் பிறக்கத்தொடங்கியிருக்கு....

செய்தி: சிறிலங்கா முப்படையினருக்கு மாற்றுத் தொழில்களில் பயிற்சி என்கிறார் ஒஸ்ரின் பெர்ணான்டோ...

மயிலர்: இது ஒரு திறமான விடயம் பாருங்கோ... இப்படிச் செய்யாட்டி... கனபேர் பாதாள உலகத் தொழில்லை இறங்கிவிடும் ஆபத்தும் உண்டு.... சமாதானத்திற்கு உதவும் சர்வதேசத்திடம் இதற்கும் உதவி கேட்கப் போவதாகவும் ஒஸ்ரின் கூறியிருப்பதும் நல்லதுதான்.... முந்தி சண்டைபிடிக்க பயிற்சி அளித்து ஆயுதமும் வழங்கிய நாடுகளே சமாதானத்தின் போது சண்டையற்ற படையினருக்கும் தொழிற்பயிற்சியும் வழங்க வேண்டுமென கோருவதும்நியாயம்தான்பாருங்கோ.

தவறுகளை ஒப்புக்கொள்ளும் தைரியமும் அதை திருத்திக்கொள்ளும்பலமும் தான் உண்மையான வெற்றிக்கு வழி. -லெனின்

# தனது வேர்களைத்தானே விற்கும் யாழ்ப்பாணம்

நிலாந்தன்

(01)

சில மாதங்களுக்கு முன்பு வன்னியில் உள்ள ஒரு சர்வதேச தொண்டர் நிறுவனத்தின் வெளிநாட்டுப்பிரதிநிதிகள் வசிக்கும் வீடொன்றிற்கு போயிருந்தேன்.

அந்த வீட்டில் ஆங்காங்கே செம்பு பழைய பித்தளைப் பாத்திரங்கள், உபகரணங்கள் குறிப்பாக ஆலயங்களில் பாவிக்கப்படும் உலோகப்பொருட்கள் போன்றன



சேர்த்து வைக்கப்பட்டிருந்தன.

அது அந்தவீட்டில் வசிக்கும் ஆங்கிலேயர்விரும்பிச் சேகரித்தவை என்று கூறப்பட்டது.

அந்த ஆங்கிலேயர் எமது கீழைத்தேய மரபின் மீது கொண்ட விருப்பார்வத்தாலோ அல்லது தாம் இங்கே வேலை செய்த காலத்தின் சிறப்பு அடையாளமாகவோ அவற்றைச் சேகரித்துக்கொண்டு சென்றிருக்கலாம்.

ஆனால் அவர் மேற்படி பொருட்களை அதிகம் சிரமப்படாமலேயே மிகவும் மலிவாகப் பெற்றிருக்கிறார் என்று தெரிந்தது. அத்தோடு அவர் அவற்றை எதுவித எதிர்ப்புமின்றி வன்னிக்கு வெளியே கொண்டுபோகக்கூடிய நிலைமை இங்கிருப்பதும் தெரிந்தது

இது ஒரு ஆங்கிலேயர் தமது தனிப்பட்ட ஈடுபாட்டின் பேரால் கொண்டுபோனது. ஆனல் யாழ்ப்பாணத்தில் இது ஒரு சமாதானகால வியாபாரமாக நடந்துவருகிறது என்று அங்கிருந்து வரும் நண்பர்கள் கூறுகிறார்கள்.

இது தொடர்பாக யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் சிலர் பெருமுயற்சி எடுத்து ஒரு பிரச்சார இயக்கத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

இதில் விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகமும் இணைந்து சில திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக அறியமுடிகிறது.

அத்தோடு இது விசயத்தில் பத்திரிகைகள் மற்றும் பொது நிறுவனங்களின் ஆதரவைத் திரட்டுவதில் மேற்படி ஆர்வலர்கள் குறிப்பிடத்தக்க அளவு வெற்றி பெற்றிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

பொய்க்கால் குதிரைகள் பிரசித்தப்பறை என்பவை சகிதம் வரும் பிரச்சாரங்கள் இது விசயத்தில் பொதுசனங்களின் கவனத்தைக் குவிக்கும் விதத்தில் ஆங்காங்கே பொது இடங்களில் நின்று உரையாற்றுகிறார்கள். துண்டுப் பிரசுரம் கொடுக்கிறார்கள்.

இத்தகைய துண்டுப்பிரசுரம் ஒன்று பின்வருமாறு தொடர்கிறது.

டும்....டும்....டும்...

அப்பம் கொடுத்து மேளம் வாங்கினோம் டும் டும் டும்...
பெட்டகம்கொடுத்து பிளாஸ்ரிக் கதிரை வாங்கினோம் டும் டும் டும்....

தாம்பாளம்கொடுத்து அப்பிள் வாங்கினோம் டும் டும் டும்.....
முகம்கொடுத்து முக மூடி வாங்கினோம் டும் டும் டும் டும்...

(02)

கண்டிவீதி திறக்கப்பட்டபின் யாழ்ப்பாணத்தில் சமாதான கால வியாபாரம் அமோகமாய் நடக்கிறது.

மிக விரைவாக கொஸ்மோ பொலிற்றன் மயப்பட்டு வரும் யாழ்ப்பாணம் இப்பொழுது பொருளாதார அர்த்தத்தில் மேல்மாகாணத்தின் நீட்சி. கலாச்சார அர்த்தத்தில் குறிப்பாக ரீ.வி சனல்களைப் பொறுத்தவரை தமிழ்நாட்டின் நீட்சி அநேகமான நடுவயதுக்காரர் தமது ஓய்வு நேரத்தின் பெரும்பகுதியை இந்தியாவின் பொதிகை நிகழ்ச்சிகளிடம் இழந்து விட்டார்கள். அங்கே டிஸ்க் அன்ரனா இல்லாதவர்களுக்கு பொதிகையும் சமீப காலத்திலிருந்து ரூபவாகினியின் ஐ சனலும் தான் பார்க்கக் கிடைக் கிறது.

அரசியல் அர்த்தத்தில் யாழ்ப்பாணத்தில் இப்பொழுது ஒரு தலைமைத்துவ வெற்றிடம் நிலவுகிறது. இந்த வெற்றிடத்தில் யாழ்ப்பாணத்து நோக்கு நிலையிலிருந்து திட்டமிடப்படாத ஒரு கொஸ்மோபொலிற்றன் பண்பாட்டினுள் யாழ்ப்பாணம் தன்வசமிழந்து கரைந்து கொண்டிருக்கிறது.

இத்தகைய ஒரு பின்னணியில் கண்டிவீதி வழியே பெருக்கெடுத்து வரும் வெளியூர் வர்த்தகர்கள் பிளாஸ்ரிக் பொருட்கள் மோட்டார் சைக்கிள்கள் டிஸ்க் அன்ரனாக்கள் மெத்தைகள் அப்பிள் அன்னாசி போன்றவற்றை விற்று விட்டு திரும்பிச் செல்லும் போது இங்கிருந்து பழைய பொருட்களை மிக மலிவு விலையில் அள்ளிச் செல்கிறார்கள்.

பழைய பெட்டகங்கள் அலுமாரிகள் கட்டில்கள் கதிரைகள் வேலைப்பாடுகள் மிக்க கதவுகள் யன்னல்கள் நிலைகள் தூண்கள் இவற்றோடு பழைய உலோகப் பாத்திரங்கள் உபகரணங்கள் கோயில் வாகனங்கள் வழிபாட்டுருக்கள் மரப்பொம்மைகள் போன்ற பொருட்களே இப்படிச்



சந்தைக்கு வந்திருக்கின்றன.

கலைநயம் மிக்க இந்த அரும்பொருட்களை மலிவு விலையில் அள்ளிச்செல்லும் வர்த்தகர்கள் தென்னிலங்கையில் அவற்றை மிகப்பெரிய விலைகளுக்கு விற்கிறார்கள்.

இந்த வியாபாரம் விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகத்தின் தலையீட்டை தொடர்ந்து தற்சமயம் குறிப்பிடத்தக்க அளவு கட்டுப்படுத்தப்பட்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

ஆனாலும் இது விசயத்தில் சனங்களிடம் போதிய தெளிவோ ஆர்வமோ இல்லை என்பதே பொதுவான அவதானிப்பாக உள்ளது.

பழைய உலோகப் பண்டங்கள், தளபாடங்களை வீட்டில் எங்காவது ஒதுக்குப்புற அறையின் இருண்ட மூலைக்குள் எறிந்துவிடுவதே யாழ்ப்பாணத்துக் கல்வீடுகளில் வழமை. இப்பொழுது அவற்றிற்கு மவுசு வந்திருக்கிறது. எனவே அவற்றை ஏன் விற்கக்கூடாது என்பது சாதாரண சனங்களின் கேள்வியாக உள்ளது. விற்காமல் அவற்றை என்ன செய்வது எங்கே வைப்பது என்றும் சிலர் கேட்கிறார்கள்.

இந்தக்கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறினால்தான்இது தொடர்பானவெகுசன விழிப்புணர்ச்சியை அதாவது போராடும் ஒரு இனத்துக்கு தனது வேர்களைப் பற்றி இருக்க வேண்டிய விழிப்புணர்ச்சியை தூண்டவும் பரவலாக்கவும் முடியும். எனவே நாமிங்கு சில ஆழமான ஆனால் மிகவும் எளிமையான கோட்பாட்டு விளக்கம் ஒன்றிற்கு முதலில் வருவோம்.

(03)

விடுதலைக்கான ஒரு போர் எனப்படுவது எல்லாவிதத்திலும் அடையாளங் களைப் பாதுகாப்பதற்கான ஒரு போரே.

எமது தமிழ் அடையாளங்களைப் பேணவும் பாதுகாக்கவும் செய்யப்படும் ஒரு போரே

தமிழர் என்ற ஒரே அடையாளத்தின் பேரால்தான் நாம் நசுக்கப்படுகிறோம்.அவமதிக்கப்படுகிறோம் வேட்டையாடப்படுகிறோம்.

எந்த அடையாளங்களின் நிமித்தம் நாம் வேட்டையாடப்படுகிறோமோ அந்த அடையாளங்களைப் பாதுகாப்பதற்கு அவசியமான அரசியல் அதிகாரங்களைப் பெறுவதே எமது விடுதலைப்போராட்டத்தின் முதல்நிலை நோக்கம்.

ஒரு இனத்தின் அல்லது சனத்திரளின் தனித்துவமான அடையாளங்கள் எனப்படுபவை அந்த இனத்தின் அல்லது சனத்திரளின் தொடர்ச்சியறாத அம்சங்களே.

அதாவது- அடையாளம் எனப்படுவது ஏதாவது ஒன்று அதன் தொடர்ச்சி காரணமாகப் பெறுவது.

மொழிகாரணமாக மதம் காரணமாக இனம்காரணமாக வாழும் நிலம் காரணமாக உருவாகும் எல்லாத் தொடர்ச்சியறாத்தனங்களும் இவ்விதம் தனித்துவம்மிக்க அடையாளங்களாகின்றன.

இப்படி அடையாளங்கள் என்று கூறும்போது நல்லதுமுண்டு கெட்டதுமுண்டு. சாதி, பெண் அடக்குமுறை, பிரதேசவாதம் என்று எங்களுக்குள்ளேயே அடையாள பேதங் களும் அவற்றின் பேரிலான சமத்துவமின்மைகளும் உண்டு.

தமிழ் அடையாளம் எனப்படுவது இத்தகைய பல சமத்துவமின்மைகளின் ஒருவித முரண்சேர்க்கைதான்.

ஆனால் அடையாளங்களைப் பாதுகாப்பதற்கான போர் எனப்படுவது மெய்யான அர்த்தத்தில் அதன் இறுதி இலக்காக அடையாளங்களின் பேரிலான எல்லாவித சமத்துமின்மைகளையும் அகற்றுவதாயிருக்கும். யாரும் யாருடைய அடையாளங்களையும் நிராகரிப்பதற்காகவோ பறிப்பதற்காகவோ இருக்க முடியாது.

மேலும் அடையாளங்களைப் பாதுகாப்பது எனப்படுவது காலாவதியான பழைமைக்குத் திரும்பிச் செல்வது என்பதுமாகாது.

ஒவ்வொரு தனி மனுசனும் மனுசியும் பிறருடைய தனித்துவமான அடையாளங்களை பாதிக்காத விதத்தில் தமது தனி அடையாளங்களை சமூகப்பொது அடையாளங்களை பேணும் உரிமை பெற்றவர்கள்.

இந்த உரிமையை மீட்கவே இந்தப்போராட்டம்.

அடையாளம் எனப்படுவது தொடர்ச்சியே என்று கண்டோம்.

இத்தகைய தொடர்ச்சியறாத்தனத்தின் ஒருகால கட்டத்திற்குரிய சான்றுப் பொருட்களே மேற்படி அரும்பொருட்கள்.

சதா மாறும் வாழ்வின் புதிய தேவைகள் சவால்கள் ருசிகளுக்கேற்ப வழக்கொழிந்து போகும் ஒரு வாழ்க்கை முறையின் மிச்ச சொச்சங்கள் அவை.

புதிய கொஸ்மோபொலிற்றன் வாழ்க்கையின் பகட்டுக்கும் பளபளப்புக்கும் முன்னால் பொலிவிழந்து சுவாரசியமிழந்து போகும் ஒரு பழைய காலத்தின் செழும்பேறிய துருப்பிடித்த மிச்சங்களாய் எச்சங்களாய் அவை மியூசியங்களுக்குப் பின் வாங்கிச் செல்கின்றன.

ஆனாலவை எமது தொடர்ச்சியறாத்தனத்தின் ஒரு காலகட்டத்தின் சான்றுகளாயிருப்பவை.

எமது பாட்டனும் பாட்டியும் பூட்டனும் எப்படிச் சிந்தித்தார்கள் எப்படி ருசித்தார்கள். எப்படி ரசித்தார்கள் எப்படி நேசித்தார்கள் எப்படி சேமித்தார்கள் என்பதெல்லாம் அவற்றில் பதியப்பட்டிருக்கின்றன.

எனவே மீட்கப்படவியலா இறந்தகாலம் ஒன்றின் மிச்ச சொச்சங்கள் அவை.

மீட்கப்படவியலா இறந்த காலத்தின் மீது மனிதனுக்கு எப்பொழுதும் ஒரு இனம்புரியாத கவர்ச்சியிருக்கும்.

குறிப்பாக வெளிநாட்டவரைப் பொறுத்தவரை அதிலும் குறிப்பாக வெள்ளைகாரர்களைப் பொறுத்தவரை அந்நிய அடையாளங்களின் மீது குறிப்பாக ஆசிய ஆபிரிக்க அடையாளங்களின் மீது அவர்களுக்குள்ள விடுப்பார்வமும் மீட்கப்படவியலா கடந்த காலமொன்றின் மிச்சங்கள் அவை என்பதால் வரும் கவர்ச்சியும் சேர்ந்துவிட மேற்படி பழைய பண்டங்களின் பெறுமதி உயர்ந்துவருகிறது.

எமது பழைய பொருட்களுக்கும் இதுதான் நடக்கிறது. அவற்றை இப்பொழுது அவற்றின் உலோகப் பெறுமதிக்கு விற்கும் ஒரு நிலை வந்திருக்கிறது.

இதைத்தடுக்க என்ன செய்ய வேண்டும்.

முதலாவதாக எமது அடையாளங்களைப் பற்றிய பிரக்ஞை எமது மக்களிடம் உண்டாக வேண்டும்.

வீட்டில் சில்வர்பொருட்களுக்கு ஒரு ஷோகேஸ் இருப்பதுபோல இந்தப்பொருட்களுக்கும் ஓரிடம் இருக்க வேண்டும்.

மிக நவீன வீடுகளில் வரண்ட கள்ளிச்செடிக்கு எப்படி ஒரு இடம் தரமுடிகிறதோ அதுபோல கருங்கற் சுவருக்கும் செங்கல்

> அரசியல் அர்த்தத்தில் யாழ்ப்பாணத்தில் இப்பொழுது ஒரு தலைமைத்துவ வெற்றிடம் நிலவுகிறது. இந்த வெற்றிடத்தில் யாழ்ப்பாணத்து நோக்கு நிலையிலிருந்து திட்டமிடப்படாத ஒரு கொஸ்மோ பொலிற்றன் பண்பாட்டினுள் யாழ்ப்பாணம் தன்வசமிழந்து கரைந்து கொண்டிருக் கிறது.

வேலைப்பாடுகளுக்கும் எப்படி ஒரு இடம்தர முடிகிறதோ அப்படி ஒரு இடம் இந்தப் பொருட்களுக்கும் தரப்பட வேண்டும்.

மிக நவீன வீட்டின் பள பளப்பான ஒரு பரப்பில் கரடுமுரடான எமது பழைய பொருள் ஒன்று வீற்றிருக்கும் போது அந்த முரணில் ஒரு புதுச்சுவை கிடைக்கிறது. இது ஐரோப்பியருக்கும் சிங்களவர்களுக்கும் தெரிகிறது.

"கல்தோன்றி மண் தோன்றாக்காலத்தே முன்தோன்றியதாக" பெருமைப்படும் எங்களுக்கேன் தெரியாமல் போனது?

இரண்டாவது - பொறுப்பு வாய்ந்த அதிகாரமுடைய நிறுவனங்கள் இத்தகைய பொருட்களின் வியாபாரத்தைச் சட்டவிரோதமாக்க வேண்டும்.

மூன்றாவது ஆர்வமுடைய தனிநபர்களும் பொதுநிறுவனங்களும் ஒன்று திரண்டு ஒரு பொது நிதியத்தை உருவாக்கி இப்பொருட்களைத் தாமே கொள்வனவு செய்ய வேண்டும். அத்தோடு அவற்றைச் சேகரிக்க ஒரு அரும்பொருட்காட்சியகம் அந்தப்பொதுநிதியத்தின் கீழ் உருவாக்கப்பட வேண்டும்.

இல்லையென்றால் - எமது அடையாளத்தின் ஒரு காலகட்டச் சான்றுகளை நாங்களே விற்றவர்களாவோம். எமது வேரின் தொடர்ச்சியைக் கூறும் அருந்தலான சின்னங்களை நாங்களே விற்றவர்களாவோம். இதனால் எமது பாதுகாக்கப்படவேண்டிய அடையாளங்களின் மீளப் பெறவியலாத ஒரு காலகட்டத் தொடர்ச்சியை நாமே விற்றவர்களாவோம்.

எந்த அடையாளங்களின் நிமித்தம் போராடுகிறோமோ அந்த அடையாளங்களை நிரூபிக்கத் தேவையான சான்றுப் பொருட்களை அற்ப விலை கூறி விற்பது என்பது தோற்கத்தயாரான ஒரு இனத்திடம் மட்டும் இருக்கக் கூடிய ஒரு சுயமுரண்பாடு தவிர வேறென்ன?

□□□□□

உங்களை உலகில் உயர்த்திக்கொள்வதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்றுஉங்கள் ஊக்கமிக்க முயற்சி...மற்றது மற்றையோரின் பலவீனம். -லா.ப்.ரூயேர்.

# உலகின் முதற் பெண் நிருபர் 'நெல்லிப்பிளேய்' ஒரு பைத்தியம்?



சிறி. இந்திரகுமார்

அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலிருந்த அந்த பெண்கள் விடுதி அல்லோலகல்லோலப்பட்டது.

ஐயோ......ஐயோ....

ஹக்கக்கா.......ஆ........ஹக்கக்கா.......

ஓடு.....ஓடு.....ஓடு.....

ஐயோ.... எனக்கு பயமா இருக்கு.

இந்தப் பக்கமாத்தான்...

அங்கால அங்கால

இது என்ன நாசமடா...... என்ற அவலம் நிறைந்த கதறல்கள் அந்தப் பெண்கள் விடுதியை ஆட்டி வைத்தன. எல்லோருக்கும் குழப்பம். என்ன நடந்தது? என்ன நட்டக்கிறது? ஒன்றுமே புரியவில்லை. ஆனால் பார்ப்பவர்களுக்கு ஒன்று மட்டும் நன்றாகப் புரிந்தது. அந்தப் பெண்கள் விடுதியின் நாலாபுறமும், பெண்கள் பீதியினால் ஓடிக்கொண்டிருந்தார்கள். இவ்வளவுக்கும் காரணம் ஒரு இளம் பெண். அதுவும் சில நாட்களுக்கு முன்னரே அவ்விடுதிக்கு வந்திருந்தவள்.

ஐயோ.......

ஐயோ.......

என்ற கதறல்களுக்கு இடையே கேட்கும் அந்த

ஹக்கக்கா....... என்ற சிரிப்புமட்டும் முரணாக இருந்தது. அந்த நேரம் அந்தப் பெண்கள் விடுதியின் நிலைமையை சீரான நிலைக்குக் கொண்டு வரவேண்டும். ஓடியவர்கள் மூலம் செய்தி காட்டுத் தீயைப் போல பரவியது நியூயோர்க் நகரக் காவலர்களின் செவிகளுக்கு செய்தி எட்டியது. உடனேயே அந்த இடத்திற்கு விரைந்த காவலர்களில் பெண்காவலர்கள் கடும் பிரயத்தனத்தின் பின் அந்தப் பெண்ணைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட்டார்கள்.

யாரிவள்?

இவளுக்கு என்ன நடந்தது?

ஏன் இப்படியானாள்?

மெல்ல மெல்ல வழமைக்குத் திரும்பிய எல்லோரும் அந்தப் பெண்ணையே பார்த்தார்கள்.

தலைமுடி குழம்பி.......

ஆடைகள் கிழிந்து....

அலங்கோலமான நிலையில் அந்தப் பெண்ணிருந்தாள். அவள் மட்டுமா? அவளைப் போலவே அவள் தங்கியிருந்த அறையும் இருந்தது. இப்போது என்ன நடந்தது? ஏன்? என்ற எல்லோருடைய கேள்விக்கும் யாரும் பதில் சொல்லாமலே புரிந்தது.

அவள் ஒரு பைத்தியம். அதுவும் மிகவும் முற்றிய பைத்தியம் ஆபத்தானவளுங்கூட.

எல்லோருடைய பார்வையும் அவளின் மீது. கனிவு நிரம்பிய நிலையில் இந்தப் பெண்ணுக்கு இந்த நிலையா? பாவம்.

இந்தப் பைத்தியம் இனித்தெளியாது!

அந்தப் பெண் காவலர் அவளைக் கொண்டு சென்றுவிட்டனர். என்ன நடக்குமோ? இப்போது எல்லோர்க்கும் ஆவல். இதை அறிய வேண்டும். அந்த ஆவலிற்கு முற்றுப் புள்ளி வைக்கும் அந்த நாள் வந்தது.

நியூயோர்க் நகர நீதிமன்றின் முன்னிலையின் நிறுத்தப் பட்டிருந்தாள் அவள். முன்னே இரு நீதிபதிகள், ஐந்து மருத்துவர்கள் இருந்தார்கள்.பார்வையாளர்கள் ஆவலோடு நீதிபதியின் தீர்ப்பை எதிர்பார்த்தார்கள். நீதிபதி தீர்ப்பை வாசித்தார்.

இங்கிருக்கும் இந்த ஐந்து மருத்துவர்களின் மருத்துவ அறிக்கையின் படியும் தொடர்ச்சியான எமது அவதானிப்பின் மூலமும் கூட்டிலிருக்கும் எலிசபெத் என்ற இந்தப்பெண்ணை ஒரு சித்த சுவாதீனமற்றவராக உறுதிப்படுத்தி இவரை உடனடியாக பிட்ஸ்பேர்க் மனநோயாளர் விடுதியில் அனுமதிக்குமாறு உத்தரவிடுகின்றேன்.

எலிசபெத் பைத்தியம் என்பது உறுதியாயிற்று. இனி அவளது காலம் பிட்ஸ்பேர்க் மனநோயாளர் விடுதியில் கழியும். அங்கு போகும் அவள் பைத்தியமற்று சித்த சுவாதீனத்தோடு வருவாளா? அல்லது பைத்தியங்களோடு சேர்ந்து இன்னும் பைத்தியமாகி விடுவாளா? அந்தத் தீவைப்போல தனித்தே போவாளா?

காவலர்களின் கைகளின் இரும்புப் பிடியின் நடுவிலிருந்த எலிசபெத்தை எலிசபெத்தின் பெற்றோர் கண்களில் வழிந்த கண்ணீரோடு தங்களது மகளையே உற்றுப் பார்த்தார்கள். எங்களுடைய மகளுக்கு என்ன நடந்தது இவள் எல்லோரையும் போலத்தானே இருந்தாள். நாங்கள் கண்ட ஆசைக்கனவுகள் இப்படியா அழிந்துபோய்விடும். இவளது வாழ்வும் இப்படியே அழிந்து போய்விடுமா? எங்கள் பிள்ளை எலிசபெத்தா பைத்தியம்? அவர்களால் ஜீரணிக்கவே முடியவில்லை. எப்படி முடியும்?

அந்தத் தாய் கண்ணீர் விட்டு அழுதாள். மகளே எலிசபெத் உனக்கு பைத்தியமா? உன்னுள்ளே நாம் உறைந்து போயுள்ளோமே. ஏனம்மா உனக்கு இந்தநிலை. அந்தக் கத்தருக்குக் கூடக்கண்ணில்லையா?

***

1887ம் ஆண்டு ஏறக்குறைய நூற்றிப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நியூயோர்க்நகர மக்களின் கைகளிலிருந்த வேள்ட் பத்திரிகை அந்த நகர மக்களை சுறுசுறுபாக்கியிருந்தது. எல்லோரும் ஆவலோடு ஏதோ ஒன்றைத்தீவிரமாக வாசித்துக் கொண்டிருந்தார்கள்.

நியூயோர்க் மக்களைத் தூண்டிவிட்ட அந்தச்செய்தி இதுதான். பிளாக் வெல் தீவில் இயங்கிவரும் மனநோயாளர் விடுதியில் உலகின் கண்களில் இருந்து மறைத்து அங்கே அரங்கேற்றப்படும் அவலங்கள் கட்டுரையாகியிருந்தன.

நினைவுகளால் தனித்துப்போன மனித உள்ளங்களைப் பாதுகாக்க வேண்டிய இடத்தில், எல்லோரும் தலைகுனியும் வண்ணம் ஊழலும் மோசடியும் ஒழுங்கீனமென பிட்ஸ்பேர்க் மனநோயாளர் விடுதியில் நடந்து வருகின்ற அக்கிரமங்களையும் அநியா யங்களையும் பந்திக்குப்பந்தி வரிக்குவரியாக வேள்ட் பத்திரிகையில் ஒரு பத்திரியையாளர் உலகின் கண்களுக்குக் கொண்டு வந்திருந்தார். அதுதான் அந்த மக்களை வேகம் கொள்ளச் செய்திருந்தது.

"மனநோய்விடுதிக் கம்பிகளுக்குப் பின்னால்'' என்ற வேள்ட் பத்திரிகையில் வெளிவந்த தொடர் பிளாக் வெல்ட்தீவில் தங்கள் நினைவுகளை இழந்து தங்களைச் சூழ என்ன நடக்கிறது என்பதை அறியாத அந்த ஆறறிவு ஜீவன்களுக்காக குரல்கொடுத்திருந்தது இந்தத்தொடர். அப்போது எல்லோரிடையேயும் பெரும் பரபரப்பையும் பெருமதிப்பையும் பெற்றிருந்தது.

பிட்ஸ்பேர்க் மனநோயாளரின் கதை மட்டுமல்ல,அந்தத்தொடரின் பின்னால் ஒரு வெற்றியின் கதை இருந்தது. அதை அப்பொழுது உலகம் புரிந்து கொள்ளவில்லை அதில் பெண்ணடிமைத்தனத்தின் சிறையுடைப்பு இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அதீத உழைப்பிருந்தது. அபார துணிவிருந்தது.

அந்த வேள்ட் பத்திரிகையின் பதிப்பாசிரியர் ஜோசப் பிளிட்சருக்குத்தான் தெரிந்திருந்தது அந்தக்கதை. தன்னை மறந்த நிலையில் அன்றொரு நாள் நடந்த கதையை நினைக்கத் தொடங்கினார். மெல்ல மெல்ல அந்தநினைவுக்குள் மூழ்கிப் போனார்.

***

வரலாற்றில் தன்னையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று எல்லோர்க்கும் ஆசைதான். ஆனால் இது எல்லோராலும் முடிவதில்லை. சில வேளைகளில் சிலர்தங்களை அறியாமலே வரலாற்றில் இணைந்து விடுகிறார்கள். அப்படியான ஒரு புதிர் நிறைந்த பயணம் தான் வரலாற்றினுடைய பயணம்.

அன்று அப்படியான ஒரு பயணத்தில் வரலாற்றில் நிரந்தரமாக இணைந்துகொள்ள அமெரிக்கா வின் பிட்ஸ்பாக் நகரத்திலிருந்து நியூயோர்க் நகரம் நோக்கி தனித்த ஒரு பெண் பயணம் தொடங்கினாள். அவள் மனதில் தன்னம்பிக்கையைச் சுமந்தபடி தன்னால் முடியும் என்ற திடத்தோடு தொடங்கினாள் அந்தப்பயணத்தை

நெல்லிப் பிளேய் என்ற பெயரில் பல கட்டுரைகள் எழுதி மனித வாழ்வின் யதார்த்தத்தை அப்படியே எழுத்தில் அர்ப்பணித்த அதிசயப் பெண் தன்னை இதழியல் உலகில் இணைத்துக்கொள்ளப் புறப்பட்டிருந்தாள்.

நியூயோர்க் நகரத்தில் இருந்த ஒவ்வொரு பத்திரிகைக் காரியாலயமாக ஏறத்தொடங்கினாள் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள அவ்வளவு வேகம் அவள் மனதில் அவளது பல கட்டுரைகள் நியூ யோர்க் நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வெற்றியும் பெற்றிருந்தன.

ஆனால் நெல்லிபிளேய்க்கு நடந்தது என்ன? அன்று அவளை ஏற்றுக்கொள்ள மறுத்த ஒவ்வொரு பத்திரிகை காரியாலயமும் அவளைப் புறந்தள்ளியதன் காரணம் அவள் ஒரு பெண். இதைத் தவிர வேறு எந்தத் தகுதியீனமும் அவளுக்கு அன்று இருக்கவில்லை. இதுதான் அவள் எதிர் நோக்கிய தடை.

ஆனாலும் நெல்லிபிளேய் தளரவில்லை அவள் நடந்தாள் வெற்றியின் பாதைவரை நடக்கத் துணிந்தாள். பத்திரிகைத் துறையில் பெண்ணுக்கு வேலையா? அவள் ஒதுக்கப்பட்டதனால், மூன்று மாதங்கள் அவளை விட்டுக்கழிந்தன.

ஒருநாள் நியூயோர்க் வேள்ட் பத்திரிகைக் காரியாலயத்தின் வாசலில் நின்றாள்.

ஆசிரியரைப் பார்க்க வேண்டும் இன்று வரும் பத்திரிகை ஆசிரி யரை சந்திக்க முடியாது. இன்று அவருக்கு அதிக வேலையிருக்கிறது.

பறவாயில்லை எவ்வளவு நேரம் சென்றாலும் காத்திருந்து நான் அவரைச் சந்திக்கிறேன்.

நெல்லிப்பிளேய்காத்திருந்தாள் நீண்ட மூன்று மணி நேரம் பொறுமையோடு ஒரு பெருமையை பெறுவதற்காக.

உள்ளே நுழைந்த நெல்லிபிளேயைப் பார்த்த காக்வெல் திகைத்துப் போனார்.

மிஸ்ரர் காக்வெல்

எனது பெயர் நெல்லி பிளேய்.

நெல்லி பிளேய் பேசினாள். அவள் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அவளை இனம்காட்டியது அவளின் உறுதியை எடுத்தியம்பியது.

ஆனால் இம்முறை நெல்லிப் பிளேயை அதிஸ்ட தேவதை கைவிடவில்லை.

சற்று முன்னர்தான் அவ்விடத்திற்கு வந்திருந்த வேள்ட் பத்திரிகையின் பதிப்பாசிரியர் ஜோசப் பிளிட்சர் நெல்லி பிளேயின் உறுதியைப் பாராட்டினார்.

நெல்லி பிளேய் நான் வைக்கப்போகும் பரீட்சையில் வெற்றி பெற்றால் உன்னை வேலையில் சேர்த்துக்கொள்ளலாம். பரீட்சை இதுதான் பிளாக்வெல் தீவிலுள்ள மனநோயாளர் விடுதியின் அவலங்களை நேரில் போய்க் கண்டு அவற்றை எழுதவேண்டும். இந்தப் பரீட்சையில், தேறினால் வேள்ட் பத்திரிகையில் வேலை தரப்படும்.

நெல்லிபிளேய் இணங்கினாள் துணிந்தாள் சவாலாக எடுத்தாள். சாதித்துக்காட்டினாள்.

இந்த தொடர் கட்டுரைதான் நியூயோர்க் மக்களை வேள்ட் பத்திரிகையை வாசிக்கத் தூண்டியிருந்தது. சுயநினைவுக்குத் திரும்பிய பிளிட்சர் நெல்லி பிளேயை மரியாதையோடு பார்த்தார். அதன் பிறகு நெல்லிபிளேய் வேள்ட் பத்திரிகையின் நிருபர், அதுவும் உலகின் முதற் பெண்நிருபர் என்ற பெருமையோடு பார்த்தார். ஆம் இந்த நெல்லிபிளேய்தான் அன்றொருநாள் நியூயோர்க் நகர பெண்கள் விடுதியில் மனநோயாளியாக இனங்காணப்பட்டு நீதிபதியாலும் ஐந்து மருத்துவர்களாலும் பைத்தியமாக இனம்கண்டு பிளாக்வெல் மனநோயாளர் விடுதிக்கு அனுப்பப்பட்ட எலிசபெத் அவள்தான். நெல்லிபிளேய் என்ற புனைபெயரில எழுதிச் சாதித்து உலகின் முதற் பெண் நிருபராகிப் பெருமையோடு நிமிர்ந்தாள். ○

# ஊர்க்கோலம்



அந்த வன்னிப் பகுதியைச் சேர்ந்த எழுத்தாளர் கொழும்பு சென்று இரண்டுவாரம் நின்றுவிட்டு வந்திருந்தார்.

கொழும்புப் புதினங்களைப் பற்றிக் கேட்டேன். சலித்துக்கொண்டார்.

## உண்மையான வார்த்தைகள்

'கொழும்பிலை தான் தினமும் வெளியீட்டுவிழாக்கள், கலைவிழாக்கள், மணிவிழாக்கள், என ஒரே பரபரப்பாக இருக் கிறதாகச் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றனவே...' என்றேன் நான்.

'அதுக்கு குறைச்சலில்லை... ஆளுக்காள் ஒருவருக்கு மற்றவர் தாங்கள் விலாசமின்றிப் போகமால் விழாமல் இருப் பதற்கு விழா எடுத்துக்கொண்டே இருக்கி றார்கள். ஒன்றிலும் இயல்புத் தன்மை இல்லை. சம்பிரதாய அழைப்பு, சம்பிரதாய வரவேற்பு, சம்பிரதாய பாராட்டு... என உயிர்ப்பின்றி நடந்து கொண்டி ருக்கிறது'என்றார் அவர்.

நான் குறிப்பிட்ட ஒரு எழுத்தாளர் பற்றிக் கேட்டேன்.....

'அவருக்கென்ன சகல வசதிகளுடனும் அட்ட காசமாக இருக்கிறார்..... வன்னி மக்கள் பற்றி எந்தவிதமான விசாரிப்போ, வேத னையோ எதுவுமின்றி கதைக்க பேச நேர மில்லாத வேகத்தில் மேல்தட்டு வர்க்கத் தினரின் பாராட்டுக்களில் சொர்க்கிப் போய் இருக்கிறார்' என்றார். அவர் ஏதோ ''ரென்ச னாக'' இருப் பது போல்பட்டது. நான் சற்று மௌனமானேன் பதட்டம் குறைய அவர் கூறினார்.

'மக்கள்தான் எழுத்தாளர்களைப் பற்றி பெரிதாக நினைக்கிறார்கள்.... ஆனால் எழுத தாளர்களோ தமது புக ழைப்பற்றித்தான் பெரிதாக நினைக்கிறார்கள்' என்றார்.

இதுவும் ஒரு எழுத்தாளனின் வார்த்தையாகவே இருப்பதால் அதில் உண்மையிருக்கும் அல்லவா? ❄

## ஒரு முடி திருத்தகத்தில் கேட்டது

'சந்திரிகா ரணிலுக்கு கொடுத்த அதிகாரங்களைப் பறிக்கப் போறாவாம்'

'ஏனாம்....?'

'தான்கொடுத்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு தன்னையே மிரட்டுகிறாராம்.....'

'அவவும் மிச்சமிருக்கிற அதிகாரத்தைத் வைத்துக்கொண்டு ரணிலை வெருட்டிக் கொண்டுதானே இருக்கிறா....'

'எண்டாலும் முழு அதிகாரத்தையும் வைத்துக்கொண்டு வெருட்டுற மாதிரி வராதல்லவா....?!

'நல்லவேளை... முந்தி எங்களுக்கும் அதிகாரப்பரவலாக்கல் என்று கூறி ஏதோ தர முயன்ற போது நாங்கள் மறுத்துவிட்டோம்.... வாங்கியிருந்தால் அதையும் மீளப்பறித்துத்தான் இருப்பார்... ❄

## கிளிநொச்சியில் கேட்டது

கரடிப்போக்கு சந்தியில ஓடும் வாய்க்காலில் அந்த கொழும்பு லொறிக் குரியவர்கள் குளித்துக்கொண்டிருந்தார்கள். லொறி ஓரமாக நிறுத்தப்பட்டிருந்தது.

லொறிச் சாரதியும், கிளீனரும் வேறு ஒருவரும் என மூன்று பேர் சிங்களத்தில் பேசிக்கொண்டார்கள்.

'எங்கட அரசாங்கங்கள் எவ்வளவு பொய்களை இவ்வளவு நாளும் சொல்லிக்கொண்டிருந்தாங்கள். எங்கட லொறி அந்த நடுக் காட்டுப்பகுதியில் காத்துப்போய் நிக்கேக்கை புலிகள் எவ்வளவு அன்பாகவும் இரகத்துடனும் நடந்துகொண்டார்கள்...."

'ஓ...நான் எதிர்பார்க்கவேயில்லை... அவங்களைக் கண்டதும் பயந்துபோனன்.... அந்த இருட்டிலை நாங்கள் சரியெண்டுதான் நினைச்சன்...!

'பிரபாகரன் தன்ரை ஆட்களை எவ்வளவு ஒழுங்காகவும் உறுதியாகவும் தான் வளர்த்திருக்கிறார்...'

' சண்டையிலை அவங்க புலிதான்.... சாதாரணமாக எவ்வளவு நல்ல மனிசர்..."

' எங்களுக்கும் ரத்வத்தை எண்டொருத்தர் இருந்தாரே....புழுகன்...கள்ளன்..."

அவர்கள் தொடர்ந்து பேசிக்கொண்டு குளித்துக் கொண்டிருந்தார்கள்....

நான் வெய்யிலுக்காக அந்த லொறியின் பின்புறம் கொஞ்ச நேரம் நின்றது அவர்களுக்குத் தெரிஞ்சிருக்காது. ❄

## ஓட்டோ வாசகம்

'கிளிநொச்சியில் ஒரு ஓட்டோ'வாகனத்தின் உட்புறம் எழுதப்பட்டிருந்த வாசகம்

வேகம் விவேகத்தை  
தடுக்கும்  
விவேகம் வேகத்தை  
மட்டுப்படுத்தும்  
நான்-  
வேகமாகச் செலுத்தவா?  
விவேகமாகச் செலுத்தவா?  
தெரிவிப்பது நான்  
தீர்மானிப்பது நீங்கள்-  
இப்படிக்கு  
சாரதி. ❄

குற்றமுள்ள மனச்சான்று நீர்ச்சூழல் போன்றது தன்னைச் சுற்றிக் கடந்து செல்லக்கூடியதையும் தன்னிடம் இழுத்துக்கொள்கிறது.-தாமஸ்புல்லர்

-ஞாபகன்-



## -யாழ்குடா நாட்டில்-

# சைக்கிள் தரிப்பு நிலையங்கள் சில அவதானிப்புகள்- பதிவுகள்

சேவை என்ற பெயரிலான பகற்கொள்ளைகள் இன்று அதிகரித்து விட்டன. இவற்றைப் பட்டியல்படுத்துவது திட்டமிட்ட எண்ணிக்கைக்குள் அடங்கக் கூடியதல்ல அந்தளவுக்கு மக்களுக்கான சேவை என்று நடத்தப்படுபவைகள் மூலம் இலாபம் என்பதற்கு அப்பால் மேற்கொள்ளப்படும் சுரண்டல் நடவடிக்கைகள் அளவற்ற கோபத்தை எந்த மனிதனுக்கும் ஏற்படுத்தும்.

இதனை முன்வைப்பதற்கான ஒரு காரணம் சைக்கிள், மோட்டார்சைக்கிள் பாதுகாப்பு என்ற பெயரில் இடம்பெறும் மோசடிகளே. யாழ்ப்பாணம்,வன்னி என்ற வேறுபாடில்லாமல் தமிழ் பிரதேசங்கள் மீது எரிபொருள் உள்ளிட்ட பொருளாதாரத் தடைகள் இடப்பட்ட போது மக்களின் போக்குவரத்து ஆதாரமாக இருந்தது சைக்கிள்தான் இப்போது இயல்பு வாழ்க்கை திரும்பியிருப்பதாகக் கொள்ளப் பட்டாலும் எல்லோரதும் முக்கிய போக்கு வரத்துச் சாதனமாக சைக்கிளே இருக்கின்றது.

ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்கள் அனைவருமே ஒவ்வொரு சைக்கிளை அல்லது மோட்டார்சைக்கிளை வைத்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டதென்பது இன்றைய உலக இயக்க வேகத்தில் தவிர்க்கப்பட முடியாததே. அன்றாட தேவைகளுக்காக நகர்ப்பகுதிக்கோ சந்தைக்கோ அதனைக் கொண்டு செல்லும் போது அதனை நிறுத்துவதற்கு என்று இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

சைக்கிள் திருட்டு அதிகரித்து விட்டமையால் அதனை பாதுகாக்கவோ அல்லது கண்ட கண்ட இடங்களில் நிறுத்துவதால் ஏற்படக்கூடிய நெருக்கடிகளைத் தவிர்க்கவோ மட்டும் சைக்கிள் தரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படவில்லை என்று எண்ணத் தலைப்படுவது மக்களின் தவறாக இருக்க முடியாது. இன்று குடாநாடு சடுதியாக மக்கள் பெருக்கம், வாகனப்போக்குவரத்து அதிகரிப்பு என்பவற்றால் விபத்துக்களின் விளைநிலமாகிவிட்டது. இதற்கு வீதியோரங்களில் நிறுத்தப்படும் சைக்கிள்கள் மோட்டார் சைக்கிள்கள் என்பன போக்குவரத்து தடையை ஏற்படுத்துகின்றன என்பதும் உண்மைதான்.

அதற்காக வாகனங்களை அவற்றுக்குரிய இடங்களிலும் சைக்கிள், மோட்டார்சைக்கிள் என்பவற்றை அவற்றுக்குரிய தரிப்பிடங்களிலும் நிறுத்த வேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் பொலிஸார் கூறுகின்றனர். அவ்வாறு செய்யப்படாத பாவனையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. இதனைத் தவறாக விளங்கிக் கொள்ள முடியாது என்றாலும் இது சைக்கிள் தரிப்பு நிலையங்களுக்கு நல்ல வாய்ப்பாகப் போய்விடுகின்றது.

குடாநாடு உட்பட அநேக பிரதேசங்களிலும் சைக்கிள் பாதுகாப்புக்கு என்று இரண்டு ரூபா அறவிடப்படுகின்றது. குடாநாட்டில் மோட்டார்சைக்கிள் ஒன்றுக்கு ஐந்து ரூபா வசூலிக்கப்படுகின்றது. வன்னியில் சில பகுதிகளில் இத்தொகையால் வேறுபாடுகள் காணப்படுகின்றது எனலாம். வன்னியோடு ஒப்பிடும்போது குடாநாட்டில் சைக்கிள், மோட்டார்சைக்கிள் என்பவற்றின் பாவனை பலமடங்கு அதிகம் என்பதால் தரிப்பு நிலையங்களை அவை நாடவேண்டிய அவசியம் மிக அதிகம். இதனைக் கருத்தில் கொண்டே விடயத்தை சற்று நோக்க வேண்டியிருக்கின்றது.

சில மாதங்களுக்கு முன் யாழ்.மாநகரசபை இது குறித்து உத்தியோகபூர்வ அறிவித்தல் ஒன்றை பத்திரிகைகளில் பிரசுரித்திருந்தது. அதன்படி சைக்கிள் ஒன்றுக்கு ஒரு ரூபாவும், மோட்டார்சைக்கிளிற்கு இரண்டு ரூபாவுமே தரிப்பிடங்களில் அறவிடப்பட வேண்டும் என்றும் இதை மீறி அதிகளவில் அறவிடுவது தண்டனைக்குரியது என்றும் தெரிவிக்கப் பட்டிருந்தது. மாநகரசபையின் அறிவிப்பு நியாயமான அறவீடுகளைப் பிரகடனம் செய்தது.

இந்த அறிவித்தலின்படி மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும் என்று எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றத்தையும் அதற்கு மேலாக தரிப்பிடத்தை நிர்வகிப்பவர்களிடம் ஏச்சுக்களையும் தான் வாங்க நேர்ந்திருக்கின்றது. இன்று வரைக்கும் அவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டு விடவில்லை.

குறிப்பாக யாழ்.நகர்பகுதியில் போதனா வைத்தியசாலைக்குச் செல்லும் எவரும் தமது சைக்கிள், மோட்டார்சைக்கிள்களை அதன் முன்னுள்ள தரிப்பு நிலையத்தைத் தவிர வேறெங்கும் நிறுத்தி விட்டுச் செல்லமுடியாது. பாவனையாளர்களின் இந்த இக்கட்டான நிலை மிக நன்றாகவே பயன்படுத்தப்பட்டு பணம் கறக்கப்படுகின்றது.

சைக்கிளை நிறுத்தும் ஒவ்வொருவரிடமும் மோட்டார்சைக்கிள் கட்டணம் 2/= என பொறிக்கப்பட்ட சிட்டையே வழங்கப்பட்டு பணம் வசூலிக்கப் படுகின்றது. இது ஏன் என்று அங்குள்ளவர்களிடமே கேட்டபோது ''மற்றவர்கள் இரண்டு ரூபா தந்துவிட்டுப் போவது உமது கண்ணுக்குத் தெரியவில்லையா?'' என்ற காட்டுக் கூச்சல் வேறு. இந்த வகையில் மட்டும் கொள்ளை முடிந்து விடவில்லை. கட்டணத்துக்காக பத்துரூபா தாள் அல்லது ஐந்துரூபா குத்தியோ கொடுக்கப்பட்டால் மீதி முழுவதும் பணமாக வந்து விடுவதில்லை. மூன்று ரூபாவிற்கு இனிப்பு வகைகளோ அல்லது ஐந்து ரூபாவிற்கு கச்சான் அல்வாவும், இனிப்பு பண்டங்களுமோ தான் கொடுக்கப்படும் சம்பவம் அதிகமானது. யாழ்ப்பாணத்தில் சில்லைறைகளுக்குத் தட்டுப்பாடு என்பது இவர்களுக்கு நல்ல வாய்ப்பு.

இது நோயாளர்களுக்கு மட்டுமல்ல, அவர்கள் மீது அனுதாபம், அன்பு கொண்டு பார்வையிடச் செல்பவர்களும் தமது பணத்தைக் கொள்ளை கொடுக்க வேண்டும் என்று ஆகிவிட்டிருக்கிறது. உறவினருக்கோ நண்பருக்கோ ஆறுதல் கூறப்போகும் நாம் யாரோ எவக்ருகோ இப்படிக் காசைக் கொட்டவேண்டியும் இருக்கின்றது என்று நண்பர் ஒருவர் சலித்தக் கொண்டார்.

இது ஒருபுறமிருக்க நோயாளர்களுக்குத் துணையாக இரவில் தங்குபவர்கள் தமது கைக்கிள் ஒன்றுக்காக ஒரு இரவுக்கு பத்து ரூபா வெலுத்த வேண்டியிருக்கிறது. இலவச மருத்துவ சிகிற்சை பெற இப்படியும் பணத்தை செலவழிக்க வேண்டியிருப்பதுடன் தாக்கம் எவருக்கு அதிகம் புரியும்?

இன்று யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதை திறக்கப்பட்ட பின்னர் வன்னியில் இருந்தும் அதற்கப்பால் இருந்தும் மக்களும் நோயாளர்களும் வரத்தொடங்கி விட்டார்கள். இவர்கள் இதுபற்றி யோசிக்கவோ பேசவோ விளைவதில்லை என்பதால் தமது பணத்தை வீணாகவே இழந்து கொண்டிருக்கிறார்கள். நான் அறிந்தவரையில் வன்னியில் அதிகமானோர் பெறும் மாதாந்த ஊதியம் 2500 ரூபாவாகவே இருக்கின்றது. எல்லோரும்தமது அன்றாடதேவையின் நிமித்தம் சந்தைக்கோ நகர்ப்புறங்களுக்கோ செல்லவேண்டியிருக்கிறது. தினமும் இரண்டு ரூபாவை சைக்கிள் பாதுகாப்புக்காக செலுத்தினால் மாதாந்தம் 60 ரூபாவை அதற்காக ஒதுக்க வேண்டியிருக்கும்.

2500 ரூபாவால் இதற்காக மட்டும் 60 ரூபா செலவிடப்பட்டால் இன்றைய வாழ்க்கைச் செலவில் ஏனைய தேவைகளின் நிலை என்னவாக அமையும்? மீதியைக் கொண்டு ஏனையவற்றை -ஏனைய பொருட்களும் சேவைகளும் இதேபோன்ற அநியாய விலைகளுக்கே - நிறைவேற்ற வேண்டிய இடர்பாடு சாதாரண மக்களுக்கே.

சில நாட்களுக்கு முன்னர் நண்பர் ஒருவரின் தந்தை சிகிற்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தார். அவரைப்பார்த்து விட்டுத் திரும்பியபோது தரிப்பு நிலையத்தில் இது விடயத்தில் தர்க்கம் ஏற்பட்டது. நான் மாநகரசபையின் அறித்தல் பற்றிக் கூற ''இப்போது மாநகர சபைக்கும் தமக்கும் தொடர்பில்லை: கடந்த (ஆகஸ்ட்) 10ம் திகதி முதல் தரிப்பு நிலையத்தை நாம்தனிப்பட்ட முறையில் நடத்தி வருகிறோம். காசைத்தாரும் அல்லது சைக்கிளை உள்ளே விடும் என்றார். எப்படித்தமக்குச் சார்பாக எல்லாம் நியாயப்படுத்தல்களை முன்வைக்க இயலும் என்று புரியாமல் நானும் நண்பரும் வெளியே வந்தோம்.

எமக்குள் இது தவிர்க்க முடியாத சில கேள்விளை எழுப்பியது.

1 மாநகர சபை இக்கட்டணங்கள் தொடர்பான விதிமுறைகளை தனியே பத்திரிகை அறிவிப்பாக விடுப்பதேடு தனது கடமையை முடிக்கிறதா ?

2 மேற்படி அறிவித்தல் வெளியான பின்பும் இவ்வாறான அறவீடு மேற்கொண்டமையை அது கண்டும் காணாமலும் விட்டுவிட்டதா அல்லது அதன்அதிகாரிகள் இந்த கொள்கைக்கு உடந்தையாக இருக்கின்றனரா?

3. கடந்த 10ம் திகதிக்குப் பின் அந்த தரிப்பு நிலையம் மாநகரசபையின் நிர்வாகத்தில் இருந்து விலகியுள்ளதா? யாழ் மாநகரசபையின் எல்லைக்குள் அதன் கட்டுப்பாடின்றி இப்படியொரு பொதுச்சேவை இடம்பெற முடியுமா?

உண்மையில் இப்படியொரு சிக்கல்கள், பிரச்சினைகள் நடைபெறுவதை மாநகரசபை அறிந்திருக்குமா. என்பது புரியாத ஒன்றாகவே இருக்கின்றது. நாள்தோறும் எத்தனை நூறு ரூபாய்கள் இங்கு மட்டுமல்ல அதன் எல்லைக்குட்பட்ட ஏனைய தரிப்பு நிலையங்களிலும் கபளீகரம் செய்யப்படுகின்றன என்பது எவருக்குமே விசனத்தை உண்டுபணணக் கூடியதே.

சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள் என்பவற்றின் பாவனை மிக உச்ச எண்ணிக்கையை அடைந்து விட்டிருக்கும் சூழலில் இந்தளவு தொகை அறவிட நியாயமானதன்று. மாநகரசபையின் அறிவித்தலின்படி கணக்கிட்டால் ஒவ்வொரு சைக்கிள்களுக்கும் ஒவ்வொரு ரூபாவும் மோட்டார் சைக்கிள்களுக்கு தலா மூன்று ரூபாவும் மேலதிகமாக அறவிடப்படுவது என்பது எத்தனை நூறு ரூபாய்களை சுருட்டிக்கொள்வதாகும்?

இப்போது அறவிடப்படும் தொகை , ஒரு சில சைக்கிள்கள் பாவனையில் இருந்தும் தரிப்பு நிலையங்களும் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கலாம். ஏனெனில் அதற்கென ஒருவரோ இருவரோ காத்திருப்பதும் அதற்குரிய உழைப்புகள் ஈடுசெய்யப்படவும் அவ்வளவு தொகை தேவையாக இருக்கலாம். ஆனால் அதிக எண்ணிக்கையானோர்- அதிலும் நாளுக்கு மூன்று தடவைகள் கூட நோயாளர் களைப் பார்வையிட வந்து செல்லவேண்டிய நிலை உள்ள போது அறவிடப்படுவது பகற்கொள்ளையாக இருக்காதா?





## சிறுகதை

# நிறைவின் பின்னணியில்...

அனைவரும் வேகமாக ஓடிக்கொண்டிருந்தனர். இவர்கள் பிள்ளையார் கடைச் சந்திக்குத்தான் ஓடுகிறார்கள் என்பதை ஊகித்துக் கொள்ள முடிந்தது. இவர்களுடைய அவசரத்தைக் கூடக் கவனியாது அமுதனும், மதியும் ஏதோ சுவாரசியமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஏன் ஓடுகிறார்கள்? என்பது தான் இவர்களுக்குப் புரியவில்லை. பெரிசுகள் முதல் சிறுசுகள் வரை ஆலமர நிழலுக்குத் தான் விரைந்து கொண்டிருந்தனர்.

இவர்களின் வேகம் மதியையும், அமுதனையும் விட்டு வைக்கவில்லை. திடீரென மின்னலாய் இவர்கள் உடலுக்குள் ஆர்வம் புகுந்து கொண்டதோ தெரியவில்லை. சைக்கிளை எடுத்துக் கொண்டு இருவரும் என்னவென ஆராயப் புறப்பட்டனர்.

“நாளைக்கு வகுப்புக்குப் போக எங்கட ஆங்கில வாத்தியார் முழங்கித் தள்ளுவார். அதுக்குக் காது கொடுக்கேலாது இப்பவே போய்ப் பார்த்தால் தான் சரி” என அமுதன் கூற,

“ஓமடா” என்ற மதி சைக்கிள் மிதியை எழுந்து உழக்கினான். அவனது வேகம் யாருக்குப் பிடித்ததோ? அது அவனது சைக்கிளுக்குப் பிடிக்கவில்லை. சைக்கிள் செயின் விலக, மேலெழுந்தவன் எவ்வளவு வேகமாகக் கீழ் நோக்கி விழுந்தானோ என்பதை அந்தக் கணப்பொழுதில் அமுதனால் உணர முடியவில்லை. வேதனை வரும்போதெல்லாம் “அம்மா” எனத்தான் அனைத்து ஜீவராசிகளும் அழைக்கும். ஆனால், மதியினது முகத்தைப் பதம் பார்த்தபோது, “அமுதன்...” என்றவாறே, அவன் நிலை குலைந்து, வீதியோரமாக விழுந்தான். அதிர்ச்சியால் மீள முடியாத அமுதனுடைய உடல் பதைபதைத்தது, கைகள் நடுக்கமெடுத்தன. மதிக்கருகில் ஓடியவன் அவனைத் தூக்கி,

“என்னடா மதி” எனும் போது, அமுதனால் தனது கண்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தனது கைக்குட்டையை எடுத்துக் கட்டும் போது, மதி கைக்குட்டையை நேற்றுத் தனக்குத் தருமாறு கேட்டது நினைவுக்கு வர, அவ்வேதனையும் அவனைத் தாக்கியது.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மதிக்கு ‘தாயாகத் தாலாட்டுப் பாடவும்’, ‘தந்தையாகத் தடவிக்கொடுக்கவும்’, அக்காவாக ஆறுதலளிக்கவும்’, ‘தங்கையாக குறும்புப் பேச்சால் சிரிக்க வைக்கவும்’, ‘நல்ல தாதியாக வேதனையைப் போக்கவும்’ அவனருகே அமுதன் காத்துக் கிடந்தான். கண்விழிக்கும் போதெல்லாம் அவனது தலையைத் தடவியவாறு சாய்ந்திருப்பான். அந்த நாட்களில் அமுதன், இவனால் உணவுகளைக் கூட மறந்திருந்தான். ஆனால், வேளா வேளைக்கு மருந்து கொடுக்கவும் வேண்டாமென்று மதி உணவுத் தட்டைத் தட்டும் போதெல்லாம், அன்பு கலந்த கண்டிப்புடன் “டேய் கதைய விட்டிட்டுச் சாப்பிடு, நீ நல்லா உடல் தேறி வந்தால் தானே எனக்குச் சந்தோஷம்” எனக் கூறி, மதியின் வாயை அவனையறியாமலே இவனுக்காய் உணவைத் தன்னுள் அடக்கிக் கொள்ளவும் வைப்பான்.



இரவிரவாய்ப் புரண்டு புரண்டு படுத்த மதி, நித்திரையின்றித் தவித்தான். சூரியன் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கிறான் இப்போதைக்குத் தன்னை வெளிப்படுத்த மாட்டான் என்பதைக் கைக்கடிகாரத்தைப் பார்த்த போது உணர்ந்து கொண்டான்.

இரவுகள் நீண்டன. படுக்கை முள்ளாய்க் குத்தியது. மதியினது வேதனையின் முனகல், அமுதனை உறங்கவிட வில்லை. அமுதன் எழுந்து, அருகிலமர்ந்து, மெதுவாக அவனது மேனியில் கையைவைக்க அவன் பயந்திருக்க வேண்டும். இவ்வளவு நேரம் அவன் விழித்திருந்தது மதிக்குத் தெரியாது. மதி திடீரென விம்மியழத் தொடங்கினான். காரணத்தை உணர அமுதனால் முடியவில்லை. “என்ன நடந்திட்டு தெண்டு இப்ப அழுகிறாய், வேதனையாய் இருக்கா, இல்ல நான் ஏதாவது துன்பப் படுத்திட்டனா”

எனக் கேட்க, மதியின் அழுகை பெருகிக் கொண்டு போனதே தவிர, குறைவதாகத் தெரியவில்லை.

“டேய்.......”

அமுதனது அதட்டல் என்னவோ அவனது மனதில் ஊசியேற்றியது போல் இருந்திருக்க வேண்டும். அவன் அமைதியானான்.

“டேய்... அமுதன் உன்ர படிப்பையும் விட்டிட்டு என்னோட ஆறு நாளாய் நிக்கிறாய், எனக்காக எவ்வளவு கஷ்டப்படுகிறாய், இதுக்கு நான் உனக்கு என்னடா கைமாறு....” எனத் தொடங்கும் போது, அமுதன் அவனது வாயைப் பொத்தியபடி,

“எனக்கும் உனக்கும் என்ன பிரிவு நானும் நீயும் ஒன்றடா ஒரே இரத்தம், ஒரே ஊர், ஒரே உறவு எமக்குள் பிரிவென்ற வார்த்தைக்கு இடமளிக்கக்கூடாது இடமும் இருக்காது எனக்கு நீயும் உனக்கு நானும் வாழுறம் கவலையை விடு” எனத் தனது கலங்கிய விழிகளைத் திருப்பிக் கொண்டான். படுக்கைகளைச் சரிசெய்து விட்டு இருவரும் படுத்துக் கொண்டனர். சிறிது நேரத்தில் தம்மை மறந்து, வேதனையிலிருந்து விடுபட்டு, இல்லை சற்று நேரத்திற்கு தம்மை அதிலிருந்து ஓய்வாக்கிக் கொண்டனர்.

ஏதோ ஊர்வது போன்ற உணர்வை அமுதன் தனது மேனியின் கூச்சத்தால் அறிந்து கொண்டான். விடிவெள்ளி வானில் தோன்றியிருந்தாலும், இவர்களுடைய இடத்தில் வெளிச்சம் தன்னை நிலைப்படுத்த இருளிடம் நீண்ட நேரமாகக் காத்திருக்க வேண்டியிருந்தது. அமுதனுக்குத் தனது கைகளால் தொட்டுப் பார்க்கும் சக்தி அப்போது எழவில்லை. அவனது மனம் ‘பாம்போ..., பல்லியோ..., மட்டைத் தேளோ....?’ என வரிசையாகக் கேட்டுக்கொண்டே சென்றது. இப்போது அந்த உணர்வு முதுகுப்புறத்திலிருந்து கழுத்தை அண்மித்திருந்தது. அவனால் இதனைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கூச்சலிடவும் அவன் மனம் விரும்பவில்லை. பொறுமையை இழந்தவன் மெதுவாகக் கையை நகர்த்தித் தீப்பெட்டியை எடுத்த போது தான், மாலையிலேயே ஏற்றிவைத்த ‘லாம்பு’ மூலையில் சிணுங்கிக் கொண்டிருப்பது கண்ணில்பட்டது. நல்ல காலம் கைக்கெட்டக் கூடியதாக இருந்ததால் விளக்கை உசார்ப் படுத்தினான். வெளிச்சத்தைக் கண்ட இருளெல்லாம் கிடைத்த இடைவெளி களினூடாக ஓடி ஒளிந்து கொண்டன. வெளிச்சம் தனது அதிகாரத்தை அறை முழுவதும் பரப்பிக் கொண்டது. இதைக் கண்டதும் பாம்பு ‘ஆளைவிட்டால் போதும்’ எனச் சொல்லாமல் சொல்லி ஓடி மறைந்தது. அமுதனை விட்டுத் தூக்கம் தூர விலகியிருந்தது. ‘எங்களைப் போன்றவர்களைத் தான் கடவுள் கஷ்டப்படுத்துகிறார்’ என இழையோடிய அவனது சிந்தனை மீண்டும் மங்கத் தொடங்கியிருந்தது. மீண்டும் கண்விழித்த போது, சூரியன் தனது கைகளை நீட்டி “எழும்படா” என்று தட்டுவதாக எண்ணிக்கொண்டான். மதி உறங்குவதைப் பார்த்து, “நீ வாழ்ந்தால் எனக்குச் சந்தோசம் தானே” என அவன் மனம் சொல்லியது.

ஆறு நாட்கள் நரகத்தில் கழித்த வேதனையுடன் இருவரும் தங்ககத்திற்கு வந்து சேர அங்கே நகுலன் கம்பி மீசையைத் தடவியவாறே ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருந்தான். இவர்களைக் கண்டதும் யாரையோ புதிதாக வரவேற்பது போல் “வாங்கோ... வாங்கோ...” எனக் கதிரையை எடுத்துப் போட்டு விட்டுத் தேநீர் எடுத்துவரப் புறப்பட்டான். தேநீருடன் திரும்பியவன்,

“டேய் இது எல்லாம் காயமாடா? அவனவன் தலையில்லாமல் ஏதோ எல்லாம் செய்யிறானாம்”

என்ற போது தம்மை மறந்து மூவரும் சிரிப்பில் ஆழ்ந்தனர். நீண்ட இடைவெளியின் பின் அன்று தான் அவர்களது அறை, சிரிப்பின் ஓசை கேட்டு மீண்டும் விழித்துக் கொண்டது. மதி தேநீரைப் பருக, நகுலன் அவனது காயத்தின் வடுக்களைத் மெதுவாகத் தடவ, அது அவனுக்கு ஆறுதலாக இருந்தது. நடந்து முடிந்த சம்பவத்தை அமுதனே ஆரம்பித்தான். “டேய்... பிள்ளையார் கடைச் சந்தியில என்ன நடந்தது? அதுக்குப் போய்த்தானே அம்மானுக்கு இந்தப் பரிசு கிடைச்சது” எனக் கூறி, மதியினது தோள்களிலே கைகளை வைத்தவாறு நின்று கொண்டிருந்தான்.

“அதடா எங்கண்ட கரியன் தான்”

“ஆற்றா ” என மதி இழுக்க,

“மச்சான் ,உனக்கு தலையில அடிபட்டதா.....?”

என நகுலன் தொடர்ந்ததை விளங்காத மதி ஏன்

என மீண்டும் ஒரு கேள்வி கேட்டான். புரிந்துகொண்ட அமுதன் அவனது காதில் மெதுவாக குசுகுசுத்தான்.

“இப்ப என்னால ஓடிப்பிடிச்சு உன்னோட விளையாட முடியாது என்ற தைரியம்தானே உனக்கு” என்றான்.

நகுலன் , இவர்கள் ஊரில் இல்லாதபோது இடம்பெற்ற புதிய புதிய சம்பவங்களை ஒப்புவிக்க ஆயத்தமாக, அமுதன் அப்போதே மதிக்குக் கண்களைக் காட்டிவிட்டு சத்தம் இன்றி இருந்தான்.

“சிவா இருக்கிறானே.....அவனடா.... அண்டைக்குச் சந்தியில நின்று றோட்டில ஆரோ தவறிபோட்டுட்டுப்போன தேங்காயை எடுத்து, கையில வைச்சு, ஒரேயடியாய் கையால உடைச்சுவிட்டானாம். பிறகென்ன கூட்டமேகூடிவிட்டது. அன்று அவன் வகுப்பிற்கே வரவில்லை. வந்தவை போனவையெல்லாம் தேங்காயை வேண்டி இவனிட்ட குடுத்துத்தான் உடைச்சுக்கொண்டு போனவையாம். நான் வகுப்பு முடிஞ்சு வரேக்க, என்னடா கூட்டமென கண்களை விட்டுத் துளாவினேன். அங்க கொஞ்சப் பேர குருடர்களாக்கிக்கொண்டு நிண்டான்”.

“அது சரி அவன் இப்ப எங்க போட்டான்.

“தெரியல்ல”

“அவன் எண்டைக்குத்தான் போற இடம்சொல்லுறவன்”

என அமுதன் பற்களை நெருமிக்கொண்டான்.

> நீண்ட கரிய தேகமுடைய வீதியை அடைந்தான். மாலை எண்டதால் கூடுதிரும்பும் பறவைகளின் கூச்சலும் மந்தைகளின் நெரிசலும் ‘‘ரியூசன்’’ மாணவர்களின் இரைச்சலும் , வேலைவீட்டு வீடு திரும்பும் வாகனங்களின் ஓசையும், வீதியில் தேங்கிக் கிடந்தன.

“இருங்கடா ஒருக்கா வெளிய அவசரமாப் போகவேணும்’’ என்றவன் மேசையில் பரவிக்கிடந்த பொருட்களை எடுத்து வைக்க நேரமின்றி, ஏதோ கிணற்றுக் கட்டில் பிள்ளையைக் கிடத்திவிட்டு

**வி.தேவபானு**

வந்தவன் போல, உடைகளைக் கூட மாற்றாது , கலைந்த கேசத்தைத் தடவியவாறு புறப்பட்டான்.

நீண்ட கரிய தேகமுடைய வீதியை அடைந்தான். மாலை என்பதால் கூடுதிரும்பும் பறவைகளின் கூச்சலும் மந்தைகளின் நெரிசலும் ‘‘ரியூசன்’’ மாணவர்களின் இரைச்சலும் , வேலைவிட்டு வீடு திரும்பும் வாகனங்களின் ஓசையும், வீதியில் தேங்கிக் கிடந்தன. அப்போது “டேய் நகுலன்” என மரத்தடியில் ஒரு குரல் அவனது வேகத்தைத் தடை போட்டு நிறுத்தியது. இருமருங்கையும் பார்த்துவிட்டு “என்ன நிக்கிறியள்” “நீ வருவாய் எண்டு எங்களுக்குத்தெரியும், இந்த மன்மதனுக்காக காத்திருக்கின்றோம்” என்றது ஒரு குரல். “பகிடியை விட்டுவிட்டு....” என இழுக்க. “ நீ நிப்பாட்டு: மொக்கனுக்கு வைத்தியவேலை ஆறு, ஏழுநாளாய்க்கிடைச்சதாம்: வந்திட்டானா?” “ஓம்... வந்திட்டான்: நான் போகவேணும” என்றவன் நழுவிக்கொண்டான்.

மதிக்கு அவனது நண்பர்கள் இட்டபெயர்தான் ‘மொக்கன்’. அவனது கோபத்தையும், செயற்பாடுகளையும் வைத்துக் கொடுக்கப்பட்ட பட்டம். அதனை அவன் காவிக்கொள்ள வேண்டியே இருந்தது. ஆரம்பத்தில் வெறுத்தான். ஓரிருவர், ஏன்..? இப்போது அனைவரும் அவனை ‘மொக்கன்’ என்று தான் அழைப்பார்கள். கல்லூரியிலும் ‘மொக்கன்’ என்றால்தான் தெரியும்.

‘‘இந்த வேலையை அவனிட்டத்தான் குடுக்கவேணும்” என்பவர்களும்,

“இதுக்கு அவனிட்டத்தான் ஐடியா கேட்கோணும்” என்பவர்களும் ,

‘‘இதுகள் அவனுக்குத் தெரியக்கூடாது:தெரிஞ்சா பேப்பர் விக்காது” என்பவர்களும் உண்டு. இவற்றையெல்லாம் ஏனோ மதி பொறுத்துக்கொண்டான். இவனுக்கு படிப்பென்பது வேப்பங்காயைப் போன்றது. ஆனால் வேலையென்றால் அவனுடன் போட்டிபோட,



⇨

கல்லூரியில் எவருக்குமே தைரியம் வராது. எதற்கெடுத்தாலும் மதிதான் தேவைப்பட்டான். எல்லோராலும் பயன்படுத்தப் பட்டான். ஆனால், அவனது படிப்புக்கு உதவவோ, உந்துசக்தியாக இருக்கவோ எவரும் விரும்பவில்லை.

மதியை நினைத்து அமுதன் தினமும் நொந்து கொண்டேயிருந்தான். அவனை நல்ல நிலைக்கு கொண்டு வந்து , எல்லோருக்கும் மதி யாரென்பது தெரியவேண்டும்: அனைவரும் புகழவேண்டும்,அவன் பெயரை உச்சரிக்க வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டான். மதியினது பேச்சுக்கள் நண்பர்கள் மத்தியில் எழும்போதெல்லாம் அமுதனது முகம் கருமேகம் சூழ்ந்தவானம் போல் மாறுவதை அவனது நண்பர்கள் கண்டு கொண்டதில்லை. அவனது பட்டப்பெயரைக் கேட்கும் போதெல்லாம் தனக்கும் முகத்தில் அடிக்கிறார்கள் என நினைத்துக் கொண்டான். சம்மட்டியால் நெஞ்சில் அடித்தால் கூடத் தாங்கலாம். ஆனால் மதியைப் போய் இப்படியா....? திருப்பித் திருப்பிச் சொல்லியும் நண்பர்கள் மத்தியில் அந்த வார்த்தையின் பிரயோகம் குறையவில்லை. அதனைத் தற்போது அமுதனால் அழிக்க முடியவில்லை. என்றோ ஒரு நாள் அது என்னால் அழிக்கப்படும்; மதியின் அவசியம் தெரியவரும் என்பதை மாத்திரம் மனதில் அத்திவாரமிட்டுக் கொண்டே ஒவ்வொரு நாளையும் கடந்து கொண்டிருந்தான்.

மாலையில் தங்ககத்திற்கு வந்த சிவா அப்பிடியே சாப்பிடாமல் படுத்து விட்டான். பெரியசுமையை இறக்கியது போன்ற உற்சாகத்துடன் குளித்து விட்டு வந்த அமுதனுக்கு கோபம் கோபமாகத்தான் வந்தது.

'இவர் நாசா விண்வெளி நிலைய அதிகாரி இப்பதான் வேலை முடிச்சிட்டு நேரமில்லலாம அப்படியே ஓய்வெடுக்கிறார்' என மனதில் திட்டிய அவனது மனமே, 'நீ இப்படித்திட்டலாமா? இவன் உன் நண்பனல்லவா?' என உறுத்த 'சீ என்ன மனிதனடா எனக்குச் செருப்பால அடிக்க வேணும்' என எண்ணிக்கொண்டே அறையை அடைந்தான்.

மாத்திரைகளைக் கொண்டுவந்து மதியினது கைகளில் திணித்து விட்டு அவன் குடிக்கும் வரை பார்த்துக் கொண்டே நின்றான். ஏதோ அமுதன் திரும்ப, மாத்திரைகளை ஜன்னலூடாக எறிந்தான் இரண்டு போக மனமின்றி உள்ளே அமுதனிடம் தம்மைக் காட்டிக்கொண்டன. அமுதனது கைகள் மதியினது கன்னங்களுடன் இரண்டு, மூன்று தடவை பேசிவிட்டுத்தான் நின்றன. உள்ளே சென்று மீண்டும் மாத்திரைகளை எடுத்து, அவனது வாயினுள் திணித்து, அமுதனே நீரையும் ஊற்றினான். அவை உள்ளே போக மனமின்றி முட்டி மோதி மெதுவாக உள்ளிறங்கியது.

தரையை வெறித்தவாறு இருந்த மதியை நோக்கி,
"மன்னிச்சிடிடா, இந்தப் பாழாய்ப் போனவன் உனக்கு இந்த அடி அடிச்சிருக்கக்கூடாது, எனக்கு என்ன நடந்தது நான் பிழை விட்டுட்டன்" என கட்டியணைத்தவாறு அழுதான். "டேய் நீ அடிக்கிற ஒவ்வொரு அடியும் என்ர நன்மைக்காகத் தானே? எனக்கு அது நோகவில்லை. அதுக்குப் போய் அழுகிறாய்" என்றவன், அவனை எழுப்பி சாப்பாட்டை குழந்தைக்கு ஊட்டுவது போன்று பிசைந்து பிசைந்து ஊட்ட ஆறுதலான அந்த வார்த்தையின் பின், வேதனை களை ஓரளவாவது மறந்து, அமுதன் உண்டு கொண்டிருந்தான்.

பனிக்குளிர் சில்லென மேனிதடவ புரண்டவன் மதியை இன்னும் இறுக்கமாக அணைத்துக் கொண்டான். பூக்களின் மணம் காற்றிலே கரைந்து கொண்டிருந் தது. வாசலிலே இருந்த சூரிய காந்திமலர் ஆதவனின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தது. நித்திரைவிட்டு எழுந்த போது, இரவு அப்பிடியே படுத்தது நினைவுக்கு வர, சிவா தன்னை நினைத்துச் சிரித்துக் கொண்டான். சிவாவைக் கண்டதும் எழுந்த அமுதன் படுக்கையிலிருந்தவாறே அவனுடைய எதிர்காலத்திற் காக, மனிதனாக வாழ வைக்க, அவனது முன்னேற்றத்துக்காக ஒரு பிரசங்கத்தையே நடத்தி முடித்திருந்தான்.

நாளும் பொழுதும் மாற, மதியும் மாறினான். கணினிக் கல்விக்குத் தேர்வு செய்யப் பட்டான். அப்போதும் நண்பர்களது பேச்சு அமுதனைச் சுட்டது. "கணினிக்குப் போய் மொக்கன் என்னத்தச் சாதிக்கப் போறான்" அவனுக்காக அமுதன் தன்னால் இயன்ற வரை விட்டுக் கொடுப்புக்களையும், சுமைகளையும் தாங்கிக் கொண்டான். கற்றல் காலம் முடிவுற்று கணினிக் கல்வித் தேர்வுக்குத் தயாராக்கப்பட்டான். மதிக்கு அப்போதே தன் மீது நம்பிக்கை வந்துவிட்டது. பரீட்சைக்குச் செல்லுமுன் அமுதனிடம் சென்று,
"உன்னுடைய நீண்டநாள் ஆசையை நிறைவேற்றுவேன்" என்றவாறு பரீட்சைக்குச் சென்று விட்டான். பரீட்சை முடித்தவன் புன்னகை தவழ, அமுதனிடம் "எனக்கு நல்ல ரிசல்ட் வரும்" எனக் கூறினான்.

அன்று ஏனோ மதி வெளியே செல்ல மனமின்றிப் படுத்துக் கொண்டான். அமுதன் மட்டும்தான் சென்றான். கல்லூரி மாணவர்களின் பரபரப்பு அமுதனையும் தொற்றிக் கொண்டது. அவனும் காற்றாய்ப் பறந்தான். கல்லூரியை அடையும் போதே, "மதிக்குத்தான் நல்ல ரிசல்ட், அவனுக்குத்தான் இந்த முறை..." "மதி... மதி..." தான். எங்கும் ஒரே பேர் உச்சரிக்கப்படுவது, அமுதனது காதுகளை அடைந்தது. அவனது மனம் சந்தோச மேலீட்டால் துள்ளிக் குதித்தது. நிலை கொள்ளாது தவித்தது. முயற்சி வீணாகவில்லையெனும் திருப்தி, அந்த மகிழ்வுடனேயே தங்ககத்தை அடைந்தான்.

திடீரெனச் சந்தோசத்தை அறியவேண்டுமென நினைத்தவன், மேசைமீதிருந்த தண்ணீரை எடுத்து, முகத்தில் ஊற்ற நினைத்தான்; மனமின்றி..., பிறகும் ஏதோ நினைத்துவிட்டு தண்ணீரை மதியினது முகத்தில் ஊற்றினான். அவனது முகத்தில் நீரைவிடக் கோபமே அதிகமாக வழிந்தது. ஒன்றும் புரியாது விழிக்க மதியைக் கட்டியவாறு "மொக்கனுக்குத் தான் வெற்றி" என அவனது காதில் கிசுகிசுத்தான்.

மதியினது கணினிக் கற்கைநெறி விளம்பரப் பகுதியில் நீண்ட நேரமாக மூழ்கியிருந்த அமுதனை மேசைமீதிருந்து விழுந்து சிதறிய கண்ணாடிக் குவளை, நினைவுக்குக் கொண்டு வந்தது. நியாயங்களுக்காகக் கோபப்படுபவன் அன்று, ஏனோ பூனை மீது கூடக் கோபப்படவில்லை. ♦



## நீயும் நானும் வானமும்

நீ என்னிடம்
வானத்தை யாசித்தாய்
இங்கு வானம் என்பது
பொதுவுடமை அல்ல
தனியுடமை
வானத்தை தந்தேன்
எனது வானத்தில்
நிலவு சூரியன் நட்சத்திரங்கள்
இருக்கவில்லை
நீ நிலவை சூரியனை
நட்சத்திரங்களை
சிருஷ்டிக்கப் போவதாகச்
சொன்னாய்
ஆனந்தித்தேன்
அந்தவானத்திற்காய்
நான் என்னை மறந்தேன்
நீயும் அப்படித்தான்
நிலவுக்காக சூரியனுக்காக
நட்சத்திரங்களுக்காக
என்னில் இருந்தும்
உன்னில் இருந்தும்
எடுத்து கலந்தாய்
நானும் கொடுத்தேன்
நீயும் கொடுத்தாய்
ஒரு பொழுதில்
நிலவும் சூரியனும்
நட்சத்திரங்களும்
நிரம்பிய வானத்தின் கீழ்
நீயும்நானும்
என்னை நானும் உன்னை நீயும்
பார்த்துக் கொண்டோம்
நம் இருவரின் கண்களிலும்
துண்டுகள் இல்லாதிருப்பதை
உணர்ந்தோம்
விரல்களில்
சிலவற்றைக் காணவில்லை.
நாவிலும் துண்டுகள்
இருக்கவில்லை
இருவரின் இதயத்துள்ளும்
வலிகள் தெரிந்தது
ஏக்கம் பெருக்கெடுக்க
சுயத்தை யாசித்தபடி
வானத்தைப் பார்க்கிறோம்
பெருமூச்செறிந்து ●

## பிரிவு

உனது இடத்தை நிரப்ப
எவராலும் முடியாது
அது ஓர் அற்புதமான வெற்றிடம்.
யாரேனும் யாரேனுமொருவரை
நிர்ப்பந்தித்து இருக்கவைப்பின்
எஞ்சுகின்றது
ஒரு பாலை வெளியாகக் கூடும்.
ஜீரணிக்க முடியாதுஅதை
சோலைகளும் நதிகளும்
நட்சத்திரங்களும் கருகி மணக்கும்
அழகின் அவலம்
அதில் நிகழக் கூடும்.
உனது பிரிவில்
உனது சோலைகளில்
உலாவித்திரிகின்றேன்.
உனது நதிகளில்
நீராடுகின்றேன்
உனது நட்சத்திரங்களால்
பார்க்கின்றேன்.
அழுவதற்கோ வாடுவதற்கோ
உனது வெற்றிடத்தில்
எனக்கு இடமெதையும்
நீ விட்டுச் செல்லவில்லையே.
உனது இடத்தை
எவராலும் நிரப்பவே முடியாது
அது ஓர்
அற்புதமான வெற்றிடம் ●

பொன். காந்தன்



# குறுங்கதைகள் மூன்று

தூரன்



## பெருமை

தேர்தல் நேரம்
அந்த அரசியல்வாதி வேட்பாளர்வாக்காளரிடம் ஆதரவையாசிக்கும் யாத்திரையில் இருந்தார்.

ஒரு பிச்சைக்காரன் எதிரில் வந்ததும் அவன்அவனை நோக்கி வணங்கினார்.

ஆச்சரியத்தில் உறைந்த அவனும் அவரை வணங்கினான்.

பிச்சைக்காரனின் கைகள் அரசியல்வாதியின் அலங்காரக்கைகளை நேருக்கு நேர் சந்தித்தன.

பின் தனக்குத்தானே முணுமுணுத்துக்கொண்டது.

"ஏய்த்துப்பிழைக்கும் அரசியல்வாதிக்கு கைகளாக இருப்பதைவிட ஏந்திப் பிழைக்கும் இவனுக்கு கைகளாக இருப்பது எவ்வளவோ மேலானது."





## தேடல்

அந்த மகா கருமி இறந்துபோனான்.

சுடலையில் இறுதிக்கிரியைகள் நடந்துகொண்டிருந்தன.

வாய்க்கரிசி போடப்பட்டு , சில்லறைக்காசும் போடப்பட்டன.

குழிக்குள் இறக்கப்பட்ட சடலம்மண்போட்டு மூடப்பட்டது.....

இரவு நேரம் ..... மகாகருமியின் ஆவி புதைகுழியைச் சுற்றி எதையோ தேடிக்கொண்டிருந்தது. அதற்கு அது தென்படவில்லை.... தொடர்ந்து தேடியது..... களைத்தது.....

'மகனே .... என்ன தேடுகின்றாய்' என்றது ஒரு குரல்......

'வாய்க்கரிசி போடும்போது வெளியே விழுந்து விட்ட ஒரு சில்லறை நாணயத்தை....'என்றது ஆவி.

'அதை நான் அப்போதே எடுத்துவிட்டேன்.'என்றது அக்குரல்.....

'எனக்குரிய பணம் அதை எடுக்க நீ யார்' என்றது மகாகருமியின் ஆவி.....

'நான் தான் உன் அப்பனின் ஆவி'

என்றது அந்தக் குரலுக்குரிய கருமியான அந்த மகாகருமியின் தந்தையின் ஆவி.

## செல்வாக்கு

கோவில் வாசல். வாசலில் உண்டியல்.

பக்தர்கள் வருவதும்போவதுமாக இருந்தார்கள்.

உண்டியலில் சில்லறைகள் விழுந்து கலகலக்கும்சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது.

கோவில் வாசலில் உண்டியலில் இருந்து சில யார் தூரத்தில் கண்தெரியாத பிச்சைக்காரன் மனம் உருக கெஞ்சி குரலெழுப்பி யாசித்துக்கொண்டிருந்தான். அவன் முன்னே இருந்த பிச்சைக்குவளை வெறுமையாகக் கிடந்தது.



உண்டியலில் தொடர்ந்து நாணயங்கள் விழுந்துகொண்டிருந்தன. கோபுரத்திலிருந்து இதனை அவதானித்த இரு காகங்களில் ஒன்று மற்றதிடம் கேட்டது - பிச்சைக்காரன் கெஞ்சியும் ஒருவரும் ஒரு சதமும் போடவில்லை. கல்லுப்பிள்ளையார் கேட்காமலேயே உண்டியலில் காசு போடுகிறார்கள்' என்றது. மற்றக் காகம் 'மனிதன் சொல்லுக்கு இரங்கான் கல்லுக்கு இரங்குவான்' என்றது.

மனித இனத்தைப் பொதுப்படையாக அறிவது எளிதானது. ஆனால் மனிதன் ஒருவனைத்தனியாக அறிவது அவ்வளவு எளிதல்ல- - லா ரோஷபுக்கோ.



# உதிரம் உறைந்த மண்ணில் நடந்த மாணவப் படுகொலைகள்

**1995**ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ம் நாள் தமிழீழத்தின் துயர்படிந்த அந்த இருண்ட நாளை நினைத்துப்பார்க்கும் பொழுது, எம் நெஞ்சமெல்லாம் ஒரு கணம் நடுங்குகின்றது!

ஆம்.... அந்தப் படுகொலைகள் நடந்து முடிந்து ஏழு வருடங்கள் ஓடிவிட்டன! எப்படித்தான் அந்தத் துயர் படிந்த, உதிரத்தையே உறைய வைத்த அந்த நாளை மறந்து விட முடியும்?

''அம்மா... இண்டைக்கு நான் தான் கூட்டுமுறை வேளைக்குப் போகவேணுமணை......."

''தம்பியை கெதியாய் வெளிக்கிடுத்தி விடணை........ நேரம் போயிற்றுது......."

''இண்டைக்குச் சிவபுராணம் படிக்கிற ரேண் எங்கடை வகுப்பம்மா.... அம்மா நான் நேரத்தோடை போகவேணும்....."

காலையில் வெள்ளைச் சட்டைகளுடன் புத்தகம் நிறைந்த பைகளையும் தூக்கிக் கொண்டு பள்ளிக்கூடத்தை நோக்கிக் குதூகலத்துடன் துள்ளிக்கொண்டு ஓடிச் சென்றவர்கள்........ஒன்றா.... இரண்டா...? இருபத்தியிரண்டு மாணவர்களைக் குண்டுகள் வீசிப்பலியெடுத்த அந்தத்துயரம் நிறைந்த நாட்களைத்தான் எப்படி மறக்க முடியும்.

வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள கடலோரக் கிராமமான நாகர்கோயில் மகா வித்தியாலயத்தில், அன்று வெள்ளிக் கிழமை சிவபுராணம் பாடி முடிந்ததும் வகுப்புக்கள் ஆரம்பித்த கையோடு நடந்துமுடிந்த அந்தக் கோர நிகழ்வுகளை மனிதர்களின் கனத்த இதயங்களில் இருந்து எப்படித் தூக்கி எறிந்துவிட முடியும்?

அன்று பாடசாலை ஆரம்பித்து மாணவர்கள் குதூகலத்துடன் வகுப்புக்களில் கற்றுக்கொண்டிருந்தபோது திடீரெனக் கேட்ட 'கிபிர்' விமானங்களின் உறுமலால் அந்தப் பள்ளிக்கூடமே ஒருகணம் அல்லோலகல்லோலப்பட்டது! கண்மூடி விழிக்குமுன்னே வானத்தில் வட்டமிட்ட அந்த நான்கு குண்டுவீச்சு விமானங்களில் இருந்தும் பாடசாலையை நோக்கிக் குண்டுகள் வீசப்பட்டன..... அதுவரை நிம்மதியாகப் படித்துக்கொண்டிருந்த மாணவர்கள் பதறித் துடித்தபடி அங்குமிங்கும் சிதறி ஓடத் தொடங்கினர்.

''பிள்ளைகள் ........எல்லோரும் விழுந்து படுங்கோ....."

அங்கு பதறித் துடித்துக் கொண்டு நின்ற அதிபரினதும், ஆசிரியர்களினதும் கூக்குரல்கள் எவருடைய காதுகளிலும் விழுந்த

**வல்வை ந. அனந்தராஜ்**

தாகத் தெரியவில்லை.

அங்கே எழுந்த மாணவர்களின் மரண ஓலம், நாகர்கோயில் கிராமம் எங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

ஆம்!.... உதிரம் உறைந்த அந்த மண்ணில் நடைபெற்று முடிந்த அரச வான்படைகளின் மிலேச்சத்தனமான தாக்குதலில் கொல்லப்பட்ட மாணவர்களின் சிதறிய உடல்களின் பகுதிகள் மரங்களிலும், கோயிலின் சுவர்களிலும் வீதியோரங்களிலும் ஒட்டிக் கொண்டிருந்தன.

அவர்களது இரத்தம் தோய்ந்த புத்தகப் பைகள் அங்குமிங்குமாகச் சிதறிப் போய்க்கிடந்தன!

இரண்டு கால்களையும் இழந்து துடித்துக்கொண்டிருந்த மாணவி ஒரு புறத்திலும், கண்களை இழந்து கதறிக் கொண்டிருந்த மாணவர்கள் இன்னொருபுறத்திலும்: நெஞ்சிலும் தலையிலும் குண்டுகள்பாய்ந்து குருதி வடிய குற்றுயிராகக் கிடந்து துடித்துக்கொண்டிருந்த மாணவர்கள் இன்னொரு புறத்திலும், பேச்சும், மூச்சும், உணர்வும் இழந்து விழிகளை மூடிவிட்ட மாணவர்களின் உடலங்கள் இன்னொரு புறமுமாக அந்தப்பள்ளிக் கூடத்தின் சூழல் எங்குமே மாணவர்களின் பிணக்காடாக இருந்து நெஞ்சையே ஒரு கணம் உலுப்பிக் கொண்டிருந்தது.

எதிர்காலக் கனவுகளை நெஞ்சில் சுமந்து காலையில் மகிழ்சிகரமான ஒரு கற்றலுக்காகத் துள்ளிக் குதித்து வந்த அந்த மாணர்களில் இருபத்தியிரண்டு சிறுவர்களை அந்த ஒரு மணித்தியாலயத்திற்குள் துவம்சம் செய்து அழித்த சிறிலங்கா அரசின் நாகரீகமற்ற கண்மூடித் தனமான தாக்குலால் உலகமே ஒரு கணம் அதிர்ந்தது.

சர்வாதிகாரி கிட்லரின் போரியல் வரலாற்றில் கூட என்றுமே நடந்திராத கொடூரம் சிறிலங்காவில் நடந்தது. நவாலித் தேவாலயத்தில் இருநூற்றி நாற்பது அப்பாவி களை விமானக் குண்டுவீச்சில் அழித்தவர் களுக்கு,

இந்து ஆலயங்களைக் குண்டு வீசி நாசம் செய்தவர்களுக்கு,

ஓ, சாவகச்சேரி நகரத்தையே குண்டுவீசி அழித்தவர்களுக்கு ..... இது பெரிதாகத் 'தெரிந்திருக்காது.

அந்த மிலேச்சத்தனமான தாக்குதலை சர்வதேசம் கண்டித்தது!

மனித நேயப்பணிகளை மேற்கொண்டிருந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் கண்டித்தன.

''சிறிலங்கா அரசு வான்படைகளின் மன்னிக்கப்பட முடியாத மனித உரிமை மீறல்கள்....." என்று சர்வதேச மன்னிப்புச்சபையே கண்டித்த போதும், சிறிலங்காவின் அப்போதைய பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அநுருத்த ரத்வத்தை மட்டும்.

''நாகர் கோயிலில் எந்தவொரு பள்ளிக்கூட மாணவனும் கொல்லப்படவில்லை.... திலீபனின் நினைவு தினத்தைக் கொண்டாடி ஆர்ப்பாட்டம் செய்த புலிகளில் ஒரு சிலரே அன்று கொல்லப்பட்டனர்.

என்று விடுத்த அறிக்கையைக் கண்டு சர்வதேசம் நகைத்தது!

அந்தக் கொடூரம் சிறிலங்கா அரசின் கபடத்தனத்தையும், அரச பயங்கரவாதத்தையும், உலகுக்கு வெளிச்சம்போட்டுக் காட்டியது!.

ஈழத்தமிழ் மக்களின் வரலாற்றில் துயர் படிந்த அந்த நாகர் கோயில் மாணவப் படுகொலையின் 7வது ஆண்டின் முடிவிலும் கூட துயர்மறையாத நினைவுகளுடன் மரணித்துப் போன அந்த மக்களின் மனதில் நீங்காது இடம்பெற்ற அந்தப் பிஞ்சுகளின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதைத் தவிர இப்போதைக்கு எமக்கு வேறு வழி இல்லை.

# போராட்ட உணர்வு பொங்கியெழப் பாடும் தெலுங்குக் கவிஞன்

*"**கத்தார்**" என்று ஆந்திர மக்களால் அழைக்கப்படும் கும்மாடி விட்டலுக்கு 48 வயதாகிறது. அரசியல் கருத்துக்களை உரத்துச் சொல்பவர் கத்தார். "எல்லா கலைவடிவங்களின் தாயக மக்கள் போராட்டம் இருக்க வேண்டும். மக்களிடமும், ஒடுக்குமுறைக்கு எதிரான அவர்களின் போராட்டங்களிலும் ஒரு கலைஞன் அக்கறை செலுத்தாவிட்டால் அவன் சரித்திரத்தின் குப்பைத்தொட்டியில் தூக்கிஎறியப்படுவான்" என்று முழுங்குகிறார் கத்தார்.*

*கத்தார் மக்களின் இதயத் துடிப்புக்கு குரல்கொடுக்கிறார். ஆந்திரப் பிரதேசத்தின் நாட்டுப்புற கலைவடிவான "ஒகு கதா" என்ற வடிவத்தில் தனது பாடல்களை அமைத்துக்கொள்கின்றார். மொழி எல்லைகளைக் கடந்து செல்லக் கூடிய ஓர் ஊடகம் இது.*

*1969ல் நடந்த ஸ்ரீகாகுளம் எழுச்சிமுதல் கடந்த சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக "ஜன நாட்டிய மண்டலி" என்ற குழுவை நடத்தி வருகிறார். அவரும் அவரது குழுவினரும் இந்த அமைப்பின் மூலம் ஆந்திரப் பிர தேசத்திலுள்ள விவசாயிகள், தலித்துகள்,மற்றும் பெண்கள் இயக்கங்களையும் தங்கள் பக்கம் ஈர்த்து வருகின்றனர். வலுவான அமைப்பு இல்லாவிட்டால் கத்தாரே இல்லை என்கிறார் அவர். "கலை கலைக்காகவே" என்று கூறும் பாரம்பரியத்தில் வந்தவர்கள். கலையில் எதற்காக அரசியலைக்கொண்டுவர வேண்டும் என்று கேட்கின்றனர். "அரசிளல் இல்லாத காலையை எனக்கு காட்டுங்கள்." என்று கத்தார் அவர்களையே திருப்பிக் கேட்கின்றார்.*

*கத்தார் மாற்றுக் கலாச்சாரத்திற் குரல்கொடுப்பவர். இந்த மாற்றுக் கலாச்சாரத்தைச் சார்ந்த கலை வடிவங்கள் அங்கீகரிக்கப் பட்டதில்லை. அத்துடன் அவை பிரதான வெகுசன கலாச்சாரத்தால் புறக்கணிக்கப்படவும். மறக்கப் படவும் பட்டுள்ளன.*

*போராடுவதுதான் இயற்கையின் நியதி என்கிறார் கத்தார். "மண்ணில் பாதிக்கப்பட்ட ஒரு விதை சுதந்திரமாக வெளியே வருவதற்காக போராடுகிறது. சிறு செடியாக முளைவிடுகிறது. இலைகளை அணிந்துகொள்கிறது. பழங்கள் தருகிறது. அது இறப்பதற்கு முன்னால் கோடிக் கணக்கான விதைகளை ஈனுகிறது" என்கிறார் கத்தார்.*

*நிறுவனத்தின் அடக்குமுறைக்கு வளர்ச்சியும் போராட்டமும் (கத்தாரின் அகராதியில் இரண்டு சொற்களுமே ஒரே பொருளைக் குறிப்பவைதான்.) ஆளாகத்தான் வேண்டியிருக்கிறது.*

*"அடக்குமுறையை எதிர்க்கும் போது மக்கள் தியாகங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. போராட்டம் வீரர்களை உருவாக்குகிறது. தங்களுக்கு இனியவர்கள் மரணமடையும் போது ஒரு கலைஞன் ஒடுக்கப்பட்டவர்களிடையே நம்பிக்கையை உண்டாக்க வேண்டும்" என்கிறார் கத்தார்.*

*இதுபோன்ற போராட்டங்களில் இறந்தவர்களைப் பற்றி கத்தார் இயற்றிய ஒரு பாடல் இது.*

*விவசாயிகள் கூலிகளின் குழந்தைகளே எல்லாவழிகளிலும் அடக்கப்பட்ட மக்களுக்கு குழந்தைகளே.*

*நீங்கள் போராட்டத்தின் பாதையைக் காட்டியிருக்கிறீர்கள் என் அன்பிற்குரிய குழந்தைகளே நன்றிஷெஷெ*

*1991ல் நடைபெற்ற விவசாயிகள். உழைப்பாளிகள் கூட்டத்தில் இப்பாடல் பாடப்பட்ட போது பிள்ளைகளை இழந்த நூற்றுக்கணக்கான தெலுங்கானா விவசாயிகள் கத்தாருடன் மேடையில் இணைந்து பாடினார்கள்.*

*மக்கள் இயக்கங்களுக்கு ஆந்திரப் பிரதேசத்தைப் பொறுத்தவரை "இது ஒரு இருண்டகாலம்" என்கிறார். எதிர்ப்பு இலக்கியமோ அல்லது அதுபோன்ற இதர கலை வடிவங்களோ வலுக்கட்டாயமாக -குறிப்பாக தெலுங்கான பகுதியில் என்னை பிரயாணம் செய்ய விடவில்லை, மக்களும் எனது பாடலைப்பாட அனுமதிக்கவில்லை ஜனநாட்டிய மண்டலி மீது பிரகடனம் செய்யப்படாத தடை ஒன்று உள்ளது. எனவே மக்கள் தங்களது பாடலை தாங்களே இயற்றிக்கொள்கின்றனர்" என்கிறார் கத்தார்.*

*இதுபோன்ற சூழலில் வெகு வெளிப்படையாக இல்லாத அரசியல் செய்திகளைக்கொண்டு தனது பாடலை உருவாக்கிப் பாடவேண்டிய சவாலை அவர் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தச் சவாலை மரபைப் பயன்படுத்துவதன் மூலமும் மரபுக்குள்ளிருந்தே அதை உடைப்பதன் மூலமும் கத்தார் ஒருவாறு சமாளித்துக் கொள்கிறார். உதாரணமாக 'தேர்தலில் மக்களிடமிருந்து ஓட்டுக்களை*



*யாசகமாகப் பெற்றுப் பதவிக்கு வந்த பின்னர் அவர்களை உதைத்து தள்ளிவிடும் உள்ளூர் அரசியல்வாதியைத் தண்டிக்கக் காளிதேவியை வேண்டுவது போல் தனது புதிய பாடல் ஒன்றை கத்தார் அமைத்துள்ளார்.*

*இதேபோல லஞ்சம் வாங்கும்பொலிசார். வெறும் தண்ணீரை இன்ஜெக்சனில் ஏற்றி படிப்பறிவில்லாத ஏழைகளுக்கு ஊசிபோட்டு ஏமாற்றும் டாக்டர்கள், ஏழை விவசாயிகளிடம் பணத்தைப் பெற்று அதைப் பணக்காரர்ளுக்குக் கடனாகத் தரும் வங்கி மேனேஜர் போன்றவர்களையும் தண்டிக்க வேண்டும் என்று அப்பாடல் கேட்டுக் கொள்கிறது. தீமையை வென்று நன்மையை நிலை நிறுத்தும் காளி கூட அரசியல் வாதிகளின் தீமைகளுக்கு எதிராகச் சக்தியற்று விட்டாள் என்ற செய்தியுடன் அப்பாடல் முடிகிறது.*

*1960 ஸ்ரீகாகுளம் போராட்டத்தினாலும் பின்னர் நக்ஸலைட் இயக்கமான மக்கள் யுத்த குழுவினாலும் பல கவிஞர்களும் எழுத்தாளர்களும் ஈர்க்கப்பட்டனர். 70-ன் மத்தியில் கொண்டபள்ளி சீதாராமையாவின் தலைமையில் உருவாகிய நக்ஸலைட் இயக்கத்தை தீவிரமாக ஆதரிப்பவர் கத்தார்.*

*நக்ஸலைட் இயக்கத்தின் தலைவரான கொண்டபள்ளி சீதாராமையாவின் வீழ்ச்சியைப் பற்றி சொல்லும்போது "தலைவர்கள் இயக்கத்துடன் வளரவேண்டும். அப்படி அவர்கள் வளரவில்லை என்றால் இயக்கம் அவர்களை ஒதுக்கிவிடும் என்கிறார் கத்தார். 1992ல் சீதாராமையா வெளியேற்றப்பட்டபோதும் கத்தார் தொடர்ந்தும் மக்கள் யுத்த குழுவை ஆதரித்து வருகிறார். ஆந்திர பிரதேசத்தில் கிராமங்களில் நிலவி வந்த நிலபிரபுத்துவ உறவுமுறைகளை அவ்வமைப்பு பெருமளவு மாற்றியமைத்துள்ளது" என்கிறார் கத்தார். "நானும் எனது சக தலித்துக்களும் கிராமத்தில் தலைநிமிர்ந்து நடக்க முடிகிறது. எனில் இதற்கு நாங்கள் கட்சிக்குப்பெரிதும் கடன்பட்டிருக்கின்றோம்" என்கிறார்.*

*"மக்கள் யுத்தகுழு மக்களின் ஆதரவை இழந்துவருவதுடன் வன்முறையிலும் பெருமளவு, ஈடுபட்டுவருகிறதே" என்று கேட்டால், அதற்கு கத்தார்மக்கள் யுத்தக் குழுவை ஆதரிக்காவிட்டால் பின் ஏன் கிராமப்பகுதிகளுக்கு எல்லைக்காவல் படை போன்றவற்றை அனுப்ப வேண்டும்? அது ஆதரவை இழந்துவருகிறது என்றால் அது அப்படியே செல்வாக்கிழந்து போகும்படியாக அதை விடவேண்டியதுதானே?" என்று திருப்பிக் கேட்கிறார்.*

*ஜூன் 21 முதல் ஆந்திர பிரதேச அரசுமக்கள் யுத்தக் குழுவின் மீது இருந்த தடையை தற்காலிகமாக நீக்கியுள்ள நிலையில் ஏதேனும் மாற்றங்கள் உண்டா?*

*"தடையை நீக்கியது ஒரு தமாஸ் தடை நீக்கப்பட்ட அன்றே நால்கொண்டா மாவட்டத்தில் ரமணாபேட்டையில் நான்கு இளம் விவசாயிகள் கொல்லப் பட்டுள்ளனர். கடந்த ஆறு மாதங்களில் மக்கள் யுத்தக்குழு எந்த வன்முறையிலும் ஈடுபடவில்லை. என்றாலும் என்.டீ.ஆர் அரசு பதவியேற்ற பின்னர் 49 பேர்கள் போலியான மோதல்களில் கொல்லப்பட்டுள்ளனர்." என்கிறார் கத்தார்.*

*"எந்தவிதமான நிபந்தனைகளுமற்ற தடையை நீக்க வேண்டும் என்கிறார் கத்தார். அறிவுஜீவிகள், மனித உரிமைக் குழுக்கள் மற்றும் கலைஞர்கள் அடங்கிய குழுவை நான் முதல்வரிடம் அழைத்துச் செல்வேன்" என்கிறார்.*

*இன்று தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுஜீவிகள், மற்றும் மாணவர்கள் பணி இதுதான். அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்க்க வேண்டும். பன்னாட்டுக் கம்பனிகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கத்தார் நினைக்கிறார். "கிழக்கிந்தியக் கம்பனி இந்த தேசத்தை 200 ஆண்டுகள் ஆண்டது. போதாதென்று இப்போது இந்த பன்னாட்டு கம்பனிகள் நம்மை மீண்டும் அடிமைகளாக்க முயற்சிக்கின்றன" என்றார் கத்தார்.*

**விபவி**

மனம் என்பது வயிறு போன்றது. அதற்குள் எவ்வளவைத் திணிக்கிறோம் என்பது முக்கியமல்ல... எவ்வளவு ஜீரணமாகின்றது என்பதே முக்கியம்- -ஆல்பர்ட்றாக்

# இளைய நாதம்



## சிறுவர் கதை

## ஒற்றுமையே பலம்

ஒரு ஊரில் இரண்டு நண்பர்கள். இருவரும் ஒரு நாள் தெரு ஓரமாகச் சென்று கொண்டிருந்தார்கள். அவ் வழியிலே பெரிய மரமொன்று விழுந்து கிடந்தது. அவர்களில் ஒருவர் இந்த மரத்தை நாங்கள் இருவரும் வீதியிலிருந்து அகற்றி விட் டுத்தான் போக வேண்டுமென்று கூற மற்றவரும் சரி என்று ஒருவர் மாறி ஒருவர் அவ்வழியில் கிடந்த மரத்தை அகற்றுவதற்கு முற்பட்டார்கள். ஆனால் இருவராலும் தனித் தனியாக அம்மரத்தை அவ்வழியி லிருந்து அகற்ற முடியாமற் போய்விட்டது.

இருவரும் திண்டாடிக் கொண்டிருந்த போது அவ் வழியால் ஒரு வழிப்போக்கர் வந்தார். இருவரும் திண்டாடிக்கொண்டிருப் பதைப் பார்த்துவிட்டு ''நீங்கள் இருவரும் என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள்'' என்று கேட்டார். அவர்கள் நடந்தவற்றைக் கூறி...

''வழிப்போக்கரே இதற்கு ஏதாவது கூறுங்கள்'' என்று இருவரும் ஒரு மித்த குரலில் கேட்டார்கள்.

''நீங்கள் இருவரும் தனித்தனியாகத்தானே இந்த மரத்தைத் தூக்கினீர் கள்'' என்று அந்த வழிப்போக்கர் அவர்களைப் பார்த்துக் கேட்டார்.

இருவரும் தலையசைத்தார்கள்.

''நீங்கள் இருவரும் ஒன்று சேர்ந்து தூக்கிப் பாருங்கள்'' என்றார் வழிப் போக்கர். அதன் பின்னர் இருவரும் ஒன்று சேர்ந்து அந்த மரத்தை அவ்வழியிலிருந்து அகற்றினார்கள்.

அதைப்பார்த்திருந்த வழிப்போக்கர் அவர்களுக்கு, ''எதையும் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து செய்தால்தான் நாம் எந்த ஒரு, காரியத்தையும் வெற்றி கொள்ளலாம் எப்போதும் எங்களுக்கு ஒற்றுமையே பலம்'' என்று கூறி அவ்விடத்திலிருந்து அகன்றார்.

காந்தன்

# வாரம் ஒரு குறள் அறிவோம்



நன்றி மறக்க கூடாது என்று எல்லோரும் சொல்லிக்கொள்கிறோமே தவிர, நம்மில் எத்தனை பேர் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். எத்தனைபேர் நன்றி செய்தவர்களை மறக்காமல் இருக்கின்றோம். நன்றி என்பது என்ன என்பதைத் தெரிந்துகொள்ளாததினால் தான் நாம் இந்த நிலைக்கு ஆளாகின்றோம். அடுத்தவர் எமக்குச் செய்யும் தீய செயல்களை மறக்காமல் இருப்பதற்கே நாம் பழக்கப்பட் டிருக்கிறோம். இதனால்தான் நல்ல செயல்களை மறந்துவிடுகின் றோம். இப்படியான நிலையிலி ருந்து நாம் மாறவேண்டும் என்பதையே வள்ளுவப் பெருந்தகை அழகான குறளில் அடித் துச் சொல்லுகின்றார்.

''நன்றி மறப்பது நன்றன்று: நன்றல்லது
அன்றே மறப்பது நன்று''

அதாவது நன்றிக்குரியதை நினைப்போம். நன்றல்லதை அன்றே மறந்துவிடுவோம்.

# வரலாற்றில் தடம் பதித்த விஞ்ஞானி



ஜோசஃப் லிஸ்டர்

''கால்பெரு விரல்லை ஒரு சின்னப் புண்தான் முதல்லை இருந்தது, அது இப்ப பெருசாகி, 'செப்ரிக்' ஆயிட்டுதெண்டு விரலை எடுத்தாச்சு'' எண்டு பக்கத்துவீட்டு அன்ரியோ அல்லது வேறை யாராவதோ கதைச்சதை கேட்டுருப்பியள்தானே.

இப்ப அப்பிடியெல்லாம் 'செப்ரிக்' ஆகாமல் இருக்குறதுக்குத்தான் இந்த 'ஜோசஃப் லிஸ்டர்' எண்டவர் நோய் நுண்மத்தடை (Antiseptic) எண்டொரு மருந்தைக் கண்டுபிடிச்சாராம்,

இவர் கல்லூரியில் நல்ல கெட்டிக்காரனா பெயரெடுத்து பிறகு டொக்டர் பட்டம் பெற்று 1861 ஆம் ஆண்டு 'கிளாஸ்கோ' எண்ட வைத்தியசாலையில் அறுவைச் சிகிச்சை டொக்டராக சேர்ந்தாராம். இப்பிடி அங்கே வேலைக்கு சேர்ந்து எட்ட வருசத்திலைதான் இந்த ( நோய் நுண்மத்தடை'யைக் கண்டு பிடிச்சாராம்.

இவர் இந்த மருந்தை கண்டு பிடிக்க முதல் பல நோயாளிகள் அறுவைச்சிகிற்சைக்கு பிறகு இறந்து போவதையும், தசைய ழுகல் (Gangrene) எண்ட கொடிய நோய் மக்களுக்கு பிடித்து அது மூலம் நோயாளிகள் இறந்ததையும் கண்டு திடுக்கிட்டுப் போனாராம்.

பிறகு தன்ரை இடத்தை சுத்தமா வைச்சிருந்தா, ஒரு வேளை கிருமி பரவாமல் இருக்குமெண்டு நினைச்சு சுத்தமா வைசிருந்தாராம். ஆனா அதுக்குப் பிறகும் இறப்புவீதம் குறைய வில்லையாம். வேறை டொக்டர்மார் வைத்திய சாலைக்கு வெளியிலை உள்ள நச்சுப்பொருள்தான் காரணமெண்டு சொல்லிச்சினமாம். இதுவும் அவருக்கு திருப்தி அளிக்கவிலலையாம்.

பிறகு, இந்த நோய்க் கிருமிகள் திறந்த (புண்)களுக்குள்ளாலைதான் போகுதெண்டு கண்டுபிடிச்சாராம். இப்பிடி கிருமிகள் போகக்கூடாதெண்டா அதுக்கு ஒரேவழி, அந்த புண்களுக்கு மேலாலை அந்த கிருமிகளை கொல்லக் கூடிய ஏதாவது மருந்ததை போடவேணும் எண்டு யோசிச்சுப் போட்டுத்தான் 'கிருமிகொல்லி'மருந்தாக 'கார்பாலிக் அமிலத்தை' பாவிச்சாராம். இதுக்கு பிறகு இறப்பு வீதம் குறைஞ்சுதாம். பிறகென்ன! விசயம் சூடுபிடிச்தோடை மட்டுமல்லாமல் சனங்கள் சாகிறதும் குறைஞ்சு போட்டுதெல்லே!

அப்ப இந்த மருந்தை கண்டு பிடிச்ச இந்த மனுசனுக்கு ஒரு சின்ன 'Thank' பண்ணத்தானே வேணும் 'Thank'பண்ணி ஒரு கடிதம் ஒண்டு அனுப்புங்கோவன் அவரின்ரை விலாசத்துக்கு!

அதுதானுங்கோ, சொர்க்க (நரக) லோகத்துக்கு!

கல்யாணி

## "மகாத்மா காந்தி"

அழகு அழகு முக அழகு
என்ன முகம் துறை முகம்
என்ன துறை பருத்தித் துறை
என்ன பருத்தி நூல் பருத்தி
என்ன நூல் வெள்ளை நூல்
என்ன வெள்ளை பல்லு வெள்ளை
என்ன பல்லு தாத்தா பல்லு
என்ன தாத்தா காந்தித் தாத்தா
என்ன காந்தி மகாத்மா காந்தி!

யோகரட்ணம்

## ரதனும் சுதனும்



**ரதன்:** நம்மைப்போல் விலங்குகளுக்கும் வியர்ப்பது உண்டா?

**சுதன்:** நம்மைப் போல்விலங்குகளுக்கும் வியர்ப்பது உண்டு. பாலூட்டிவகை உயிரினங்களில் பெரும்பாலான உயிர்களில் வியர்வைச்சுரப்பிகள் உண்டு. இதனால் வளர்சிதைமாற்ற கழிவுப்பொருட்களை வெளியேற்றுவது மட்டுமல்லாமல் உடல் வெப்பநிலை மாறாமல் செய்ய அவசியமாகின்றது.

மனிதனுக்கு உதடுகளைத்தவிர எல்லா இடங்களிலும் வியர்வைச் சுரப்பிகள் உள்ளன. உள்ளங்கை, உள்ளங்கால், அக்குள் பகுதி ஆகிய இடங்களில் மிக அதிகமான சுரப்பிகள் உள்ளன.

பூனை,எலி, சுண்டெலிகளுக்கு பாதத்தில் அதிகமான சுரப்பிகள் உள்ளன. முயலுக்கு உதட்டைச் சுற்றி வியர்ப்பது உண்டு. வெளவாலுக்கு தலையின் பக்கவாட்டிலும், அசைபோடும் விலங்குகளுக்கு (ஆடு,மாடு முதலியன) விரல் இடுக்கிலும், நீர்யானைக்கு புறச்செவிமடல் பகுதிகளிலும் அதிகமான வியர்வைச் சுரப்பிகள் உள்ளன.

நீர்வாழ் பாலூட்டிகளான திமிங்கலம் டால்பின் ஆகிய வற்றுக்கு வியர்வைச் சுரப்பிகள் இல்லை..

# நிறம் மாறும் நட்சத்திரங்கள்.

கிரேக்க தத்துவ ஞானியான அரிஸ்டாட்டில் ''சொர்க்கம், (ஆகாயம்) நேர்த்தியானது, மாற்ற மில்லாதது'' என்று நம்பினார் ஆனால் ஒரு நட்சத்திரம் மட்டும் சில நேரம் பளிச்சென்றும் பின்பு நிறம் மங்கிவிடுவதும் தெரிய வந்தது. இதற்கான காரணத்தை கிரேக்க வானவியல் அறிஞர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. மாறக அந்த நட்சத்திரத்தின் ஒளி மங்கும் போது சொர்க்கத்தின் (ஆகாயம்) நிறம் மட்டும் ஏன் மாறாமல் இருக்கிறது என்றும் கிரேக்கர்கள் குழப்பம டைந்தார்கள்.

மத்திய நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த அரேபியர்கள் நிறம் மாறும் இந்த நட்சத்திரத்தை ''அறிவின் ஒளி'' என்று வர்ணித்தார்கள். ஆனால் அந்த நட்சத்திரம் நகர்வதை கண்டு பயந்து அல்கோல் என்றும் அதற்கு பெயர் சூட்டினார்கள். அல் கோல் என்னும் அரபு சொல்லுக்கு பிணம் தின்னிக் கழுகு என்று பெயர்.

இப்படி நட்சத்திரம் ஏன் பிரகாசமாகவும் பின்பு நிறம் மங்கியும் விடுகிறது என்பதற்கான காரணத்தை 1782ம் ஆண்டு இங்கிலாந்தை சேர்ந்த இளைஞரான ஜான்குட் ரிக்ஸ் கண்டுபிடித்தார். காது கேளாத, வாய் பேசாத இவர் ''அல் கோல்'' ஒரு இரட்டை நட்சத்திரம் என்று கூறினார். அதனால் ''அல்கோல்'' சுற்றும் போது அதனிடையே இன்னொரு நட்சத்திரம் ஊடுருவி வருவதால் நட்சத்திரங்களின் நிறம் மங்குவதாக கூறினார்.

அவரது கூற்று நூற்றுக்கு நூறு சரியாகி விட்டது. பிரபஞ்சத்தில் ஏராளமான இரட்டை நட்சத்திரங்கள் உள்ளன. இதற்கு கூடுதலாக பல நட்சத் திரங்கள் ஒன்றாக இருப்பதும் உண்டு. இதன் காரணமாகத் தான் நாம் வெறும் கண்ணால் பார்க்கும் போது நட்சத்திரங்களின் நிறம் மாறி மாறி தெரிகின்றன என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சீலன்

## பார்வையற்றோருக்கு பிரெய்லி எழுத்து

பிரெய்ல் எழுத்து என்றால் என்ன வென்று தெரியுமா? பார்வையற்றவர்களுக்கு படிக்கவும், எழுதவும் கூடிய எழுத்துக்கே பிரெய்லி என்று பெயர். வெறும் புள்ளிகளைக் கொண்டே இவ்வெழுத்துக்கள் அமையும். அதாவது ஆறு புள்ளிகள் ஒவ்வொரு எழுத்திலும் மாறி மாறி அமைந்திருக்கும். பிரெய்லி டைப்ரைட்டர் உண்டு. பிரெய்லி சுருக்கெழுத்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

லூயில்பிரெய்லி என்ற பிரெஞ் சுக்காரர் ஒருவர் இருந்தார் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் இவர் வாழ்ந்தார். இவரும் எதிர்பாராத விபத்தினால் பார்வையற்றவரானார் பின்னர் நம்பிக்கையுடன் இவர் பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து பார்வையற்றவர் படித்துப் பயன்பெறும் படியாகப் புள்ளிகளைக் கொண்டு எழுத்துக்கள் கண்டுபிடித்தார். பார்வை இல்லாதோர் கைவிரல்களால் புள்ளிகளைத் அழுத்தி எழுத்த றிந்துபடித்தார் ''பிரெய்லி'' எழுத்து முறை அதைக் கண்டு பிடித்தவரின் பெயராலேயே விளங்குகின்றது.

# அறிந்துகொள்வோம்

(01) ஒன்பது கிரகங்களில் நான்காது . கிரகம் எது?
செவ்வாய்

(02) செவ்வாயின் சூழற்சி வேகம் எது?
24 கி.மீ.வினாடி

(03) எக்ஸ்ரேயை கண்டுபிடித்தவர் யார்?
வெஹர்ட்ஸ்

(04) அணுச்சிதைவு எப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டது?
1938ல்

(05) சூரிய மின்கலத்தில் உபயோகிக்கப்படும் முக்கிய மூலகம் எது?
சிலிகன்

(06) வீட்டு உபயோக மின்சாரப்பகிர்வுக்கு ஓடும் மின்னோட்டம் எது?
இரு திசை மின்னோடடம் (ஏ.சிமின்சாரம்)

(07) காற்று மண்டலத்தின் சராசரி அழுத்தம் எவ்வளவு?
76 செ.மீ. பாதசரத்தின் உயரம்

(08) ஒளிபுகாத கண்ணாடி ஊடகம் எது?
செராமிக் கண்ணாடி

(09) முதன்முதலான அணு நீர் மூழ்கிக் கப்பல் எது?
நாட்டிலஸ் ( அமெரிக்கா)

(10) அணுவின் உட்கருவில் பாயும் மின்விசையின் சக்தி எது?
நேர்மின் கதிர்கள்

☞ மனிதர்களின் இயல்புகள் ஒரேதன்மையானவையே-அவர்களின் பழக்கவழக்கங்கள் தான் அவர்களைப் பிரித்து பெரிதும் வேறுபடுத்துகின்றன. -கன்பூசியஸ்



# ஓயாத அலைகள் -01

வரவு - பதின்மூன்று

ராகவன் எழுதுகிறார்

மறுநாள் 22.07.96 மீண்டும் தரையிறங்கு கலம் கரையை நெருங்கும் போது கரும்புலிகள் மேஜர் மிதுபாலனும் மேஜர் சஜந்தனும் தாக்க சென்ற கரும்புலிப்படகு வெடித்துச் சிதறியது. மயிரிழையில் தப்பிய தரையிறங்குக்கலம் மேலும் படையினரை தரையிறக்கி விட்டது




ஆனால் இறங்கியவர்களின் நிலைமையோ வேறு விதமாக இருந்தது. களத்தில் முழு கொமாண்டோ படைப்பிரிவின் சிறப்புக் கட்டளை அதிகாரி காயப்பட்டுக் கிடந்தார். இறங்கியவர்களில் சுமார் 100 வரையானோர் புலிகளால் கொல்லப்பட்டனர்.




23.07.96 அன்று முல்லை முகாமை மீளப் பிடிக்க முடியாது என படைத்தலைமைக்கு விளங்கியது. புலிகள் கள நிலைமையை அப்படி மாற்றியிருந்தனர்.













26.07.96 அன்று தமது சகாக்களின் இறந்த சடலங்களையும் ஆயுதங்களையும் விட்டு விட்டு தரையிறங்கு கலம் மூலம் தப்பிச் சென்றனர் படையினர்.




இத்துடன் முல்லைச்சமரானது முடிவுக்கு வந்தது

புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மூலம் அரசுக்கு அறிவித்தனர். 1000 வரையான இராணுவத்தினரின் உடல்களை கையளிப்பதாக




அரசாங்கம் பொறுப்பேற்காத சடலங்களை புலிகள் அரசாங்க அதிபரிடம் கையளித்தனர். மக்கள் வந்து பார்வையிட்டனர். இறுதியில் உரிய மரியாதையுடன் அவை தகனம் செய்யப்பட்டன.







தலைவர் தனது கட்டளைத் தளத்திலிருந்து புறப்பட்டார்




முற்றும்

## வாசகர்களுக்கு

ஓயாத அலைகள் சித்திரக்கதைத் தொடர், தொடர்பான உங்களின் அபிப்பிராயங்களை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். தவறாது எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். அது எங்கள் அடுத்த முயற்சிக்கு உதவுவதாக இருக்கும்.

# குதூகலம்

அமெரிக்க அதிபர் கால்வின் கூலிப்ரிடம் ஒரு பெண் மணி கேட்டாள் ' உங்களின் பொழுதுபோக்கு என்ன?

'பதவியிலிருப்பது' என்று பதில் வந்தது.

✦✦✦✦✦✦✦

எனக்கு தெரிந்த மார்க்கட்டில் மனேஜர் ஒருவர் சரியான வாசகப் பித்தர் அதாவது நல்ல வாசகங்கள் கிடைத்தால் உடனே தன் அறையில் அதை குடியேற்றிவிடுவார். ஒருநாள் அவரின் அறைக்கு விஜயம் செய்தேன் வாசகங்கள் இல்லாத இடங்களைத் தேடினேன் எங்கும் வாசகம் எதிலும் வாசகம்.

அதில் என்னைக் கவர்ந்த வாசகம் இதுதான்

'இங்கு யார் வந்தாலும் நான் மகிழ்ச்சியடைகிறேன் சிலர் வரும் போது மகிழ்ச்சியடைகிறேன். மற்றும் சிலர் போகும் போது மகிழ்ச்சியடைகிறேன் நீங்கள் எந்த ரகமோ?'

✦✦✦✦✦✦✦

வெட்கப்படும் சுபாவம் கொண்ட ஒரே பிராணி மனிதன் தான் வெட்கப்பட வேண்டிய பிராணியும் அவனே! உலகப் புகழ் பெற்ற அமெரிக்க நகைச்சுவையாளர் மார்க்ட்வேயினின் கூற்று.

✦✦✦✦✦✦✦

பிரான்சுப் பேரரசர் பதின்மூன்றாம் லூயிடம் அறிவுக் கூர்மை மிக்க ரிச்சலு என்ற அமைச்சர் இருந்தார்.

அரசர் சொல்கிறாரே என்பதற்காக எதையும் ஒப்புக்கொள்ள மாட்டார். அரசரிடம் எதிர்த்துப் பேசுவார். இதனால் கடுப்படைந்த அரசர் எல்லோர் எதிரிலும் அமைச்சரை அவமானப்படுத்த வேண்டும் என்று நினைத்தார்.

அரசவை கூடியது வழக்கம் போல் அன்றும் அரசரின் பேச்சில் குறுக்கிட்டார் ரிச்லு. வாய்ப்பை எதிர் பார்த்திருந்த அரசர் ரிச்லு கன்னத்தில் ஓங்கி ஒரு அறைவிட்டார்.

எதிர் பாராது நடந்ததைக் கண்ட ரிச்லு அதிர்ந்தார். திருப்பி அரசரை அறைய முடியாது. அப்படி செய்தால் உடலில் உயிர் நிக்காது இந்த இக்கட்டான சூழலை சமாளிக்க வில்லை என்றால் இந்த அவமானம் காலத்திற்கும் நிலைத்திருக்கும் என்ன செய்வதென்று சிந்தித்தார். ஒரு நொடி நேரம்

உடனே ரிச்லு தன் பக்கத்திலிருந்த அமைச்சரை ஓங்கி அறைந்தார் 'அரசர் என்னை அறைந்து பக்கத்தில் இருப்பவர்களுக்குத் தறச் சொன்னார் நீரும் அப்படியே அனுப்பிவிடும்' என்றார்.

சிறிது நேரத்திற்குள் அரசர் தவிர அங்கிருந்த அத்தனைப் பேரும் பக்கத்திலிருந்தவரால் அறையப்பட்டார்.

கண நேரத்தில் நிலைமையை தனக்கு சாதகமாக மாற்றிவிட்ட அமைச்சர் ரிச்லுவின் திறமையை அரசர் பாராட்டினார்.

# தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு 'லீ' காட்டும் வழி







முன்பொருதடவை சிறிலங்காவுக்கு விஜயம் செய்திருந்த சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீ குவான் யூ,இலங்கைத் தீவின் அப்போதைய அழகையும்,செழிப்பையும் பார்த்துப் பிரமித்துப்போய்,சிங்கப்பூரையும் இலங்கைத் தீவுபோல் ஆக்கவேண்டும் என்று கூறிச் சென்றாராம். இது நடந்து சில பத்து ஆண்டுகள் கழிந்து விட்டன.இன்று சிங்கப்பூர் உலகமே மூக்கில் விரலை வைத்து நோக்குமளவுக்கு தன்னை அபிவிருத்தி செய்து கொண்டுள்ளது. கல்வி, பொருளாதாரம், தொழில் நுட்பம், வர்த்தகம் என எல்லாவற்றிலும் சிங்கப்பூர் ஓர் உச்ச நிலையில் இருக்கிறது.ஆனால் இலங்கைத் தீவு.......????

1965 ஆம் ஆண்டு, சிங்கப்பூர் தேசம், மலேசியாவிலிருந்து பிரி ந்துசெல்ல நிர்ப்பந்திக்கப்பட்டது. அப்போது சிங்கப்பூரிடம் எந்த வள ங்களும் இருக்க வில்லை.ஒரு வெறும் நாடாக அதனைக் கையேற்ற லீ குவான் யூ சிங்கப்பூரை அபிவிருத்தி செய்வது என்பதை ஒரு சபதமாகவே எடுத்துக்கொண்டார்.ஒரு சோசலிஸவாதியாக ஆட்சியைப் பொறுப்பேற்ற லீ,நாட்டை அபிவிருத்திசெய்வது என்ற சவாலை எதிர்கொண்டபோது,தன்னுடைய கொள்கைகளை தான் மாற்றியமைத்தேயாகவேண்டும் என்பதைக் கண்டுகொண்டார். நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்ளும வகையில் தனது சித்தாந்தங்களை மாற்றியமைத்துக்கொண்ட அவர்,மிகக் குறுகிய காலத்தில் சிங்கப்பூரை ஒரு சொர்க்காபுரி ஆக்கிக்காட்டினார்.ஒரு மூன்றாம் உலகநாடான சிங்கப்பூரை முதலாம் உலகுக்கு ஈடாக உயர்த்திக்காட்டிய லீ,தனது அனுபங்களை From Third World to First என்ற நூல்மூலம் பகிர்ந்து கொண்டுள்ளார்.

இந்த நூலில் அவர் சிறிலங்கா பற்றியும் ஒரு குறிப்பைக் கூறத்தவறவில்லை.

####

சனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில்,அவரைச் சந்தித்தபோது,"போர் வேண்டாம், பேச்சு மூலம் சமாதானம் காண முயலுங்கள்''எனத் தான் ஆலோசனை கூறியதாகவும்,அதற்கு சனாதிபதி "இலகுவாக வெற்றிபெற்று விடலாம்"என இறுமாந்து கூறியதாகவும் அவர் தன்னுடைய நூலில் குறிப்பிட்டுள்ளார்.அப்போது யதார்த்தம் உணர்ந்து ஒரு தேசத்தைக் கட்டியெழுப்பிய அனுபவத்துடன் அவர் கூறிய வார்த்தையைப் புரிந்து கொள்ளாத சிறிலங்கா அரசு, இன்று,அனுபவவாயிலாக அவரது கூற்றின் உண்மையை உணர்ந்து அமைதிவழியை நாடியுள்ளது.ஆனால் அன்று லீ கூறிய இந்தப் பாடத்தை அனுபவரீதியாக கற்பதற்கு சிறிலங்கா செலுத்தியுள்ள விலை.......???

####

ஏறத்தாழ இரு தசாப்தங்களுக்கு மேலாக கொடிய போரை நடாத்தி வந்த சிறிலங்கா அரசாங்கங்கள், இதில் அடைந்த இராணுவரீதியான தோல்விகளைவிட, இந்தப் போர் சிறிலங்காவின் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கம் அளப்பரியது.

ஆனாலும்,எப்படியும் தமிழர்களை ஒழித்தே தீரவேண்டும் என்கின்ற வைராக்கியத்துடன் போரைத் தொடர்ந்த சிறிலங்காவின் முன்னைய இனவாத அரசுகள்,இந்தப் போரின் வெற்றிக்காக எத்தகைய விலையையும் கொடுக்கத் தயாராக இருந்தன. இந்தப் போர்காரணமாக ஆயிரமாயிரமாய் அப்பாவித் தமிழ் உயிர்கள் பலியாகுவது பற்றியும்,தமிழர்களின் சொத்தழிவுகள் பற்றியும் மட்டுமன்றி, ஆயிரக்கணக்கில் சிங்கள இளைஞர்கள் போர்க்களத்தில் மடிந்துபோவது பற்றியும் சிறிலங்கா அரசுகள் கவலைகொள்ளவில்லை.

95ஆம் ஆண்டு புலிகளுடன் போர்தொடுத்த அப்போதைய சந்திரிகா அரசு,இந்தப்போரில் ஏற்படக்கூடிய உயிரழிவுகள் குறித்து முன்கூட்டியே அறிந்துகொண்டபோதும்,அது பற்றி கவலைகொள்ளவில்லை.யாழ் குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கான 'ரிவிரச' சமரில் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட மனித உயிர்கள் பலியாகலாம் என முன்கூட்டியே கணிப்பிட்ட அப்போதைய பாதுகாப்புத் துணையமைச்சர் அனுருத்த ரத்வத்த, பாதுகாப்பு அமைச்சரும், சனாதிபதியுமான சந்திரிகாவின் அனுமதியுடன் அந்தப்போரை ஆரம்பித்திருந்தார்.ஆனால் கடைசிநேரத்தில் புலிகள் எடுத்த ஒரு மாபெரும் இடப்பெயர்வு முடிவால், அந்தப் பேரழிவு தவிர்க்கப்பட்டது.

அதன்பின்னரும் தொடர்ந்து சிறிலங்கா அரசு மேற்கொண்ட போர்களான சத்ஜெய, ஜெயசிக்குறு, எனப் பல போர்களிலும் இவ்வாறு பல உயிர்,சொத்தழிவுகள் ஏற்பட்டமை தெரிந்ததே. ஆனால், தமிழர்களை எப்படியும் அடக்கியே தீர வேண்டும் என்கின்ற வேகத்தில், இந்த அழிவுகள்பற்றி யெல்லாம் அப்போது சிறிலங்கா அரசு கவலை கொள்ளவில்லை.

விடுதலைப் புலிகள் ஓயாத அலைகள் என்ற பெயரில் ஆரம்பித்த முல்லைத்தீவு முகாம் தாக்குதலில் ஆயிரக்கணக்கான படையினர் கொல்லப்பட்டனர்.இவர்களில் பெரும்பாலானவர்களின் உடல்களை புலிகள் அரசாங்கத்திடம் ஒப்படைக்கத் தயாராக இருந்திருந்தனர்.ஆனால், இந்தச் சடலங்ளைப் பொறுப்பேற்று தென் பகுதிக்குக் கொண்டுவந்தால் போரில் தாம் அடைந்துவரும் தோல்விகளை தென்பகுதிமக்களும்,சர்வதேச உலகமும் அறிந்துகொண்டுவிடும் என்ற அச்சம் காரணமாக,அந்த அப்பாவிச் சிங்களச் சிப்பாய்களின் உடலங்களைத் தானும் பொறுப்பேற்காத சிறிலங்கா அரசு, முல்லைத்தீவு முகாமிலிருந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினரையும்,போரில் காணாமல் போன படையினர் எனப் பட்டியலிட்டு உலகை ஏமாற்றியது.

இவ்வாறு தோல்விகளையும்,அழிவுகளையும், இழப்புக்களையும் மூடிமறைத்துப் போரைத் தொடர்ந்து வந்த சிறிலங்கா அரசாங்கத்தினால்,கட்டுநாயக்க தாக்குதல் ஏற்படுத்திய அழிவுகளையும்,பொருளாதார இழப்புக்களையும் மூடிமறைத்து சிங்கள மக்களை ஏமாற்ற முடியவில்லை.

எதையும் தாங்கி பொறுத்துக் கொண்டுவந்த சிங்கள மக்களும், வர்த்தக சமூகமும்,இந்த இழப்பைத் தாங்கத் தயாராக இருக்கவில்லை. இந்நிலையில்தான் வர்த்தக சமூகத்தின் ஆதரவுடன் முன்னைய அரசு தோற்கடிக்கப்பட்டு புதிய அரசாங்கம் தோற்றுவிக்கப்பட்டது.இந்த வர்த்தகசமூகத்தின் பிரதான கோரிக்கையாக இருந்த,நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தல் என்ற விடயத்தில், போருக்கு ஒரு முடிவு கட்டாமல் வெற்றிகாண முடியாது என்ற யதார்த்தத்தின் அடிப்படையிலேயே இன்றைய சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

#####

இவ்வாறுதான்,ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கப்பூர் பிரதமர் லீ சொன்ன இடத்துக்கு இப்போது சிறிலங்கா அரசு வந்து சேர்ந்துள்ளது.அன்று சிறிலங்காவுக்கு இத்தகைய ஒரு வழியைக்காட்டிய லீ யிடமிருந்து சிறிலங்கா கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய உண்டு. தனது சிங்கப்பூர் அனுபவங்கள் பற்றியும், சர்வதேச அரசியல் பற்றியும் அண்மையில் லீ அவர்கள் 'றீடர்ஸ் டைஜஸ்ட்' என்கின்ற பிரபல ஆங்கில சஞ்சிகைக்கு வழங்கிய செவ்வியொன்றில் பல பயனுள்ள கருத்துக்களை அவர் பகிர்ந்து கொண்டுள்ளார். இலங்கையைப் போன்ற ஒரு பல்லின சமூகம் வாழும் மூன்றாம் உலக நாட்டுக்கு அவரது இந்த அனுபவ வார்த்தைகள் மிக்க பயனுடையவை.

இனப் போர்கள் தலைதூக்கியுள்ள இந்தோனேசியா, இந்தியா, பாக்கிஸ்தான், பிலிப்பீன்ஸ் ஆகிய நாடுகளுக்கு உங்களுடைய ஆலோசனை என்ன என்று கேட்கப்பட்டபோது அவர் கூறுகிறார்,

"ஒரு நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமானால்,அது பொருளாதார ரீதியாக முன்னேறவேண்டும்.அவ்வாறு முன்னேறும்போது,அந்த நாட்டிலுள்ள சிறுபான்மை இனங்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான பங்கு அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். அல்லாது போனால் முரண்பாடுகள் தோன்றுவதைத் தவிர்க்க முடியாது" என்கிறார் அவர்.

####

**அனசூயா**

இங்கே நாம்,எமது தாயகத்தில், மொழியில், கல்வியில், வேலைவாய்ப்பில், பொருளாதார அபிவிருத்தியில் என தமிழ்மக்கள் புறக்கணிக் கப்பட்ட முன்னைய எமது வரலாற்றை இது நினைவுபடுத்துவதாக உள்ளது.இன்று இந்த நாட்டை பொருளாதார ரீதியாகக் கட்டியெழுப்பப்போகிறேன் எனக் கங்கணங்கட்டியுள்ள ரணில் அரசு, அன்றைய இந்த வரலாற்றுத் தவறுகள் மீண்டும் நேராதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

ஒரு நாட்டில் சனநாயகத்தை ஏற்படுத்த முன்னர்,முதலில் அந்த நாட்டில் மனித உரிமைகள் நிலை நாட்டப்படவேண்டும் என்பது லீயின் கருத்தாக இருக்கிறது.

''ஒரு மனிதன் முதலில் சமுதாயத்தில் தான் மதிக்கப்படுவதாக உணரவேண்டும்.அப்போதுதான் அவன் மகிழ்ச்சியாக வாழமுடியும். இல்லாவிடில் அவன் தன்னை ஒரு பெறுமதியற்றவனாகவே கருதத்தலைப்படுவான்.எனவேதான் நான் சொல்கிறேன், ஒரு நாடடில் சனநாயகம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர்,முதலில் அங்கு மனித உரிமைகள் மதிக்கப் படவேண்டும்" என்கிறார் லீ.

மனித உரிமைகள் பற்றி சிறிலங்காவின் அரசியலமைப்பும் விரிவாகக் கூறுகிறது.ஆனால்,ஒரு நாட்டில் சக குடிமகன் ஒருவன் அனுபவிக்கும் அனைத்து உரி மைகளும் தனக்கும் உண்டு எனக் கருதுவதற்கு தமிழர்களை சிறிலங்கா அரசு அனுமதிக்கவில்லை.அதுதான் இத்தனை இரத்தக்களரிக்கும் காரணமாக அமைந்துவிட்டது.

1965 ஆம் ஆண்டு சிங்கப்பூர் சுதந்திரம் பெற்றபோது,சிங்கப்பூர் நிலைத்துநிற்கும் என்று பலரும் எதிர்பார்க்கவில்லை.ஆனால்,ஒரு சோசலிசவாதியாக சிங்கப்பூர் அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற லீ குவான், தன்னலமற்று,நாட்டை முன்னேற்றுவதையே நோக்காகக் கொண்டு செயலாற்றியதால் சிங்கப்பூரை இந்தளவுக்கு உயர்த்தியுள்ளார்.அவர் தன்னை முன்னிறுத்தி, தன்னுடைய கொள்கைகளைக் கட்டிப்பிடித்துக் கொண்டு, சிங்கப்பூரைச் சீரழிய விடவில்லை. இங்கிலாந்தில் தனது இளமைக்காலகல்வியை 1946முதல் 1950 வரையில் தொடர்ந்த லீ,அப்போது யுத்தத்தினால் சீரழிந்துபோயிருந்த இங்கிலாந்து கட்டியெழுப்பப் பட்டிருக்கும் விதத்தைப் பார்த்து வியந்துபோயுள்ளார்.பெட்டிகளில் அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் பல்வேறு செய்தித்தாழ்களிலும் தனக்கு வேண்டியதை எடுத்துவிட்டு அதற்குரிய பணத்தை உரிய காசுப்பெட்டியில் போட்டுச்செல்லும் இங்கிலாந்துக் காரரின் மனோநிலையைக் கண்டு வியந்துபோன அவர்,இந்தத் தன்மைகளால் அப்போது உந்தப்பட்ட மனநிலையே தான் பின்னர் சிங்கப்பூரை இந்தளவுக்குக் கட்டியெழுப்ப உதவியது என்கிறார்.(இந்தக் காலப் பகுதியில்-1948-இங்கிலாந்தியரிடமிருந்து சுதந்திரம்(?)பெற்ற எம்மிடம் இருக்கும் குணவியல்பை நினைத்துப் பார்த்தால்....).,

ஒரு சோசலிசவாதியான அவர் முதலில் எல்லோரையும்போலவே, செல்வந்தர்களிடம் வரி அறவிட்டு வறியவர்களுக்கு உதவ வேண்டும் என்றே எண்ணி யிருந்தாராம்.ஆனால் நாட்டை வழிநடாத்த முற்பட்டபோது,முதலில் பொருளுடைமையைக் (wealth) கட்டியெழுப்ப வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டார்.இதுபற்றி அவர் இப்படி விளக்குகிறார்.

"ஒருவனுக்கு குறைந்த வாடகையில் ஒரு வீட்டையோ அன்றி தொடர்மாடி வசதியையோ ஏற்படுத்திக் கொடுக்கும்போது அவன் தன்னைக் குறைத்து மதிப்பிடுகிறான். இதனால் அவனது மனநிலை பாதிப்படைகிறது.அதேசமயம், இலகு கட்டண அடிப்படையில் அனைவரும் ஒரு வீட்டை வாங்குவதற்கு வசதிகள் செய்துகொடுக்கும்போது நாம் இப்போது ஒரு சொத்துடைமையுள்ள சமுதாயத்தை உருவாக்குகிறோம். இது மக்களுடைய மனநிலையையே மாற்றியமைத்துவிடுகிறது.

இப்போது அவர்கள் ஒரு அரசாங்கத்தை தெரிவு செய்ய வேண்டி யேற்படும்போது, தாம் ஒரு தவறான கொள்கைகளையுடைய,. நம்பிக்கையில்லாத அரசைத் தேர்ந்தெடுததால்,அவர்களுடைய சொத்துக்கள் பெறுமதி இழந்துவிடும் என்பதை அவர்கள் அறிவார் கள்.இதை அவர்கள் விரும்புவார்களா.இந்த மனநிலை ஒரு பலமான சமுதாயத்தைத் தோற்றுவிக்கிறது'' என்கிறார் அவர்.

பல கட்சி ஆட்சிமுறையின்றி, ஒருகட்சி ஆட்சியையே நீண்ட நாட்களாக வலியுறுத்திவந்த லீ,"நாம் பல்வேறு அபிப்பிராயங்கள் உள்ளவர்களாயினும், மிகச் சிறந்தவர்களை எமது கட்சியில் சேர்த்துக் கொண்டோம்.இதன்மூலம் விவாதங்களும் முரண்பாடுகளும் கட்சிக்குள்ளேயே நடைபெற்றன.இதை நாம் தவிர்க்கும்போதே பலமான எதிர்க்கட்சியொன்று உருவாகிறது." என்று சொல்கிறார்.

தற்போது,சமாதான பேச்சுக்களின்மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தீர்மானத்துடன் நடக்கும் முயற்சிக்கான முன்னேற்றத்திற்கு லீ இன் அனுபவங்கள் முன்மாதிரியானவையாக அமையக் கூடியவை.

## கருத்துப் பகிர்வு

வெள்ளி நாதமே!

நான் வெள்ளிநாதத்தினை வேண்டியவுடன் முதலில் பார்ப்பது ஓயாத அலைகள் சித்திரக்கதை தொடரினையே. மிக அருமையாக உள்ளது. முக்கியமாக எமது சிறார்களை இவ் வகையான ஆக்கங்கள் மிகவும் கவரும். எம் வீரர்களின் போராட்ட வரலாற்றை அவர்கள் அறிந்து கொள்ள இது பெரும் பங்கு வகிக்கும் என்றே எண்ணுகின்றேன். தொடர்ந்தும் ஓயாதஅலை சித்திரக்கதை வளர வேண்டும் என வாழ்த்தி, இதனை எழுதுகின்ற ராகவனுக்கு எனது பாராட்டுக்களை தெரிவிக்கின்றேன்.

ஓவியங்கள் எல்லாம் மிக நன்றாகவே இருக்கின்றது. இவ்வாறான சித்திரக் கதைத் தொடர்கள் தொடர்ந்து வரவேண்டும் என எதிர்பாக்கிறேன். இத்தொடர் வெள்ளிநாதத்தில் முடிவுற்றவுடன் புத்தகங்களாக வெளியிட்டால் மிக நன்று.

வினோ,
யாழ் பல்கலைக்கழகம்.

அன்பிற்கினிய வெள்ளி நாதமே!

உன் கருத்துக்கள் யாவும் மகிமை. அதிலும் ' இளையநாதம்' எனும் சிறுவர் பகுதி பல அம்சங்களை தாங்கி வருகிறது. இளைய நாதத்தில் சிறுவர்களுக்கான பல கருத்துக்கள் உள்ளன. வெள்ளி நாதமே! நீ பல்லாண்டு வாழ எனது பணிவான வாழ்த்துக்கள்.

தி.ஸ்ரீரஜீவன்
கிளி/இந்துக் கல்லூரி.

## வரி விளம்பரம்

**ஒப்படைக்கவும்**

கந்தபுரம் ரம்ஜா தேனீர் நிலையத்திற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்ட வாகனத்தின் (த1-6218) உரிமையாளரின் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பாக்கினை தவறுதலாக எடுத்தவர்கள் தயவு செய்து ரம்ஜா தேனீர்ச்சாலையில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். த.தயாபரன், வாகன உரிமையாளர். (2493)

## ஆசிரியருக்கு நன்றி கூறுகின்றோம்

யேசுமரியான் அம்பிகா தம்பதிகளின் மகள் செல்வி செசிலியா மேபிள் கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலையில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 127 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவருக்கு கற்பித்த ஆசிரியர் த.டே.கிஸ்காட் என்பவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்
தந்தை சு.யேசுமரியான்
307, விவேகானந்தநகர்,
கிளிநொச்சி

(2494)

# மாங்காய் ஊற்றுக் கிராமத்தை மேம்படுத்த நடவடிக்கை

(அலுவலக நிருபர்)

'கிராம தரிசனம்' மூலம் இனம்காணப்பட்ட மிக வறிய மக்கள் வாழும் கிராமமான மாங்காய் ஊற்று கிராமத்தை மேம்படுத்தி மக்களை சகல அடிப்படை வசதிகளுடனும் வாழ வழிசெய்யும் உயர்ந்த நோக்குடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தமது மாதிரிக்கிராமமாக மாங்காய் ஊற்றுக் கிராமத்தை ஏற்று அங்கு புனர்வாழ்வு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

குடியிருப்பு, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து என அடிப்படை வசதிகள் எதுவுமற்று மிகவும் பின்தங்கிய கிராமமாக மாங்காய் ஊற்றுக் கிராமம் தற்போது உள்ளது. அன்றாட ஜீவனோபாயத்துக்கு வழி இன்றி ஏங்கும் நிலையில் மக்கள் இங்கு வாழ்ந்து வருகின்றார்கள்.

முதற் கட்டமாக அம் மக்களின் உடனடித் தேவையான குடியிருப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மாங்காய் ஊற்றுக் கிராமத்தில் 164 வீடுகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (சோ)

## உதைபந்தாட்டம் பிற்போடப்பட்டுள்ளது

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் நடாத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் வரும் திங்கட்கிழமை முதல் குறிப்பிடப்பட்ட நேர சூசியின் படி நடை பெறும்.

**O/L பழைய/புதிய பாடத்திட்டம்**
**தமிழ் மொழியும் இலக்கியமும்**

2002 O/L பரீட்சையில் அதிவிசேட சித்தி பெற . இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் தருவிக்கப்பட்ட பாடசாலை வினாத்தாள்கள். ஆசிரியரின் பாடரீதியான கையடக்கக் குறிப்புக்கள் என்பவற்றை வாரந்தோறும் தபாலில் பெற வேண்டுமா? முத்திரையுடன் கூடிய சுயமுகவரியிட்ட் தபாலுறையுடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

ஆசிரியர் N.K.KAJAROOBAN

80, Amman Kovil Road,
Pandarikulam, Vavuniya.
(2491) Tel: 024- 23644

# முக்கிய அறிவித்தல்

## கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி.

01) யாழ்/கண்டி சாலை உடனடியாக விஸ்தரிக்கப்பட வேண்டியிருப்பதால் சாலையின் மத்தியிலிருந்து 66 அடிக்குள் இருக்கும் கட்டிடங்கள் ஒரு மாத காலத்துக்குள் (2002.11.05க்கு முன்) 66 அடிக்கு அப்பால் நகர்த்துமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள்.

02) கரைச்சி, கண்டாவளை பிரதேச எல்லைக்குள் அமைக்கப்பெறும் சகல குடியிருப்புக்கள், வர்த்தகசாலைகள், கிணறுகள், மலசலகூடங்கள், தொழிற்சாலை உட்பட சகல கட்டிடங்கள் யாவும் சபையின் அனுமதி பெற்று செயற்படுத்தப்படல்வேண்டும்.

03) பரந்தன் - முல்லைத்தீவு வீதியின் மத்தியிலிருந்து 50 அடி தூரத்தில் வர்த்தக நிலையங்கள், கட்டிடங்கள் யாவும் அமையக்கூடியவாறு சகல உரிமையாளர்களும் செயற்படுத்த வேண்டும்.

04) டிப்போச்சந்தியில் இருந்து மாவீரர் துயிலும் இல்லம் வரையிலான (கனகபுரம் வீதி) வீதியிலுள்ள கட்டிடங்கள் யாவும் வீதியின் மத்தியில் இருந்து 66 அடிக்கு அப்பால் அமைய வேண்டும்.

மேற்படி நடவடிக்கைகளுக்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

(இ.பத்மநாதன்)
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி.

(சி-7408)

## பருவகால தெளிகருவி இயக்குநர்களுக்கான பதவி நியமனம்

எமது பணிமனையில் 2002-07-20ம் திகதி நடைபெற்ற தெளிகருவி இயக்குநர்களுக்கான நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யபட்டவர்களுக்கான நியமனக் கடிதம் 2002-10-09ம் திகதி பி.மா.சு.சே. பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும் என்பதை அறியத்தருகிறேன்.

எனவே கீழ்க் குறிபிடப்படும் பெயர்களையுடையோர் தங்கள் அடையாளத்தை நிரூபிக்கும் ஆவணங்களுடன் 2002-10-09ம் திகதி காலை 10.00 மணிக்கு அக்கராயனில் இயங்கும் பி.மா.சு.சே பணிமனைக்கு வருகை தந்து நியமனக் கடிதத்தைப் பெற்று உரிய நிறுவனத்தில் கடமை பொறுப்பேற்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

01.கார்த்திகேசு வரதன்.
02.செல்லத்துரை ஆறுமுகராசா.
03.சதாசிவம் இராசகருணா.
04.செல்லத்துரை துரைசிங்கம். சுவேந்தன்.
05.இர்ாமசாமி தவம்.
06.கந்தையா ஜெகதரன்.
07.பொன்னுத்துரை பொன்ராசா.
08.ஐயாக்கண்ணு கலைச்செல்வன்.
09.பொன்னம்பலம் ரவிச்சந்திரன்.
10.அருளானந்தம் சுபாகரன்.
11.துரைராசா மகிந்தன்.
12.சுப்பிரமணியம் சண்முகராசா.
13.வேலுப்பிள்ளை விஜயராசா.
14.முருகையா சுரேஷ்குமார்.
15.பரராஜசிங்கம் ஜெயகோபன்.
16.ஜோசப் சுதாகரன்.
17.ஐயாத்துரை குகநாதன்.
18.சிவபாதசுந்தரம் கேதீஸ்வரன்.
19.பாலசுப்பிரணியம் சதீஸ்வரன்.
20.கந்தையா இரத்தின சிங்கம்.
21.கிருஸ்ணன் நல்லநாதன்.
22.கணபதி ஜெயக்குமார்.
23.சண்முகலிங்கம். யோகச்சந்திரன்.
24.பிள்ளையானார் இராசலிங்கம்.
25.முருகன் கெங்காதரன்.
26.நவரெட்ணம் புவனேஸ்வரன்.
27.சின்னத்தம்பி குகேந்திரன்.
28.மார்க்கண்டு ரமணகுமார்.
29.வேலுப்பிள்ளை வேலழகன்.
30.குலசேகரம் சுதர்சன்.
31.யோகராசா ஜெயலக்ஷ்மன்
32.நடராசா நவந்தன்.
33.அப்பையா புவிநாயகம்.
34. தனிநாயகம் சந்திரமோகன்.
35.தங்கராசா பாலச்சந்திரன்.
36.ரகுநாதன் துசியந்தன்.
37.பொன்னையா ஞானேஸ்வரன்.
38.இரத்தினம் கிருபாகரன்.
39.லட்சுமணண் சமேஸ்வரன்.
40.வல்லிபுரம் தில்லைராசா.
41.முருகுப்பிள்ளை இந்திரன்.
42.வடிவேல் சிவகுமாரன்.
43.தவராசா ஐங்கரன்.
44.குழந்தைவேலு சுதர்சன்.
45.ராசரெத்தினம் அருள்குமார்.
46.குமாரசாமி கதிர்காமநாதன்.
47.ஐயாத்துரை தேவகுமார்.
48.வின்சன் அன்ரன் இன்பராசா.
49இராசையா புவிதரன்.
50.முருகன் மதியழகன்.
51.ராசநாயகம் கலாதரன்.
52.நடனசபாபதி ஜெயராஜ்.
53.சண்முகம் விக்னேஸ்வரராஜா.
54.தொசாமயம் பிரபாகரன்.
55.ராசேந்திரம் சுகிர்.
56.பூலோகசிங்கம் பகீதரன்.
57.நித்தியானந்தம் சதீஸ்வரன்.
58.கிருஸ்ணபிள்ளை. கிருஸ்ணானந்தன்.
59.கனகரெத்தினம் சுரேஸ்குமார்.
60.ஞானப்பிரகாசம் ரிச்மன்ட்.
61.சிவசுப்பிரமணியம் விஜயராஜா.
62.சிதம்பரப்பிள்ளை நாகராசா.
63.சிவசாமி அருமைநாயகம்.
64.தர்மகுலசிங்கம் மதிகரன்.
65.தங்கராசா தவராசா.
66.சுப்பையா பத்மநாதசிறி.
67.கிருஸ்ணானந்தன் சுதாகரன்.

*வைத்திய கலாநிதி எஸ். சிவமோகன்,*
*மா.சு.சே.பி.பணிப்பாளர்,*
*கிளிநொச்சி /முல்லைத்தீவு.*

(சி.7413)

## நெடுங்கேணி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூ. சங்கம் (வது)

### பதவி வெற்றிடம்

நெடுங்கேணி ப.தெ.வ.அ.கூ. சங்கத்தில் பின்வரும் பதவிகளை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் .கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்களது விண்ணப்பங்களை தலைவர், நெடுங்கேணி ப.தெ.வ.அ.கூ. சங்கம், நெடுங்கேணி என்ற முகவரிக்கு 16/10/2002க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

வயதெல்லை:- 18-30 சேவையிலுள்ளோருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

பதவி:- பொதுமுகாமையாளர் 101/10
சம்பள அளவுத்திட்டம்:- 31/99
4750 - 6850
100X10 - 110X10

**கல்வித் தகைமை:-**

01) கூட்டுறவுப் பணியாளர் 11வது சம்பளத்திட்டத்தில் மேற்பார்வை மட்டப்பதவி ஒன்றில் 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது குறித்த துறைப் பதவி ஒன்றில் 12வது சம்பள அளவுத்திட்டத்தில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

02) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம் அல்லது அதற்குச் சமமான கல்வித் தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைப்பட்டப் பதவி ஒன்றில் 1 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

03) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்)/க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைமட்ட பதவி ஒன்றில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

கணக்காளர்:- 104/12
சம்பள அளவுத்திட்டம்:- 4250 - 5950
80X10-90X10

01) கூட்டுறவுப்பணியாளர் 13வது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் பதவியில் அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 14வது சம்பளத்திட்டத்தில் கணக்குச் சம்பந்தமான பதவியில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

02) ஐக்கிய இராச்சியத்தில் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப்பரீட்சையிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்குத்துறையிலான 02 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

03) கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) / க.பொ.த (உயர்தரம்)இல் கணக்கியல் உள்ளடக்கிய மூன்று பாடங்களிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

தலைவர்,
நெடுங்கேணி ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

(2496)

# கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரின் 3 வது இடம் பெயர் சேவை

- கண்டாவளை - 12/13-10-2002 -

## அனுசரணை புனர்வாழ்வு மீள்குடியேற்ற அகதிகள் அமைச்சு

**கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவில் வாழும் பொதுமக்களின் நன்மையையும் சுபீட்சத்தையும் கருத்திற்கொண்டு கிளிநொச்சி அரசாங்க அதிபர் தலைமையில் புனர்வாழ்வு மீள்குடியேற்ற அமைச்சின் அனுசரணையுடன் மாவட்ட செயலகம் உட்பட சகல திணைக்களங்களும் , அவற்றின் தலைவர்களும் சகல அரசசார்பற்ற நிறுவனங்களும் ஒருமித்து மேற்படி பகுதிக்கு இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளுக்கு இயலுமான சேவைகளை வழங்க ஏற்பாடு செய்யப்பெற்றுள்ளன.**

**இடம் : தருமபுரம் மகாவித்தியாலயம்.**
**காலம் : 12.10.2002 சனிக்கிழமை, 13.10.2002 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : மு.ப.8.30 - பி.ப.4.30 வரை**

### இடம் பெயர்சேவை செயற்பாடுகள்:

**01. புனர்வாழ்வு மீள்குடியேற்ற அகதிகள் அமைச்சு.**

அ. கடந்த காலங்களில் நிவாரணம் மறுக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்.
ஆ. கடும்பாதிப்புற்றோருக்கான இழப்பீட்டுக்கொடுப்பனவு வழங்குதல்.
இ. சாவுச்சடங்கு கொடுப்பனவு வழங்குதல்.
ஈ. அறநெறிப் பாடசாலைகளுக்கான உபகரணங்கள் வழங்குதல்.
உ. ஊனமுற்றோருக்கான உபகரணங்கள் வழங்க நடவடிக்கை எடுத்தல்.
ஊ. ஊனமுற்றோர் சங்கம் ஊடாக சுயதொழிற் கடன் வழங்க நடவடிக்கை எடுத்தல்.
எ. நலன்புரி நிலையங்களுக்கு கிடுகு வழங்கல்.

**02. தமிழர் புனர்வாழ்வுக் கழகம்.**

அ. வறிய மாணவர்கள், பாடசாலை செல்லாத மாணவர்களிற்கு சீருடை, உபகரணங்கள் வழங்கல்.
ஆ. முன்பள்ளி செயற்பாட்டுக் காட்சி.
இ. கண்ணிவெடி சம்பந்தமான விழிப்புணர்வு நடவடிக்கை.
ஈ. போசாக்கு கருத்தரங்கு நிகழ்ச்சிகளைத் திட்டமிடல் கிளையுடன் இணைந்து நடாத்துதல்.
உ. சிறுவர்பாடசாலை ஆரம்பித்தல்

**03. பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்.**

அ. வறிய விவசாயிகளுக்கு பழக்கன்றுகள், தென்னம் நாற்றுகள், மரக்கறி விதைகள் போன்றன வழங்குதல்.

**04. மாவட்ட திட்டமிடல் செயலகம்.**

அ. பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழான வேலைத்திட்டங்களை தொடங்குதல்.
ஆ. போசாக்கு நிகழ்ச்சித்திட்ட பயிற்சிக் கருத்தரங்குகள்.
இ. காணி தொடர்பான விடயங்கள்.
ஈ விவசாயிகள் காப்புறுதித் திட்டத்தின் கீழ் பயனாளிகளை பதிவு செய்தல்.

**05. மாவட்டச் செயலகம்.**

**I செயலகத்தாபனக்கிளை**

அ. கடவுச்சீட்டுவிண்ணப்பங்கள் தொடர்பான விளக்கம் அளித்தலும், ஏற்றுக்கொள்ளலும்.
ஆ. தேசிய அடையாள அட்டை தொடர்பான அறிவுறுத்தல் வழங்கல்.
இ. வாக்காளர் இடாப்பு பிரதியினை உறுதிப்படுத்துதல்.
ஈ. திருமணமாகாதோருக்கான விண்ணப்பங்கள் சார்பான சான்றிதழ்கள் வழங்குதல்.
உ. சேதமடைந்த ஆலயங்களின் சேதமதிப்பீட்டு விபரங்களை ஏற்றல்.
ஊ. வவுனியாவில் இருந்து கட்டிடப்பொருட்களை (சீமெந்து.கம்பி) எடுத்துவருவதற்கான அனுமதி வழங்குதல்.

**II. நிதிக்கிளை**

அ. ஓய்வூதியம் தொடர்பான விசாரணைகளும், அறிவுறுத்தல்களும்.
ஆ. ஓய்வூதிய நிலுவைகள் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.
இ. காசாளர் பணிகள்.
ஈ. உந்து ஊர்திகளின் 2002ம் ஆண்டிற்கான வரிஅறவிடும், பதிவு செய்வதற்கான படிவங்கள் சேகரித்தலும்.

**III. செயலக மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகம்**

அ. கிராம அபிவிருத்திச் சங்கங்களை புனரமைப்பதற்கான நடவடிக்கைள்.
ஆ. மாதர்சங்கங்களை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள்
இ. கண்டாவளைப் பிரதேச செயலக தையல்பயிற்சி நிலைய கண்காட்சி.
ஈ. சனசமூக நிலையங்களை புனரமைத்தல்.

**IV. மாவட்ட விளையாட்டுத்துறை**

அ. விளையாட்டுக் கழகங்களை பதிவு செய்தல்.
ஆ. விளையாட்டுக் கழகங்களை புனரமைப்புச் செய்தல்.

**06. பிரதேச செயலகம் கண்டாவளை**

அ. இந்து இளைஞர்பேரவை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தல்.
ஆ. மூடப்பட்ட நெசவுசாலையை மீள இயங்க நடவடிக்கை எடுத்தல்.
இ. காணாமல் போனோர் தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளல்.
ஈ. உரியவர்களிற்கு உலர் உணவு நிவாரணம் வழங்குதல்.
உ. காணி தொடர்பான வேலைகளும்,உறுதி வழங்கலும்.
ஊ. பொதுமக்கள் மாதாந்த உதவிப்பணம் உரியவர்களிற்கு வழங்குதல்.
எ. முதியோர் அடையாள அட்டை விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளலும், வழங்கலும்.
ஏ. 1973க்கு முன் அடையாள அட்டை பெற்றவர்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கலும், ஏற்றுக்கொள்ளலும்.
ஐ. ஆலயங்களையும், அறநெறிப் பாடசாலைகளையும் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளலும், அறநெறிப்பாடசாலைகளைத் தொடங்குதலும்.
ஒ. சிறுவர் பாடசாலைகளைப் பேணுதலும், பணிகள் கையளித்தலும்.

**07. மாவட்ட பதிவாளர் அலுவலகம்.**

அ. காலங்கடந்த திருமணப்பதிவும், சான்றிதழ் வழங்கலும்.
ஆ. காலங்கடந்த திருமணம்,பிறப்பு இறப்புப் பதிவும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளலும்.
இ. உள்ளூர்வெளியூர்திருமணம், பிறப்பு, இறப்பு அத்தாட்சி சான்றிதழ்கள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளலும் வழங்கலும்.
ஈ. பெயர்மாற்றம் தொடர்பான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல்.

**08. தொழில் திணைக்களம்**

அ. தொழிலாளர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்
ஆ. ஊழியர் சேமலாபநிதி தொடர்பான பணிகள்.
இ. நிறுவனங்களில் பணிபுரியும் பணியாட்களை சேமலாப நிதித்திட்டத்தில் இணைத்தல்.

**09. உள்ளூராட்சித் திணைக்களம்**

அ. சனசமூக நிலையங்களை புனரமைத்தல் தொடர்பான நடவடிக்கைகள்.

**10. பிரதேசசபை**

அ. நூலகங்களுக்கான நூல்கள் வழங்குதல்.
ஆ. கட்டாக்காலி நாய்களை ஒழித்தல்.
இ. சிரமதானப் பணிகளைத் தொடங்குதல்
ஈ. ஆயுர்வேத மருத்துவப்பணி.
உ. மூலிகைக் கண்காட்சி.
ஊ. மிதிவண்டிகளுக்கான உரிமம் வழங்குதலும், வாணிப நிலையங்களுக்கான பதிவும், ஒப்புதல் பத்திரம் வழங்குதலும்.

**11. கமநல அபிவிருத்தித்திணைக்களம்**

அ. விவசாயிகள் ஓய்வு,தியத்திட்டம் ஏற்பாடுகள் தொடர்பான விளக்கம்
ஆ. மானிய அடிப்படையிலான உரம், கிருமிநாசினி வழங்கல்.
இ. பயிர்ச்செய்கை உரிமைப் பிரச்சினைகளை இணக்கமான முறையில் தீர்த்து வைத்தல்.
ஈ. பயிற்சி செய்கைப்பணி இடாப்பில் பெயர்கள் பதிவு செய்தல்.
உ. விவசாயிகள் அறிமுக அட்டைகளுக்கான வேண்டுகைகள் ஏற்றல்.

**12. விவசாயத்திணைக்களம் (வீரி)**

அ. வறிய விவசாயிகளுக்கான பழமரக்கன்றுகள் வழங்கல்.
ஆ. வறியவர்களுக்கான் தென்னை நாற்றுக்கள் வழங்கல்.
இ. வெளிநாட்டு, உள்நாட்டு மரக்கறி விதைகள் குறைந்த விலையில் விற்பனை செய்தல்.
ஈ. பீடைமுகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு.
உ. உவர்மண் மீட்டல் தொடர்பான கருத்தரங்கு.

**13. வலயக் கல்விப்பணிமனை.**

அ. பாடசாலை செல்லாத மாணவர்களை இனங்கண்டு சீருடை வழங்கல்.
ஆ. இலைக்கஞ்சித்திட்டம் தொடர்பான பணிகள்.
இ. கல்வி தொடர்பான பிரச்சினைகள்.
ஈ. எழுத்தறிவூட்டல் வகுப்புக்களைத் தொடங்குதல்.
உ. வயதானவர்களுக்கான கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தல்.

**14. கூட்டுறவு அபிவிருத்தித்திணைக்களம்.**

அ. சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களை சீரமைத்தலும், நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தலும், கடன்வழங்கலும்.
ஆ. சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கச் செயற்பாடுகள் தொடர்பான சங்கங்களின் அமைவிட வரைபடம் காட்சிக்கு வைத்தல்.
இ. கூட்டுறவுத் திணைக்களப் பணிகள்.

**15. அரசாங்க கால்நடை மருத்துவர் பணிமனை.**

அ. கோழிகளுக்கான நோய்த் தடுப்பூசி வழங்கல்.
ஆ. கால்நடை வளர்ப்புத்தொடர்பான கலந்துரையாடல்.
இ. கால்நடைகளுக்கான மருத்துவப் பணிகள்.

**16. கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கம்.**

அ. நிழற்படம் பிரதியாக்கல் பணிகள்.
ஆ. புகைப்படப் பிடிப்புப் பணிகள்.
இ. கிராமிய வங்கி மூலம் உறுப்பினர்களின் சேமிப்பினை ஊக்குவித்தல்,
ஈ. நெல்லும் உப உணவுப் பொருட்களும் கொள்வனவு செய்தல்.
உ. உறுப்பினர்களை இணைத்தல்.

**17. சித்த ஆயுர்வேத வைத்திய இணையம்.**

அ. இலவச சித்தமருத்துவப்பணிகள்.

**18. கிளி-மாவட்ட மூலிகை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம்.**

அ. சித்த ஆயுர்வேத மூலிகைக் கண்காட்சி.

**19. வைத்திய கலாநிதிகளினாலும், சுகாதார வைத்திய அதிகாரிகளினாலும் நடாத்தப்பெறும் சிறப்பு மருத்துவப்பணிகள் (கிளி, தருமபுரம்)**

அ. 35 அகவைக்கு (வயது) மேற்பட்டவர்களுக்கு நோயை இனங்காணல்.
ஆ. சிறுவர்களுக்கான நோயை இனங்காணல், குழந்தைகளுக்கான சிகிச்சைகள்.
இ. கர்ப்பவதிகளுக்கான பரிசோதனைகள், சிகிச்சைகள்.
ஈ. பற் சிகிச்சைகள்.
உ. மலேரியா இரத்தக்கறை பரிசோதனை.
ஊ. கிணறுகளுக்கு குளோரின் இடல்.
எ. சிறு நீர் பரிசோதனை.
ஏ. கண் பரிசோதனை.
ஐ. ஏனைய வைத்திய பரிசோதனைகள், மாணவர்களுக்கான போசாக்கு, போசாக்கு கல்வித்திட்டம் தொடர்பான கருத்தரங்குகள்.
ஒ. முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு.
ஓ. மருத்துவக்கண்காட்சி.

**20. வங்கிப் பணிகள்.**

**I. தேசிய சேமிப்பு வங்கி,கிளிநொச்சி.**

அ. சாதாரண சேமிப்புக் கணக்குத் திறத்தல்.
ஆ. சிறுவர்சேமிப்புக் கணக்குத் திறத்தல்.
இ. நிலையான வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளல்.
ஈ. அரச அதிபர், பாதுகாவலர் என்ற ரிதீயில் கடும் பாதிப்புற்றோரில் தங்கியிருப்பவர்களுக்கான கொடுப்பனவினை ஏற்றுக்கொள்ளல்.
உ. சேமிப்புப் பழக்கத்தினை ஊக்குவித்தல்.

**II. இலங்கை வங்கி,கிளிநொச்சி.**

அ. விவசாயக் கடன், ஏனைய வழங்கல்.
ஆ. புதிய கணக்குகள் ஆரம்பித்தல், ஏனைய வங்கிப்பணிகள்.

**III.மக்கள் வங்கிப்பணிகள்.**

அ. புதிய கணக்குகள் தொடங்குதல்.
ஆ. ஏனைய வங்கிச் செயற்பாடுகள், விவசாயக்கடன் ஏனைய கடன்வழங்கல்.

**21. பனை அபிவிருத்திச் சபை.**

அ. பன்னவேலைக் கண்காட்சியும், பனம்பொருட்கள் விற்பனையும்

**22. தென்னை அபிவிருத்திச் சபை.**

அ. தென்னம் நாற்றுக்கள் வழங்கல்.
ஆ. பீடைக்கட்டுப்பாட்டுக் கருத்தரங்குகள்.

**23. கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.**

அ. மீனவர்களுக்கான கடனுதவித்திட்டங்கள் பற்றிய விளக்கம் பயிற்சி வகுப்பு.

**24. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.**

அ. இளைஞர் சேவைகள் மன்றங்களை மீளமைத்தல்.

**25. நீர்ப்பாசனத் திணைக்களம்**

அ. இரணைமடு, கல்மடு,பெரியகுளம், பிரமந்தனாற்றுக்குளம் சம்பந்தமான பிரச்சினைகளை ஆராய்தலும், தீர்வுகள் வழங்கலும்.

**26. மாவட்ட புள்ளிவிபரத்திணைக்களம்.**

அ. பல்வேறுபட்ட புள்ளி விபரங்கள் தொடர்பான கண்காட்சியும், புள்ளிவிபரங்கள் தொடர்பான கருத்தரங்கு நிகழ்த்தலும்.

**தி.இராசநாயகம்,**
அரச அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.7409)

# கண்ணிவெடி விழிப்புணர்வுச் செய்தி

வாழப்பிறந்த உறவுகளே!

விழிப்புடன் இருப்பின் வேதனை ஏன்?

எமது அவதானக்குறைவே எமக்கு எதிரியாகலாமா?

கண்ணிவெடிகள், வெடிப்பொருட்கள் எங்களது அவதானக் குறைவிற்கு மன்னிப்பு வழங்குவதில்லை.

தாங்கள் எங்களது எதிரிகளெனச் சொல்லுவதுமில்லை. விளையாட்டுப் பொருளாக, வீட்டுப் பாவனைப் பொருளாக, எங்கள் மனத்தை ஈர்க்கும் கவர்ச்சிமிகு அழகுப் பொருட்களாக இவை மறைந்திருக்கலாம்.

போரில் ஈடுபடுவோரால் கைவிடப்பட்ட பாதுகாப்பு அரண்கள், பதுங்குகுழிகள், இராணுவ முகாங்கள், பாதுகாப்பு அணைகள், பயன்தரு மரங்களுள்ள பகுதிகள், நீர் நிலைகள் முதலிய இடங்களில் எங்கள் பயணங்களை விழிப்போடு மேற்கொள்ளுவோம்.

பயணம் செய்யும் பாதைக்கப்பால் இருமருங்கிலும் வெடிப்பொருட்கள் இருக்கலாம். அவ்வாறான இடங்களில்.......

☆ முன்னர் யாராவது பாவித்திருந்த பாதையிலேயே நடந்து செல்லுவோம்.

☆ பயணத்தடயங்கள் இல்லாத புதிய பாதைகளிற் செல்வதைத் தவிர்த்து விடுவோம்.

☆ ஒவ்வொரு அடியும் அவதானமாக எடுத்துவைப்போம்.

☆ எக்காரணத்திற்காகவும் குறுக்கு வழிகளைப்பாவிப்பதிலிருந்து விலகிக் கொள்வோம்.

☆ அறியாத பொருட்கள் பற்றிய ஆராய்ச்சிகளையோ, பரீட்சிப்புகளையோ நிறுத்திவிடுவோம்.

☆ குழந்தைகளை அழைத்துச் செல்லும்போது மிகவும் அவதானத்தோடு இருப்போம்.

கண்ணிவெடிகள், வெடிப்பொருட்கள் காணப்படும் இடங்களில் உள்ள அடையாளக் குறியீடுகளை அலட்சியம் செய்யாதிருப்போம்.

எமக்குத் தெரிந்த விழிப்புணர்வு பற்றிய செய்திகளை அயலவர்கள், உறவினர் களுக்குத் தெரியப்படுத்தி அவர்களையும் ஆபத்திலிருந்து பாதுகாத்துக்கொள்வோம்.

**காலடியில் மரணம் காத்திருக்கும்போது**
**நாம் கவலையந்திருக்கலாமா?**

அவதானத்தோடு இருப்போம். அபாயத்தைத் தவிர்ப்போம்.

**தகவல் : வெண்புறா நிறுவனம்.**

(சி-7407)

# VACANCY

## Translator

**Tamil/English - English/Tamil**

MSF Holland - Puthukkudiyiruppu Project is looking for a full time translator to work in their Maternity Health Programme.

**The ideal candidate should meet the following requirements:**

* Should be a female between the age of 25-50 years
* Fluency in spoken and written English with good communication skills
* Computer literacy with good knowledge in MS Word
* Experience of medical English will be an advantage
* Ability to relate well to patients and staff
* Good inter-personal communication skills
* Positive attitude to work with others in a team
* Past experience in an INGO will be an advantage

Please, forward your application with Bio Data in your own handwriting together with the copies of your educational qualification certificates and at least two reference letters from non-related referees before
19th October 2002 to:

**MSF-Holland, Ward number 7, Puthukkudiyiruppu.**

(2222)

# பணிநிலை வேண்டுகை

தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவின் கீழ் வரும் பணி நிலைக்கான ஆட்களை இணைத்தல்.
பணிநிலை:- வனவள பரிபாலன ஊழியர்
கல்வித் தகைமைகள்:-
1) ஆண்டு 09 தொடக்கம் க.பொ.த. சாதாரண தரம்/ அதற்கு ஒப்பானவை
2) அகவை எல்லை:- 20-30 வரை
(திருமணமாகாதவர்களுக்கு முன்னுரிமை)
பால் - ஆண்
3) காடுசார்ந்த முன்னனுபவம்/வேட்டை தொடர்பான அறிவு
4) வனவள செயலகங்களில் தங்கி நின்று பணிபுரியக் கூடியவர்கள்.
சம்பளம் :- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட தகைமையாளர்களிடமிருந்து வேண்டுகைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. வேண்டுகைகளை 15-10-2002 இற்கு முன்பாக நேரில் அல்லது கடிதமூலம் கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
குறிப்பு:- கடித உறையில் 'பணிநிலை வேண்டுகை' என்பதைக் குறிப்பிடவும்.

பொறுப்பாளர், வ.வ.பா.பிரிவு,
அரசியல்துறை, நடுவப்பணியகம்,
இரணைமடுச்சந்தி, கிளிநொச்சி.

(2492)

# நேர் நோக்கு

## உடனடி விடுதலையே தேவை

களுத்துறை சிறைச்சாலையிலுள்ள 139 கைதிகள் மீண்டும் தமது போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இவ்வாறு தமிழ் அரசியல் கைதிகள் போராட்டத்தை ஆரம்பிப்பதும், இவர்களின் விரைவான விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்படுவதும் பின்னர் இந்த உறுதி மொழிகள் மறக்கப்படுவதும் ஒருதொடர் கதையாகிவிட்டது.

சமாதான நடவடிக்கைகள் ஆரம்பமாகி விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்துக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர். இவர்களில் ஒரு தொகுதியினர் விடுவிக்கப்பட்டுள்ளனராயினும் எதுவித காரணமுமின்றி பல்லாண்டு காலம் சிறையில் வாடிவரும் அனைவருக்கும் இன்னமும் விடுதலை கிடைத்து விடவில்லை.

நீண்ட வருடங்கள் இவ்வாறு சிறையிலிருந்து சில தினங்களுக்கு முன் இடம்பெற்ற கைதிகள் பரிமாற்றத்தின் போது விடுதலையான போராளி கெனடி அவர்கள் தனது விடுதலையில் மகிழ்ச்சி கொள்ளாது. ''சிறிலங்கா சிறைகளில் கைதிகளாக வாடும் எம்மவர்கள் அனைவரும் விடுதலையானாலேயே எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும்" எனத் தெரிவித்துள்ளார்.

இவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இவர்களில் பெரும்பாலானோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அவற்றைத் துரிதப் படுத்தி விடுவிக்க நட வடிக்கை எடுக்கப்படும் எனவும் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வழக்குகள் துரிதப்படுத்தப்படும் எனவும் விடுதலை துரிதப்படுத்தப்படும் எனவும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் காலத்துக்குகாலம் கூறிவருவது வழமையானதே. தம்மீது குற்றம் ஏதும் சுமத்தப்படாதவர்கள் கூட விடுதலை செய்யப்படாது வருடக் கணக்கில் சிறைவாசம் அனுபவித்தனர்.தம்மீது வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் அல்லது தம்மை விடுதலை செய்ய வேண்டும் எனக்கோரி பல தடவைகள் இவர்கள் போராட்டம் நடாத்தி பயன் எதுவும் கிட்டாத நிலையில் சிறையில் வாடியுள்ளனர்.

இப்பொழுது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளவர்கள் மீது கூட சாதாரண சட்டங்களின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை இவர்கள் மீது மனித அறநெறிகளுக்கும் மனித உரிமைகளுக்கும், சிறிலங்காவின் அரசியல் யாப்பிலுள்ள மனித உரிமைகள் குறித்த சரத்துகளுக்கும் கூட முற்றிலும் எதிரான வகையில் பிரகடனப்படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழேயே வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உரிமை கேட்டு தமிழ் மக்கள் நடத்திய போராட்டத்தை பயங்கர வாதமாகச் சித்திரித்து அதனை இரும்புக்கரம் கொண்டு நசுக்க பொலிசாருக்கு அதிகாரம் வழங்கும் வகையில் பிரகடனப்படுத்தப்பட்ட இப்பயங்கரவாதத் தடைச் சட்டத் தினால் [illegible] 20 வருடங்களுக்கு மேலாக அநியாயமாகத் தண்டிக்கப்பட்ட தமிழர்கள் ஆயிரக்கணக்கானோர்.

மனித உரிமை நிறுவனங்களின் கண்களில் மண்ணைத் தூவ சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் தொல்லை தவிர்ப்புக் குழு என்ற பெயரில் அமைப்பொன்றை உருவாக்கியிருந்தார். இந்த அமைப்புக்குத் தலைமை தாங்கிய அப்போதைய நீதிய மைச்சர் பட்டி வீரக்கோன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழர்களை கைது செய்யும் பொலிசார் அவர்களை கைது செய்த பின்பே கைதுக்கு காரணம் தேடுவதாகக் கூறியிருந்தார்.

இவ்வாறு கற்பிக்கப்படும் காரணங்கள் வலிந்து தேடப்பட்ட வையாகவே இருப்பதால், இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களைச் சித்திரவதை செய்து பெறப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களே இவர்கள் மீதான வழக்குகள் தொடரப்பட ஆதாரமாக அமைகின்றது. இவ்வாறு தொடரப்படும் வழக்குகள் கூட துரிதமாக விசாரிக்கப்படுவதில்லை. குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் பெற்ற அதிகாரிகள் நீதிமன்றத்துக்குப் பல்வேறு காரணங்களைக் கூறி சமுகம் கொடாது இழுத்தடித்து பலரை நீண்ட காலம் சிறையில் வாட வைத்திருக்கின்றனர். சட்ட வைத் திய அதிகாரி இல்லை என்றும் இருக்கும் சட்ட வைத்திய அதிகாரிக்கு தேவையான உபகரணங்கள் இல்லை என்று கூறியும் கூட இவ்வாறானவர்களின் வழக்குகள் தாமதமடையச் செய்யப்பட்டுள்ளன.

கைதிகளை நீதிமன்றம் கொண்டு செல்லப் போக்குவரத்து வசதியில்லை, பாதுகாப்பில்லை என்றும் வழக்குகள் இழுத்தடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறெல்லாம் காரணம் கூறி வழக்குகள் விசாரிக்கப்படாது நீண்ட காலம் வீணாகச் சிறைவாசம் அனுபவிக்கும் தமிழர்களை சட்ட நடவடிக்கையின் பின்பே விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் சட்ட நடவடிக்கை துரிதப்படுத்தப்படும் என்றும் மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டு சிறையிலடைத்து வந்திருப்பது நீதியான நடவடிக்கையாக இராது.

சிறைகளில் நீண்ட காலம் இவர்கள் அனுபவித்த கொடுமைகளால் தமது வாழ்க்கையின் அர்த்தத் தைப்பறி கொடுத்து நிற்கும் இவர்களை ஒருநாள் தடுத்து வைத் திருப்பது கூட அநீதியான ஒன்றாகவே அமையக் கூடியதாகும்.

அண்மையில் சிறிலங்கா சிறையில் நீண்டபல வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் தான் யாரென்றே அறியாத நிலையிலிருந்த செய்தி வெளியாகியுள்ளது.

அதுமட்டுமல்லாது சிறையில் அவர்கள் அனுபவித்த கொடுரங்களால் உள, உடல் பாதிப்புகளுக்கு உள்ளாகி விடுவிக்கப்பட்ட பின்னரும் கூட தமது மிகுதி வாழ் நாளை நடைப் பிணங்களாகவே கழிக்க வேண்டிய நிலையில் கூட சிலர் தள்ளப்பட்டுள்ளனர். சிலர் தமது இளம் பராயம் முழுவதையும் சிறையிலேயே கழித்து விட்டு எதிர்காலம் இருளடைந்த நிலையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் சிலர் இன்னமும் சிறைகளில் வாடுகின்றனர்.

தமது குடும்பத்தினரைப் பராமரிக்க வேண்டிய நிலையிலிருந்த இளையவர்கள், குடும்பத் தலைவர்கள் இவ்வாறு நீண்ட காலம் சிறையில் தள்ளப்பட்ட நிலையில் அவர்களது குடும்பங்களே பெரும் தண்டனைகளை அனுபவித்து வருகின்றன. இவ்வாறான நிலையில் நீண்ட நெடும் துன்பத்தை அனுபவித்து வரும் இவர்களுக்குத் தேவை உடனடி விடுதலையேயொழிய வாக்குறுதிகள் அல்ல.

*வேலவன்.*



- கிளிநொச்சியில் நடந்து முடிந்த தேசிய மகளிர் மாநாடு -

# வடக்கு - கிழக்கு மாகாண பெண்களின் பிரச்சினைகளும் அது குறித்த ஆய்வும் ...

2ம் லெப். மாலதியின் 15வது ஆண்டு நினைவு நாளையும், தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் நடாத்திய தேசிய மகளிர் மாநாடானது 28.29.30 ஆகிய தினங்களில் கிளிநொச்சி அரசறிவியல் கல்லூரி மண்டபத்தில் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் வட-கிழக்கின் அனைத்துப் பகுதிகளான மட்டு - அம்பாறை, வவுனியா,மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்தும் ஐநூறுக்கும் மேற்பட்ட பெண்கள் ஒன்று கூடி ஒவ்வொரு மாவட் டங்களிலும் பெண்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகள், அவர்கள் அனுபவித்த துன்பங்கள், அவலங்கள் என்பன பற்றி அலசி ஆராயப்பட்டது.

இந்நிகழ்வானது பொதுச்சுடர் தேசியக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகி மூன்று நாள் அமர்வாக நடைபெற்றது. அ.ஆ.இ. என மூன்று பிரிவுகளாக அனைத்து மாவட்டப் பெண்களும் பிரிக்கப்பட்டு நிகழ்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

முதலாவதாக வயது வேறுபாடின்றி அனைவரும் உற்சாகமாக விளையாட்டுக்களில் ஈடுபட்டிருந்தனர் அரங்க செயற்பாட்டுக் குழுவி னரும் பல்கலைக்கழக மாணவியரும் இணைந்து பாடிய பாட்டின் மூலம் தங்களை மறந்த நிலையில் அனை வரும் எழுந்து நின்று கரகோஷம் எழுப்பி ஆடிப்பாடி எழுச்சியை மேலும் மெருகூட்டினர்.

தொடர் நிகழ்வாக அறிமுகம் செய்யப்பட்டு, உணவு இடை வேளையைத் தொடர்ந்து மன்னார் மாவட்டப் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

இரண்டாம் நாள் நிகழ்வுகளும் பொதுச் சுடரேற்றல், தேசியக் கொடியேற்றல் போன்ற நிகழ்வுகளுடனும் விளையாட்டுக்களுடனும் ஆரம்ப மாகின, கிளிநொச்சி, யாழ் மாவட்டப் பிரச்சினைகள் காலை



யமர்விலும், திருமலை, மட்டு. அம்பாறை பிரச்சினைகள் மாலையமர்விலும் நடைபெற்றன. குழுக்களிடையே அறிக்கைகள் வாசிக்கப்பட்டு அலசி ஆராயப்பட்டது. அதுவும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வந்தவர்கள் தாங்கள் அனுபவித்த மற்றும் அங்கு நிலவுகின்ற துன்பங்கள், வடுக்கள் பற்றி கண்ணீர் சிந்திக்கூறினர்.

மூன்றாம் நாள் நிகழ்வுகளும் வழமையான தொடர் நிகழ்வுகளுடன் ஆரம்பமாகின. தொடர்ந்து வவுனியா, முல்லைத்தீவு பிரச்சினைகளும் முன் வைக்கப்பட்டு ஆராயப்பட்டன. இவற்றில் பல்வேறு பிரச்சினைகள் கண்டு கொள்ளப்பட்ட போதும் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தொகுத்தவைகள் சில.

* கலாச்சாரப் பிரச்சினைகள்- மூடநம்பிக்கைகள், பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படுதல், சீதனப் பிரச்சினைகள், கசிப்புக் காய்ச்சுதல் இதற்கு பாடசாலை போகும் பிள்ளைகள், பெண்களை ஈடுபடுத்துதல்

*திருமணமாகியும் நீண்டகாலம் கணவனைப் பிரிந்திருத்தல்.

* யுத்தத்தால் பாதிப்புற்று பொருளாதாரப் பிரச்சினையை எதிர் கொள்ளல், பெண்களுக்கு ஊதியம் குறைத்து வழங்கல், வயது வேறுபாடின்றி பிச்சை எடுத்தல், உளரீதியில் தாக்கமடைந்திருத்தல், இராணுவத்தால் பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கப்பட்ட பெண்களை சமூகம் ஏற்காது புறக்கணித்தல், கல்வியைத் தொடர முடியாமை போன்ற பல்வேறு பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இப்பிரச்சினைகளுக்கான சில தீர்வுகளும் எடுக்கப்பட்டு பெண்கள் மேம்பாட்டு நிறுவன மூடாக செயற்படுத்துதல் எனவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

*சிறுகைத்தொழிலை ஊக்குவித்தல், கல்வி விழிப்புணர்வை ஏற்படுத்துதல், ஊக்குவிப்பு உதவியை ஏற்படுத்தி பொருளாதாரத்தை விரிவடையச் செய்தல்.

* மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் இருந்து இராணுவத்தினரை அகற்ற வழி செய்தல்.

* சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துதல்.

* பெண்குழந்தைத் தொழிலாளர்களை தொழிலில் ஈடுபடுவதைத் தடுத்தல்.

* பாட விதானங்களில் மாற்றங்களை கொண்டு வர ஆவன செய்தல், முன்பள்ளிக் கொள்கைகளை மாற்றியமைத்து ஆண், பெண் வேறுபாடின்றி அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்துதல்.

* அரசியல், சட்டம், இலத்திரனியல்,பொறியியல், போன்றவற்றில் பயிற்சியும் விழிப்புணர்வும் அளித்தல்.

* தற்காப்புக் கலையைச் செய்யத் தூண்டி பெண்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

* சமூக ஆய்வுகளை ஏற்படுத்தி தொண்டர்களைப் பயிற்றுவித்து, நிரந்தரமாக்கி ஆய்வு முடிவுகளைப் பெற்று ஆவணப்படுத்தி அந்த அமைப்புகளூடாக நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மகளிர் மாநாடானது 1990இல் யாழ்ப்பாணத்திலும் 1992இல் கிளிநொச்சியிலும் ஒரு தசாப்தத்தைக் கடந்து புதுப்பொலிவு பெற்றுக் கொண்டிருக்கும் கிளிநொச்சியில் மீண்டும் 2002ம் ஆண்டில் அனை த்து மாவட்ட பெண்களும் வயது வேறுபாட்டினையும் பாராது கலந்து கொண்டு தங்கள் பிரதேச பிரச்சினைகளுக்கான ஆய்வுகளைச் செய்தனர்.

**பொ.நந்தினி**

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வந்தவர்கள் இங்கு வந்ததும் சுதந்திரக்காற்றை சுவாசிக்கிறோம் என்று பெருமைப்படக் கூறினர். மாநாட்டுக்கு வந்தவர்கள் எழுச்சிப் பாடல்களைக் கேட்டு தங்களை மறந்த நிலையில் ஆடிப்பாடி சந்தோஷ மிகுதியால் குதித்ததைக் காணப் பெரியதொரு சந்தோஷமாகவே இருந்தது.

மூன்றாம் நாள் சந்தோசமாகவும், பயனுள்ளதாகவும் இருந்ததைப் போன்று அனைத்து மாவட்டங்களிலும் இவ்வாறான ஆய்வரங்குகளும் அமைவதற்கு ஏற்ற சூழலைத் தோற்றுவிக்க இராணுவம் வெளியேற வேண்டும் அல்லது வெளி யேற்றப்பட வேண்டும். எல்லா இடங்களிலும் எல்லோரும் உரிமையுடன் வாழ்வதற்கு நாமும் குரல் கொடுப்பதோடு நின்று விடாது செயலில் இறங்கி பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வுகண்டு கொள்ள ஒட்டுமொத்தப் பெண்களையும் விழிப்படைய வைக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இந்நிகழ்வின் இறுதி நிகழ்வாக அரசியலதுறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் விசேட பிரதிநிதியாக கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்.

''ஆக்கிரமிப்பாளர்கள் தங்களுடைய நாசகார நடவடிக்கைகளை மேற்கொண்ட போது எமது பெண்கள் தான் அதற்கு கூடுதலாக இலக்கானார்கள் இதற்கு எதிராக பெண்களையும் போராடுகின்ற ஒரு சக்தியாக மாற்றியமைக்க எங்களுடைய தலைவர் அன்றைய காலகட்டத்திலேயே தீர்க்கதரிசனத் தோடும் உறுதியோடும் நம் பிக்கையோடும் பெண்களை இந்தப் போராட்டத்தில் உள்வாங்க முனைந்தார். எங்களுடைய போராட்ட வளர்ச்சிப் படிகளிலே பெண்கள் எவ்வளவு தூரத்திற்கு வளர்ந்துள் ளார்கள் என்பதை பலரும் வியப்போடும் ஆச்சரியத்தோடும் பார்க்கின்றனர்

பெண்ணியம்,பெண்விடுதலை பற்றி ஆய்வுகள் அல்லது கருத்துக்க ளோடு நின்று விடாது முன்னேற்றகரமான செயற்பாட்டின் மூலம் இறங்க வேண்டும். அது பெண்களாகிய உங்களிடம் தான் உள்ளது. இது உங்களின் காலம். நீங்களே பலமாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

கலை நிகழ்வாக, திருமலை மாவட்ட பிரச்சினைகளும், பெண்கள் படும் அவலமும் என்ற நாடகமும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தயாரிக்கப்பட்ட 'வீரத்தாய்' என்ற நாடகமும்,யாழ். பல்கலைக் கழக மாணவியரும் அரங்க செயற்பாட்டுக் குழுவினரும் இணைந்து, திருமணம் என்பது புதுமையானது. சுதந்திரமாக ஆணுக்கு சமனாக உயர்ந்த வாழ்க்கைக்குப் போவதையே ஒருஇலட்சியமாக கொள்கின்ற ஆற்றுகையை வெளிப்படுத்திய நாடகமும், கிளிமாவட்டத்தினரின் ''எங்கள் வாழ்வும் எங்கள் மண்ணும்" என்ற கவிய ரங்கமும் முல்லை மாவட்டத்தினரின் பரதநாட்டியமும் மற்றும் கலை நிகழ்வுகளுடனும் மாநாடு நிறைவுபெற்றது. □

இயற்கை ஒரு பணியை ஆற்ற வேண்டியுள்ளபோது அதைச் செய்து முடிக்க ஒரு மேதையைப் படைக்கிறது- -ரால்ப் எமர்சன்

## 2ம் லெப். மாலதி நினைவு நாள்
# தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் 10.10.2002

2ம் லெப். மாலதி நினைவு நாளான, தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வுகள் வன்னிப் பெருநிலப்பரப்பு திறந்த வெளியரங்கில் நடைபெறக் காத்திருக்கின்றது...

**தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிகள் ஒருங்கிணைந்து நடாத்தும்**

# மாபெரும் எழுச்சி நிகழ்வு



- மகளிர் படையணியின் இராணுவ அணிவகுப்புகள்
- மகளிர் படையணியின் போராட்ட வரலாற்றைச் சித்தரிக்கும் ஊர்திகள் பவனி
- உயிர்க் கவிதையின் உயர் வேதம்.... (நாடகம்)
- உண்மைச் சம்பவங்களைத் தாங்கிய உயிரை உருக்கிடும் கலை நிகழ்வுகள்
- விசேட படையணியின் வீர தீரச் செயல்கள்
- தமிழீழ இசைக்குழுவின் இசைவார்ப்புகள்
- அமெரிக்காவின் 'கிறீன் பரே' அணியினரிடம் பயிற்சிகள் சிறீலங்காவின் One Commondo, Two Commondo அணிகள் மகளிர் படையணியின் புதிய போர்த் ராபாய யுத்தியினால் முறியடிக்கப்பட்ட குளச் சமரின்' மாதிரி வடிவ நிகழ்வு.
- இன்னும் பல நிகழ்வுகளும் இடம்பெறக் காத்திருக்கின்றன.......

வீழ்ந்தது விதை
எழுந்தது பயிர்
கடந்தது நெருப்பு
உயர்ந்தது கரம்.

பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும்... கேட்போரை மெய்சிலிர்க்க வைக்கும்...
நேற்று எழுந்த எரிமலையை அணைத்தவர்கள். இன்று சமாதானப் பாதைக்கு வழி அமைத்தவர்கள்.
இந்த அக்கினிப் பூக்களை...! நீங்களே வியந்து நிற்க, உங்கள் பிள்ளைகள் வெற்றியோடு உங்களை நோக்கி...
..............................காணத்தவறாதீர்கள்..............................

**மாலதி படையணியின் உருவாக்கத்தில்...**
களத்தில் நிற்கும் போராளிகளின் குரலாக வெளிவருகின்றது...



## வெஞ்சமரின் வரிகள்
பாடல் ஒலிப்பேழை

அன்பரசி படையணி, திலகா படையணி உட்பட ஆயிரக் கணக்கான பெண் போராளிகள் பங்குகொண்டு நடாத்தும் மாபெரும் எழுச்சி நிகழ்வினைக் கண்டு மகிழ அனைத்து மக்களையும் வருக.. வருக.. என அன்போடு அழைக்கின்றோம்.

காலம் - 10. 10. 2002
நேரம் - மாலை 3.00 மணி (தமிழீழ நேரப்படி)
இடம் - கிளிநொச்சி மத்திய விளையாட்டுத் திடல்.

நன்றி.
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

மகளிர் படையணி,
தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழம்.

---

## கிளி / முல்லை மாவட்ட விவசாயிகளுக்கு
## பவர்ஸ் கொம்பனியின் கலப்படமற்ற வீதம் செறிந்த

✳ வெங்காயப்பசளை ✳ V1 ✳ TDM ✳ UREA ✳ POTASH ✳ AMMONIA
✳ கிருமிநாசினிகள் ✳ விதைவகைகள் ✳ தெளிகருவிகள்

வகைகளை தேவைக்கேற்ப மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்



# லலிதா பல்வகை வாணிப நிலையம்



மற்றும் எவெரெடி பற்றரிகள், கூரைத்தகடு (அஸ்பஸ்ரோசீற்),
சீமெந்து(மரெய்ன்), சுவிஸ்தயாரிப்பு ஆகியவற்றின் ஏக விநியோகஸ்தர்.

(சி 7412)

**பரவிப் பாஞ்சான் (சிவசுந்தரம் வீதி), கிளிநொச்சி.**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 04ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.